இன்றைய உதயனுடன்
சங்கக்கார
மலிங்க
டோனி
மக்ஸ்வெல்
வர்ணப் படங்கள்!

# உதயன்

வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 24 °C
தெளிவு

சுடர் 30 | கதிர் 107 | வள்ளுவர் ஆண்டு 2046 | மாசி 29, வெள்ளிக்கிழமை 13.03.2015

# மோடி வருகை பாதுகாப்பு தீவிரம்

## 1989க்கு பின்னர் குடாநாட்டு வானில் பலமுறை வட்டமிட்டு இந்திய ஹெலிகள் நோட்டம்; வீதியோரங்களில் வாகனம் நிறுத்தவும் தடை



யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் தரித்து நிற்கும் இந்திய விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகள்.

யாழ்ப்பாணம், மார்ச் 13
இந்திய விமானப் படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்திகள் நேற்றுமாலை யாழ்.நகரைச் சுற்றி நோட்டம் விட்டன. இந்தியப் பிரதமரின் பாதுகாப்புக்காக அவர் செல்லவுள்ள இடங்களில் நேற்று மாலையிலிருந்தே பெரும் எண்ணிக்கையில் புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டனர்.
இந்தியப் பிரதமர் ஒருவர் முதன் முதலாக நாளை யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளார். அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பெரும் எடுப்பில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
நேற்றுமாலை யாழ்.நகர் வான் பரப்பில் மூன்று தடவைகள் வரையில் இந்திய விமானப் படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்திகள் நோட்டம் விட்டன. அதன் பின்னர் யாழ். மத்திய கல்லூரி விளையாட்டரங்கில் அவை தரையிறங்கின. இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் யாவும் இந்தியப் படையினரே மேற்கொண்டுள்ளனர். பக்.24

## இருநாட்டு மீனவர் பேச்சு 19ஆம் திகதி

யாழ்ப்பாணம்,மார்ச் 13
இலங்கை– இந்திய மீனவர்களுக்கு இடையிலான பேச்சை எதிர்வரும் 19 ஆம் திகதி சென்னையில் நடத்துவதற்கு கடற்றொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது. எனினும் தமிழகத்தில் இருந்து பேச்சில் பங்குபற்றுவது தொடர்பான உத்தியோகபூர்வமான தகவல்கள் இன்னும் வரவில்லை என்று கடற்றொழில் அமைச்சுத் பக்.24

## மூன்று மணி நேரம் யாழில் நிற்பார் மோடி

யாழ்ப்பாணம், மார்ச் 13
யாழ்ப்பாணத்திற்கு நாளை சனிக்கிழமை வருகை தரும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, மூன்று மணித்தியாலங்கள் மாத்திரமே இங்கு தங்கி நிற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் வைத்து, வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள், அவைத்தலைவர் ஆகியோரை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பிரத்தியேகமாகச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.
இலங்கைக்கு இருநாள் பயணத்தை மேற்கொண்டு கொழும்புக்கு இன்றைய தினம், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வருகை தரவுள்ளார். பக்.24

## மோடியின் வருகையால் மீனவருக்கு விடுதலை

யாழ்ப்பாணம், மார்ச் 13
இந்தியப் பிரதமர் மோடியின் இலங்கைப் பயணத்தை முன்னிட்டு இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 86 பேரும் இன்று விடுவிக்கப்படவுள்ளனர்.
கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரையும் நல்லிணக்க அடிப்படையில் விடுவிக்குமாறு ஜனாதிபதி நேற்று முன்தினம் இரவு உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில் கடற்றொழில் அமைச்சால் அந்தந்த நீரியல் வளத் திணைக்களத்துக்கு விடுகைக்கான அறிவுறுத்தல் பத்திரம் நேற்று மாலை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
கடந்த 26 ஆம் திகதி பருத்தித்துறை மற்றும் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் பக்.24

## தமிழ்க் கூட்டமைப்புடன் மோடி இன்று மாலை சந்தித்துப் பேச்சு

யாழ்ப்பாணம், மார்ச் 13
28 ஆண்டுகளின் பின்னர் இன்று முதன் முறையாக இலங்கைக்கு வரும் இந்தியப் பிரதமரான நரேந்திர மோடி, இன்று மாலையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சு நடத்தவுள்ளார். ஜனாதிபதி மைத்திரி பால, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.
1987 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தியப் பிரதமர் ஒருவர் இலங்கைக்கு வருவது இதுவே முதல் முறையாகும். மொரிசியஸிலிருந்து புறப்படும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இன்று அதிகாலை 5.30 மணிக்கு கட்டுநாயக்கா பக்.24

## உள்ளகப் பொறிமுறையில் வெளியாருக்கு இடமில்லை

ஜனாதிபதி மைத்திரி திட்டவட்டம்



லண்டன், மார்ச் 13
இலங்கையின் உள்ளக விசாரணைப் பொறிமுறை ஒரு மாத காலத்தினுள் ஆரம்பிக்கப்படும் . விசாரணை அறிக்கை எதிர்வரும் ஜுலை மாதம் வெளியிடப்படும். – இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
"இந்த விசாரணையில் வெளியார் எவரும் தலையிட முடியாது."– எனவும் அவர் பக்.24

## மோடி வரும் தினத்தில் யாழில் மௌனப் போர்


மக்களின் பிரச்சினையைத் தீர்க்க இலங்கைக்கு அழுத்தம் கொடுக்குமாறு

யாழ்ப்பாணம், மார்ச் 13
மக்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகளைத் தீர்க்க இலங்கை அரசுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி யாழ்ப்பாணம் வரும் சமயம் யாழ்ப்பாணத்தில் மாபெரும் ஊர்வலத்துடன் கூடிய மௌனப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.
நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு, யாழ்.பிரதான பஸ் நிலையத்தில் இருந்து ஊர்வலமாக, யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்துக்குச் சென்று பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து மனு கையளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
இலங்கைக்கு வருகை தரும் பிரதமர் நரேந்திர மோடி நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு பக்.24

துணிவு படைத்த தலைவரே இன்றைய தேவை
பக்கம் 17

வெல்லுங்கள்
13 லட்சம்
விவரங்கள் உள்ளே!!

## "13க்குப் பதிலீடான அதிகாரமிக்க முறைமை வேண்டும்"



யாழ்ப்பாணம், மார்ச் 13
"ஒற்றையாட்சி அரசியலமைப்பில் அதிகாரப் பகிர்வு சாத்தியமற்றது. 13 ஆவது திருத்த சட்டத்துக்குப் பதிலீடாக, கூடுதலான அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்பட இதுவே சரியான தருணம்."– இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.
"இதனை இலங்கை வரும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் வலியுறுத்துவேன்."– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வடக்குப் பயணம் குறித்து, 'தஹிந்து' ஊடகத்துக்கு மின்னஞ்சல் ஊடாக வழங்கிய நேர்காணலிலேயே அவர் பக்.24

## கோத்தாவைக் கைது செய்ய நேற்று ஏகமனதாக தீர்மானம்

மைத்திரி வந்தே இறுதி முடிவெடுப்பார்

கொழும்பு, மார்ச் 13
முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை, கைது செய்வது தொடர்பில் தேசிய நிறைவேற்று அதிகார சபைக் கூட்டத்தில் நேற்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆயினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பிய பின்னரே இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படும் பக்.24

## எண்ணெய் மாசை கண்டறிய கொண்டுவரப்பட்டது கருவி

புலம்பெயர் தமிழர்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13
நிலத்தடி நீரில் எண்ணெய் மாசு கலந்துள்ளதா என் பதை அறியக்கூடிய 20 இலட்சம் ரூபா பெறுமதி மிக்க நவீன பக்.24

## மீள் எழுச்சி பணியாளருக்கு நியமனம் வழங்க பரிந்துரை

யாழ்ப்பாணம், மார்ச் 13

மீள் எழுச்சித் திட்டப் பணியாளர்களுக்கு பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி நிரந்தர நியமனம் வழங்கப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. பொருளாதார அமைச்சுச் செயலாளர், கொள்கை திட்டமிடல் பொருளாதார அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு அது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது – இவ்வாறு மீள் எழுச்சித் திட்ட பணிப்பாளர் கே.லியனகே தெரிவித்துள்ளார்.

குறித்த பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அதனை வழங்குமாறும் தவறின் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் பணியாளர்கள் தெரிவித்த செய்தி கடந்த 6 ஆம் திகதி பிரசுரமாகியிருந்தது. அது தொடர்பில் விளக்கமளித்துள்ள அவர்:

இந்த ஒப்பந்தம் ஆனது இலங்கை அரசு மற்றும் உலக வங்கிக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2000 ஆண்டு 3 கட்டங்களாக ஆரம்பிக்கப்பட்டது. 3 ஆவது கட்டம் கடந்த டிசெம்பர் மாதத்துடன் நிறைவடைந்து விட்டது. திட்டம் நிறைவுறுத்தப்பட்ட திகதியிலிருந்து 3 மாதங்களுக்கு பயன்பாட்டிலிருந்த சொத்துக்கள், ஆவணங்கள், என்பனவற்றை உரிய திணைக்களங்களுக்குக் கையளிப்பதற்காகவே மிகக் குறைந்த அலுவலர்களுடன் இயங்கி வருகிறது. இந்த மாதம் 31 ஆம் திகதியுடன் அது நிறைவடைகிறது.

அவர்களது நியமனம் தொடர்பில் உரியவர்களுக்கு அறிவிக்கப்பட்டு விட்டது. நான் தலைமறைவாக இருப்பதாகக் கூறப்பட்டது தவறானது. தற்போதும் அலுவலகத்தில்தான் இருக்கிறேன்– என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ற–4)

## முறைப்பாடு செய்தமை மகிழ்ச்சி தருக்கின்றது

### ஹிஸ்புல்லாஹ் கூறுகின்றார்

கொழும்பு, மார்ச், 13

நல்லாட்சிக்கான தேசிய முன்னணி எனக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் செய்த முறைப்பாட்டை நான் வரவேற்கின்றேன். அதற்காக அவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். – இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

நல்லாட்சிக்கான தேசிய முன்னணி புதன்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ்வுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் செய்த முறைப்பாடு தொடர்பாக வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கடந்த 25 வருடங்களாக ஊழல் இடம்பெறுவதாக கூறிக்கொண்டே இருக்கின்றனர். அது தொடர்பிலான ஆவணங்களை தருமாறு நான் கோரிக்கையும் விடுத்திருந்தேன். இந்த நிலையில் அவர்கள் தங்களிடம் இருந்த ஆவணங்களை ஒப்படைத்ததையிட்டு நான் மிகவும் சந்தோசமடைகின்றேன். மிக விரைவாக நான் எனது சட்டத்தரணிகள் சகிதம் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவை சந்தித்து இந்த விடயத்தை உடனடியாக துரிதப்படுத்துமாறு வேண்டவுள்ளேன்."– என்று அவர் தெரிவித்துள்ளார்.

"நான் பொதுத் தேர்தலில் போட்டியிட இருப்பதால் எதிர்வருகின்ற பொதுத் தேர்தலுக்கு முன்பு இது தொடர்பான உண்மைத் தன்மையை உடனடியாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வெளியிட வேண்டும். ஏதாவது ஒரு சிறிய சதமாவது இலஞ்ச ஊழல் இருக்குமாக இருந்தால் அரசியலில் இருந்து நான் முற்று முழுதாக விலகுவேன். நான் இந்த விடயத்தில் மிகத் தெளிவாக இருக்கின்றேன்"– என்றும் அவர் தெரிவித்தார். (ற–10)

## இளைஞனின் போதையால் போக்குவரத்தில் நெரிசல்

### உடுவிலில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச்13

உடுவில் சந்திப் பகுதியில் இரவு எட்டு மணியளவில் வீதியோரம் மயங்கிக் கிடந்த இளைஞரால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் இராணுவத்தினரின் தலையீட்டால் உண்மை தெரிய வந்ததும் மக்கள் திட்டிக் கொண்டு கலைந்து சென்றனர். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது.

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த மக்கள் வீதியோரம் 20 வயதுடைய இளைஞன் ஒருவன் மயங்கி வீழ்ந்து கிடந்ததை அவதானித்துள்ளனர். அதையடுத்து அங்கு மக்கள் குழுமினர். இளைஞன் மூச்சுப் பேச்சில்லாது விழுந்து கிடந்தான்.

ஒரு சிலர் குறித்த இளைஞனின் அருகில் சென்று உதவ முற்பட்ட போதும் அவ்விடத்திலிருந்த வேறு சிலர் குறித்த இளைஞன் என்ன காரணத்தினால் விழுந்து கிடக்கிறான். விபத்தில் சிக்கினானா? உயிர் உள்ளதா போன்ற ஆய்வுகளில் ஈடுபட முனைந்தனர். இதனால் சிறிய சனக் கூட்டமொன்று இளைஞனை சுற்றி அவ்விடத்தில் கூடியது. அதனால் நெரிசல் ஏற்பட்டு அவ்விடத்தில் போக்குவரத்தும் சிறிது நேரம் தடைப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இராணுவத்தினர் சிலர் அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தனர். பொதுமக்கள் இராணுவ வீரர்களுக்கு விடயத்தை கூறவே அவர்கள் குறித்த இளைஞனின் அருகில் சென்று பரிசோதித்து பார்த்தனர். இராணுவ வீரர்கள் இளைஞனின் உடலுக்கு அருகில் சென்று பரிசோதிக்கும் போதுதான் அவனுடைய உடலிருந்து சாராய வாசனை வந்ததை அவதானிக்க முடிந்தது. குறித்த இளைஞன் அளவுக் கதிகமாய் போதையை ஏற்றியதாலேயே பாதையில் விழுந்து கிடந்தான். அதை அறிந்த மக்கள் அவனை திட்டியவாறே கலைந்து சென்றனர்.

பின்னர் இராணுவத்தினர் குறித்த இளைஞனின் காற்சட்டைப் பையிலிருந்து செல்லிடத் தொலைபேசியை எடுத்து அவரை அறிந்தவர்களை அழைத்து அவனை அங்கிருந்து அனுப்பி வைத்தனர்.

யாழ்.மாவட்டத்தில் தற்போது இளைஞர்களிடையே போதைப் பொருள்களினதும் மதுபானங்களினதும் பாவனை அதிகரித்து வருகின்றது. (ற–103)

## ஜன. 8 வரை இலங்கையில் சர்வாதிகாரமே நடந்தது

### அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரி நீல் குரோமஸ் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 13

இலங்கையில் கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி வரையில் நடைபெற்றது சர்வாதிகார ஆட்சியே என்று விமர்சித்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரி நீல் குரோமஸ், புதிய அரசுக்கு சகல வகைகளிலும் உதவுவதற்கு தயாராக இருப்பதாகவும் தெரிவித் துள்ளார்.

இந்தியாவின் கொல்கத்தா நகரில், கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த கருத்தரங்கில் உரையாற்றிய போதே, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிராந்திய விவகாரங்களுக்கான பிரதிப் பணிப்பாளர் நீல் குரோமஸ், இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

"கடந்த ஜனவரி மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தலில், இலங்கையில் நீண்டகாலமாக இருந்து வந்த சர்வாதிகார ஆட்சி தூக்கியெறியப்பட்டு புதிய அரசு பதவியேற்றதையடுத்து அங்கு, சாதகமான மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

ஜனநாயகத்தை மீளமைக்கவும், இனப் பதற்றத்தின் காயங்களை ஆற்றுவதற்கும், இலங்கையின் புதிய அரசுக்கு தன்னாலான அனைத்து உதவிகளையும் அமெரிக்கா வழங்கும்"– என்று அவர் தெரிவித்துள்ளார். (ற–5)

## போக்குவரத்து சபையை திணைக்களமாக்குங்கள்

### மைத்திரியிடம் அகில இலங்கை போக்குவரத்து ஊழியர்கள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 13

ஆட்சிக்கு வரும் அரசுகள் அனைத்துமே பதவி உயர்வுகள், நியமனங்கள், இடமாற்றங்களை முறையற்ற விதங்களில் நடத்திச் சென்று இலங்கைப் போக்குவரத்துச் சபையை ஆட்சியாளர்களின் கிளையொன்றாகவே ஆக்கி கீழ் நிலைக்குத் தள்ளி விடுகின்றன. அதனால் இலங்கை போக்குவரத்துச் சபையை திணைக்களமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்– இவ்வாறு அகில இலங்கை போக்குவரத்து ஊழியர்கள் சங்கம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

"ஆட்சிக்கு வரும் அரச தரப்பின் உறுப்புரிமையை பெற்றிருப்பதே இலங்கை போக்குவரத்துச் சபையினுள் பதவி உயர்வைப் பெறுவதற்கான ஒரே தகுதியாகியிருக்கின்றது. இந்த நிலைப்பாடானது 1977ஆம் ஆண்டில் இருந்தே ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு அரசிலும் காணப்படுகின்றது. விசேடமாக அரசியல்வாதிகள் இலங்கை போக்குவரத்துச் சபையை பலவந்தமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.– என்று அவர்கள் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற–22)

## எய்ட்ஸ் தொற்றிய பெண்கள் 5 மடங்காக அதிகரிப்பு

### எய்ட்ஸ் ஒழிப்புத் திட்டத்தின் பணிப்பாளர் சிசிர லியனகே

கொழும்பு, மார்ச் 13

இலங்கையில் பாலியல் தொழிலில் ஈடுபட்டு வரும் பெண்களிடையே எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகியுள்ளோரின் எண்ணிக்கையானது 2005 ஆம் ஆண்டை விடவும் 2014 ஆம் ஆண்டானபோது ஐந்து மடங்குகளால் அதிகரித்துள்ளது என்று பாலியல் தொடர்பான நோய்கள் மற்றும் எய்ட்ஸ் ஒழிப்பு தேசிய செயற்றிட்டத்தின் பணிப்பாளரான வைத்தியர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

2005 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த ஆய்வொன்றின் போது பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆயிரம் பெண்களிடையே இருவர் மாத்திரமே எச்.ஐ.வி. தொற்றுக்க உள்ளாகியிருந்தனர். ஆயினும் 2014ஆம் ஆண்டில் பத்துப்பெண்களுக்கு எச்.ஐ.வி.தொற்று இருந்தமை தெரியவந்துள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகியுள்ள மொத்தத் தொகையினர் 2 ஆயிரத்து 074 பேர் என்பதோடு 2014 ஆம் ஆண்டில் 229 போர் புதிதாக இனங்காணப்பட்டிருந்தனர் என்று தெரிவித்துள்ள வைத்தியர் சிசிர லியனகே அவர்களுள் நூற்றுக்கு 60 வீதமானோர் பெண்களாகவும் நூற்றுக்கு 40 வீதமானோ ஆண்களாகவும் காணப்படுகின்றனர். அத்துடன் தாயின் வயிற்றுக்குள்ளேயே எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகியிருக்கும் 71 குழந்தைகள் உள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

பாலியல் தொழிலில் ஈடுட்டுவரும் 10000 – 15000 வரையிலான பெண்கள் நாடு முழுவதிலும் இருப்பது இந்த ஆய்வின் போது உறுதிப் படுத்தப்பட்டிருந்ததாக வைத்தியர் சிசிர லியனகே தெரிவித்தார். இவ்விதம் பாலியல் தொழிலில் ஈடுபட்டு வரும் பெண்களில் நூற்றுக்கு 75 வீதமானோர் கொழும்பு மாவட்டத்திலே வசிக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ற–22)

## காணாமற்போன இளைஞன் சடலமாக மீட்கப்பட்டார்

மட்டக்களப்பு, மார்ச் 13

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சித்தாண்டி ஈரலக்குளத்தை சேர்ந்த நல்லதம்பி.விஜிகரன் (வயது 20) சந்தனமடு ஆற்றுப் பகுதியில் அமைந்துள்ள இடகாலி ஆற்றில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

விவசாய நடவடிக்கைக்காக தனது குடும்பத்தவர்களுடன் ஈரலக்குளம் கிராமத்தில் தங்கியிருந்தபோது கடந்த மூன்று நாள்களுக்கு முன்னர் குறித்த இளைஞர் காணாமல் போயிருந்தார்.

இந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை இடகாலி ஆற்றில் சடலமொன்று மிதப்பதாக தகவல் கிடைத்ததை தொடர்ந்து அங்கு சென்று பார்வையிட்ட போது, அது தனது மகன் என்பதை அடையாளம் கண்டதாக பெற்றோர் தெரிவித்தனர். இது தொடர்பான விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ற)

## துப்பாக்கி மீட்பு

காத்தான்குடி, மார்ச் 13

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஐந்தாம் குறிச்சியில் துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது. கட்டடம் ஒன்றுக்கு அத்திபாரம் வெட்டும் போதே குறித்த துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குழாய் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரி–81 ரக துப்பாக்கியே மீட்கப்பட்டுள்ளது என்று கத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற–10)

## மத்திய மாகாண முதல்வரை மாற்றக்கோரி சத்தியக் கடதாசி

கொழும்பு, மார்ச் 13

மத்திய மாகாண முதலமைச்சராக திலின பண்டாரவை நியமிக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

மாகாண சபையின் 30 உறுப்பினர்கள் மத்திய மாகாண ஆளுனர் சுரங்கனி எல்லாவலவுக்குச் சத்தியக் கடதாசியொன்றை அனுப்பியுள்ளனர். இவர்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் 15 உறுப்பினர்களும் சத்தியக் கடதாசி வழங்கியுள்ளனர் என மாகாண சபை உறுப்பினர் திலின பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

சத்தியக் கடதாசிகளை கையளிக்கும் போது மத்திய மாகாண எதிர்க் கட்சி தலைவர் வசந்த அலுவிஹாரேயும் பிரசன்னமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மத்திய மாகாண சபையில் 58 உறுப்பினர்கள் உள்ளதுடன், மாகாண முதலமைச்சராக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் உறுப்பினர் சரத் ஏக்கநாயக்க செயற்படுகின்றார்.

இதேவேளை இவ்விடயம் தொடர்பில் தீவிரமாக ஆராய்ந்து தீர்மானமொன்றை மேற்கொள்வதாக மத்திய மாகாண ஆளுநர் சுரங்கனி எல்லாவெல தெரிவித்துள்ளார். (த)

BUSINESS MANAGEMENT | 0777 692318
BCAS CAMPUS
JAFFNA





13 லட்சங்கள் wow ! கிரிக்கெட் கொண்டாட்டம்

கூப்பன்களை இன்றே நிரப்பி அனுப்புங்கள், பணத்தை அள்ளுங்கள்



# மண்டியிட்டு கேட்டுக்கொள்கின்றேன் ஓய்வுபெறவேண்டாம்

## மத்தியூஸ் உருக்கமான வேண்டுகோள்



உலகக்கிண்ண தொடருக்குப் பிறகு சங்ககாரா ஓய்வு பெறக்கூடாது என்று அவரிடம் தான் மண்டியிட்டுக் கேட்டுக் கொள்வதாக இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

நடப்பு உலகக்கிண்ண தொடர் முடிந்த பின்னர் சங்ககாரா ஒருநாள் ஆட்டங்களில் இருந்து ஓய்வை அறிவித்துள்ளார். ஏற்கெனவே ஏகப்பட்ட சாதனைகளுக்கு சொந்தம் கொண்டாடும் சங்கா நடப்பு உலகக்கிண்ண தொடரிலும் அடித்து நொருக்கி ஒருநாள் ஆட்டத்தில் தொடர்ந்து நான்கு சதங்களை விளாசிய முதல் வீரர், உலகக்கிண்ண தொடரில் அதிக ஆட்டமிழப்புக்கள் ஏற்படக்காரணமான இலக்குக்காப்பாளர், ஒருநாள் ஆட்டங்களில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற இரண்டாவது வீரர் போன்ற சாதனைகளைப் புதிதாக தனது பெயரில் பதிவு செய்துள்ளதுடன் நடப்பு உலகக்கிண்ண தொடரில் 496 ஓட்டங்களுடன் முதல் இடத்திலும் உள்ளார்.

இவ்வாறு தொடர்ந்து ஸ்திமான திறனுடன் விளையாடி வரும் சங்ககாரா உலகக்கிண்ண தொடருடன் விடைபெறுவது இலங்கை அணித்தலைவர் மத்தியூஸை உணர்வு ரீதியாக பாதித்துள்ளது. இதனையடுத்து மத்தியூஸ் 'நான் அவரிடம் மண்டியிட்டு கேட்டுக் கொள்கிறேன் ஓய்வு பெற வேண்டாம் என்று. ஆனாலும் அவரது ஆசையையும், முடிவையும் பெரிதும் மதிக்கிறேன். நாட்டுக்காக அவர் ஒவ்வொரு முறையும் சிறப்பாக ஆடியதற்கு அவருக்கு நன்றிக் கடன் பட்டுள்ளோம்.' என்றார்.

இது குறித்து சங்கா தெரிவிக்கையில் 'எனது முடிவில் மாற்றமில்லை. ஓய்வு பெறுவது என்பது ஒருவரது திறன் தொடர்பான விடயமல்ல. சரியான உணர்வு மற்றும் கால நேரமே ஓய்வை தீர்மானிக்கும். நாம் விளையாட முடியுமா அல்லது இல்லையா என்பது பற்றியது அல்ல ஓய்வு. நான் இப்பொழுது விடைபெறுவது சரியென்று கருதுகின்றேன் எனவே விடைபெறுகின்றேன்' என்றார். (ரி)



## சிக்சரில் வில்லியர்ஸ் சாதனை

தென்னாபிரிக்கா அணியின் தலைவரும், நம்பிக்கை நட்சத்திரமுமான வில்லியர்ஸ் ஐக்கிய அரபு இராச்சியத்துடனான நேற்றைய ஆட்டத்தில் நான்கு சிக்சர்களை விளாசியதன் மூலம் உலகக்கிண்ண

பக்கம் 04

## மாண்புமிகு மாணவன் அஸ்வின்



அஸ்வின் கற்றுக்கொள்ள துடிக்கும் ஒரு மாணவன் என்று நியூஸிலாந்தின் முன்னாள் தலைவரும் சென்னை சூப்பர் கிங்ஸ் பயிற்சியாளருமான ஸ்டீபன்

பக்கம் 04

# அரபை துவைத்தெடுத்தது தென்னாபிரிக்கா

வில்லியர்ஸின் சகலதுறை அசத்தலும் பெக்கார்டினின் அதிரடியும் கைகொடுக்க ஐக்கிய அரபு இராச்சியத்தை 146 ஓட்டங்களால் இமாலய வெற்றிபெற்று குழு 'பி' யில் நிரந்தரமாக இரண்டாவது இடத்தை உறுதிப்படுத்தியது தென்னாபிரிக்கா. ஐ.அ.இராச்சியத்தை வீழ்த்திவிட்டால் தொடரில் தொடர்ந்து இரண்டாம் இடத்தில் நீடிக்கலாம் என்ற வியூகத்தில் களமிறங்கியது தென்னாபிரிக்கா. ஒரு ஆட்டத்திலும் வென்றதில்லை. குறைந்த பட்சம் ஒரு ஆட்டத்திலாவது வெல்லவேண்டும் என்ற பலிக்காத பகல்கனவுடன் களமிறங்கியது ஐ.அ.இராச்சியம். வில்லியர்சின் வேடிக்கைகள் தொடரப்படலாம் என்ற எதிர்பார்ப்பு பரவலானது.



நாணயச்சுழற்சியில் வெற்றி. ஆனால் தென் னாபிரிக்காவை முதலில் துடுப்பெடுத்தாட பணித்தது அரபு. அரபு இராச்சியத்தை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். 50 பந்துப்பரிமாற்றங்களும் தாண்டவம் நடக்கப்போகின்றது என்ற குதூகலிப்பில் துள்ளிக்குதித்தனர் தென்னாபிரிக்கா ரசிகர்கள். களத் தில் ஹொாக் மற்றும் அம்லா. வழக்கத்துக்கு மாறாக ஹொாக் களத்தில் நிற்கஅம்லாவிடை பெற்றார். தொடர்ந்தும் நிலைக்க முடியவில்லை ஹொாக்கால் 26 ஓட்டங்களுடன் பவிலியனுக்குச் சென்றார். இந்த உலக் கிண்ண தொடரில் அவர் பெற்ற அதிகூடிய ஓட்டம் இதுதான். களத்தில் றொஸ் சொவ் மற்றும் வில்லியர்ஸ். ஆரம்ப வீரர்கள் சற்று விரை வாக வெளியேறியதால் நிதானத் துக்கு மேல் நிதானம். அடித்து நொருக்குவார் என்று எதிர்பார்க் கப்பட்ட வில்லியர்ஸ் நிதானிப்பது வியப்பில் ஆழ்த்தியது. 43 ஓட்டங்களுடன் றொஸ்சொவ் விடைபெற எல்லைக்கோட்டின் தடுப்புச் சுவரைத் தாண்டிக்குதித்து களமிறங் கினார் மில்லர். மில்லர் சரியான சராசரியில் சென்றுகொண்டிருக்க வில்லியர்ஸ் அவ்வப்பொழுது ரசிகர்களின் எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்தார். இணைப்பாட்டம் ஐம்பதை எட்டியது அணியின் மொத்த ஓட்ட எண்ணிக்கை 150 இனை எட்டியது. 49 ஓட்டங்களுடன் அரைச்சதத்தை தவற விட்டு விடை பெற்றார் மில்லர். இணைந்து கொண்டார் டுமினி. ஏமாற்றினார் 23 ஓட்டங்களுடன். அடுத்து இணைந்தார் பெக் கார்டின். மறுமுனையில் வில்லியர்ஸ் 99 ஓட்டங்களுடன் சதத்தை தவறவிட்டு விடை பெற்றார். இறுதிக்கட்ட அதிரடியில் பெக் கார்டின் 28 பந்துகளில் அரைச் சதமும் கண்டார். முடிவில் தென்னாபிரிக்கா 341–6.'

342ஓட்டங்களைப்பெற்றால்வெற்றி.

பக்கம் 04

# என்வழி தனிவழி....

நேற்றைய ஆட்டத்தில் துடுப்பெடுத்தாடுவதற்காக களமிறங்கிய மில்லர் மைதானத்தின் எல்லைக்கோட்டுக்கு அருகே வைக்கப்பட்டிருந்த தடுப்புச்சுவரை எகிறிக்குதித்துக்களமிறங்கினார். நேற்றைய ஐ.அ.இராச்சியத்துக்கெதிரான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடியது தென்னாபிரிக்கா. றொஜ்சொவ் ஆட்டமிழந்ததும் நான்காவது இலக்குக்காகக் களமிறங்கினார் மில்லர். வீரர்களின் நடைபாதையில் பாதிவரை நடந்து வந்த மில்லர் திடீரென எல்லைக் கோட்டுக்கு அருகே வைக்கப்பட்டிருக்கும் தடுப்புச் சுவரைத் தாண்டிக்குதித்து மைதானத்தினுள் நுழைந்தார். மில்லரின் இந்த திகில் வரவை மைதானத்தினுள் வைக்கப்பட்டிருந்த பாரிய திரையில் பார்த்துக்கொண்டிருந்த ரசிகர்கள் கரகோஷம் எழுப்பி வரவேற்றனர். (ரி)



## இப்படியாயிற்று இங்கிலாந்து

உலகக்கிண்ணத் தொடரிலிருந்து வெளியேறி பலரது கிண்டலுக்கும், வசைக்கும் ஆளாகியுள்ள இங்கிலாந்து அணியை தங்கள் அணியும் வெல்லும் என்று கூறியுள்ளார் ஆப்கன் அணியின் பயிற்சியாளர் மோல்ஸ்.

நடப்பு உலகக்கிண்ண தொடரில் இங்கிலாந்து அணியை முதலில் ஆஸ்திரேலியா வதைக்குள்ளாக்க, நியூசிலாந்து துவைத்து எடுக்க, இலங்கை காயவைக்க, பின்னர் பங்களாதேஷ் பொதிசெய்து வீட்டுக்கு அனுப்பியது.

இந்நிலையில் ஆப்கன் பயிற்சியாளர் அன்டி மோல்ஸ் கூறியிருப்பதாவது:

'இந்த உலக் கிண்ணத் தொடரில் விளையாடியதன் மூலம் நிறைய அனுபவங்களைப்பெற்றுள்ளோம். ஆனால் உலகின் தலைசிறந்த அணிகளான ஆஸ்திரேலியா, நியூசிலாந்து அணிகளுக்கு எங்கள் அணி எந்த விதத்திலும் பொருத்தமுடையதல்ல. மாறாக இங்கிலாந்துக்குநாங்கள்பொருத்த

பக்கம் 04

| குழு A | வெ | தோ | ச.நி | புள்ளி |
|---|---|---|---|---|
| நியூஸிலாந்து | 5 | 0 | 0 | 10 |
| இலங்கை | 4 | 1 | 0 | 8 |
| பங்களாதேஷ் | 3 | 1 | 1 | 7 |
| ஆஸ்திரேலியா | 3 | 2 | 1 | 7 |
| இங்கிலாந்து | 1 | 3 | 0 | 2 |
| ஆப்கானிஸ்தான் | 1 | 4 | 0 | 2 |
| ஸ்கொட்லாந்து | 0 | 5 | 0 | 0 |

| குழு B | வெ | தோ | ச.நி | புள்ளி |
|---|---|---|---|---|
| இந்தியா | 5 | 0 | 0 | 10 |
| தென்னாபிரிக்கா | 4 | 2 | 0 | 8 |
| பாகிஸ்தான் | 3 | 2 | 0 | 6 |
| அயர்லாந்து | 3 | 2 | 0 | 6 |
| மே.இ.தீவுகள் | 2 | 3 | 0 | 4 |
| சிம்பாப்வே | 1 | 4 | 0 | 2 |
| ஐ.அ.இராச்சியம் | 0 | 5 | 0 | 0 |

# அரபை துவைத்தெடுத்தது தென்னாபிரிக்கா



2015 உலகக் கிண்ணம்

தென்னாபிரிக்கா எதிர் ஐ.அ. இராச்சியம்
146 ஓட்டங்களால் தெ.ஆபிரிக்கா வெற்றி

நாணயச் சுழற்சி ஐ.அ.இராச்சியம்

தென்னாபிரிக்கா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| அம்லா | C அலி B நவீட் | 12 | 15 | 03 | 0 |
| ஹொக் | C ஹைடர் B ஜவீட் | 26 | 45 | 02 | 0 |
| ரொசோவ் | C& B தகீர் | 43 | 49 | 08 | 0 |
| வில்லியர்ஸ் | C ஜவீட் B செசாட் | 99 | 82 | 06 | 04 |
| மில்லர் | B நவீட் | 49 | 46 | 02 | 0 |
| டுமினி | LBW B நவீட் | 23 | 28 | 01 | 0 |
| பெக்கார்டின் | ஆட்டமிழப்பில்லை | 64 | 31 | 05 | 03 |
| பிளெண்டர் | ஆட்டமிழப்பில்லை | 10 | 06 | 01 | 0 |
| உதிரிகள் | | | | | 15 |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| நவீட் | 10 | 63 | 03 | 0 |
| செசாட் | 08 | 59 | 01 | 0 |
| ஜவீட் | 10 | 87 | 01 | 0 |
| தகீர் | 10 | 47 | 01 | 0 |
| அல்ஹஸ்மீ | 7.2 | 45 | 0 | 0 |
| கான் | 4 | 31 | 0 | 0 |
| அன்வர் | 0.4 | 4 | 0 | 0 |

TOTAL
341/6 (50)

1 - 17 (அம்லா)
2 - 85 (ஹொக்)
3 - 96 (ரொசோவ்)
4 - 204 (மில்லர்)
5 - 257 (வில்லியர்ஸ்)
6 - 292 (டுமினி)

ஐ.அ. இராச்சியம்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| அலி | C பெக்கார்டின் B டுமினி | 21 | 36 | 03 | 0 |
| பெரிஞ்சர் | C ரொசொவ் B மோர்கல் | 05 | 21 | 01 | 0 |
| கான் | C ஹொக் B மோர்கல் | 12 | 17 | 02 | 0 |
| அன்வர் | C ரொசொவ் B தகீர் | 39 | 64 | 05 | 0 |
| படில் | ஆட்டமிழப்பில்லை | 57 | 100 | 05 | 0 |
| ஹைடர் | C ரொசோவ் B வில்லியர்ஸ் | 07 | 12 | 01 | 0 |
| ஜவீட் | C பார்னல் B வில்லியர்ஸ் | 05 | 04 | 01 | 0 |
| நவீட் | C வில்லியர்ஸ் B பிளெண்டர் | 17 | 15 | 02 | 01 |
| தகீர் | B ஸ்ரெயின் | 03 | 16 | 0 | 0 |
| செசாட் | C ஸ்ரெயின் B பிளெண்டர் | 0 | 03 | 0 | 0 |
| அல்ஹஸ்மீ | உபாதை | 0 | 0 | 0 | 0 |
| உதிரிகள் | | | | | 29 |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஸ்ரெயின் | 09 | 40 | 01 | 01 |
| பிளெண்டர் | 8.3 | 34 | 02 | 01 |
| மோர்கல் | 10 | 23 | 02 | 01 |
| டுமினி | 03 | 12 | 01 | 01 |
| பெக்கார்டின் | 04 | 11 | 0 | 01 |
| தகீர் | 10 | 40 | 01 | 0 |
| வில்லியர்ஸ் | 03 | 15 | 02 | 0 |

TOTAL
195 (47.3)

1 - 29 (பெரிஞ்சர்)
2 - 45 (அலி)
3 - 45 (கான்)
4- 108 (அன்வர்)
5- 118 (ஹைடர்)
6- 125 (ஜவீட்)
7 - 163 (நவீட்)
8 - 189 (தகீர்)
9 -195 (செசாட்)

ஆட்ட நாயகன் வில்லியர்ஸ்

நடவாத காரியம் ஆனாலும் முயற்சிசெய்வதில் ஒன்றும் தப்பில்லை என்ற கொள்கையில் களத்தில் அலி மற்றும் பெரிஞ்சர். முன்னணி வீரர்கள் எதிர்பார்த்ததைப் போல் நிலைக்க தவறினர் ஐ.அ.இராச்சியம் 45–3. களத்தில் அன்வர் மற்றும் படில். அரபின் இறுதி நம்பிக்கை வீரர்களும் இவர்கள் இருவரும்தான். நங்கூரம் போட்டு நின்றார் படில். படிலுக்கு ஏற்றவாறே மறுமுனையில் அன்வர் நிதானம். இரு வரின் இணைப்பாட்டத்தினால் அரபு 100 ஓட்டங்களை மேலதிக இலக்குகள் இழப்பின்றி எட்டியது. தொடர்ந்தும் நிலைக்க முடியவில்லை அன்வரால் 39 ஓட்டங்களுடன் விடைபெற்றார். ஐ.அ.இராச்சியம் 108–4. படில் ஒரு முனையில் நங்கூரம் போட்டிருந்தாலும் தொடர்ந்து வந்த வீரர்கள் அணியை நடுக்கடலில் தத்தளிக்க விட்டுச்சென்றனர். எவராலும் பதின்ம ஓட்டங்களை எட்ட முடியவில்லை. முடிவில் ஐக்கிய அரபு இராச்சியம் 195 ஓட்டங்களில் சுருண்டு 146 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. (ரி)

## டோனியே சிறந்த தலைவர்

நடப்பு உலகக்கிண்ண தொடரில் டோனி மற்றும் இந்திய அணியின் அசாத்திய திறைமையை பார்த்து வியந்த இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் கங்குலி என்னை விட டோனியே சிறந்த தலைவர் என்று டோனிக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.

இது தொடர்பாக கங்குலி தெரிவிக்கையில்– இந்திய அணி சகல துறைகளிலும் அபாரமாகவும் அபாயமாகவும் உள்ளது. ஐ.சி.சி. தொடர்களில் டோனியின் தலைமைத்துவம் வியப்பைத் தருகிறது. அதிலும் பிற தொடர்களை விட உலகக் கிண்ண தொடர்களில் முற்றிலுமாக டோனி மாறிவிடுகிறார். இந்தியாவின் மிகச் சிறந்த தலைவர் டோனியா, அல்லது நானா என்ற கேள்வி பரவலாக உலாவுகின்றது. என்னிடமே இந்தக் கேள்வியை கேட்டால் நான் டோனி என்றுதான் கூறுவேன். ஏனெனில் என்னால் உலகக் கிண்ணத்தை வெல்ல முடியவில்லை. அதை டோனி சாதித்தார். நடப்பு உலகக்கிண்ண தொடரிலும் சாதிப்பார் என கூற முடியும். டோனி கூல் கேப்டன் என்பதால், வெற்றி சாத்தியம் என்ற கருத்து உள்ளது. என்றார். (ரி)



### அதிகூடிய ஓட்டங்கள்

| | | |
|---|---|---|
| 496 | சங்ககாரா (இலங்கை) | 6 ஆட்டங்கள் |
| 417 | வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா) | 6 ஆட்டங்கள் |
| 395 | டில்சான் (இலங்கை) | 6 ஆட்டங்கள் |
| 333 | தவான் (இந்தியா) | 5 ஆட்டங்கள் |
| 309 | அன்வர் (ஐ.அ.இராச்சியம்) | 5 ஆட்டங்கள் |



### அதிகூடிய இலக்குகள்

| | | |
|---|---|---|
| 14 | டேவி (ஸ்கொட்லாந்து) | 5 ஆட்டங்கள் |
| 13 | போல்ட் (நியூசிலாந்து) | 5 ஆட்டங்கள் |
| 13 | மோர்கல் (தென்னாபிரிக்கா) | 6 ஆட்டங்கள் |
| 12 | சவுத்தி (நியூசிலாந்து) | 5 ஆட்டங்கள் |
| 12 | ஸ்ரார்க் (ஆஸ்திரேலியா) | 4 ஆட்டங்கள் |

## மொயீன், வோக்ஸ் அவுட்

ஆப்கன் அணிக்கு எதிரான இன்றைய லீக் ஆட்டத்தில் காயம் காரணமாக மொயீன் அலி, வோக்ஸ் ஆகியோர் இங்கிலாந்து அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

உலக்கிண்ண தொடரின் லீக் ஆட்டத்தின் தங்களது கடைசி ஆட்டத்தில் இன்று இங்கிலாந்து மற்றும் ஆப்கன் அணிகள் பலப்பரீட்சை கொள்கின்றன. இந்த ஆட்டத்தில் ஆப்கான் அணி தனது இரண்டாவது வெற்றியை பதிவுசெய்யும் நிச்சயம் இங்கிலாந்தை வீழ்த்தும் என்றவாறு ஆப்கனின் பயிற்சியாளர் சபதம் விடுத்துள்ள நிலையில் மொயீன் அலி (வலது பக்க வலி), வோக்ஸ் (இடது கால் பாதம்) இருவரும் காயத்தால் அவதிப்படுகின்றனர். இவர்களுக்கு ஸ்கான் எடுத்துப் பார்க்கப்பட்டதால், பயிற்சியில் பங்கேற்கவில்லை. இந்த நிலையில் ஆப்கன் பயிற்சியாளரின் சபதம் நடந்துவிடுமோ என்று அந்த அணியின் ரசிகர்கள் அச்சம் கொண்டுள்ளனர். இருப்பினும், முக்கியத்துவம் இல்லாத ஆட்டம் என்பதால், அடுத்து வரும் தொடர்களை கணக்கில் கொண்டு (மே.தீவுகளின்; பயணம்) இங்கிலாந்து அணியில் இருந்து இந்த இரு வீரர்களும் நீக்கப்பட்டனர். ஏனெனில் முடிவு எதுவாக இருந்தாலும் இந்த இரு அணிகளும் இன்றோடு உலகக்கிண்ணத்துக்கு விடைகொடுப்பது உறுதி. (ரி)



# சிறந்த வீரர்களே களமிறங்குவார்கள்

சிம்பாப்வே அணிக்கு எதிராக நாளை நடைபெறும் லீக் ஆட்டத்தில் இந்திய அணியில் மாற்றமிருக்காது என்று டோனி திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே காலிறுதிக்கு தகுதி பெற்றுவிட்ட நிலையில் சிம்பாப்வே அணிக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய அணியில் மாற்றங்கள் உண்டா என்ற கேள்விக்கு பதில் அளித்த டோனி, 'இதில் உடற்தகுதி நிபுணரின் தகவல்கள்தான் எங்களுக்குத் தேவை. எந்த வீரராவது காயம் காரணமாக விளையாடவே முடியாது என்ற நிலை இருந்தால் மட்டுமே அந்த வீரருக்கு ஓய்வு அளிக்கப்படும். மற்றபடி அனைவரும் உடற்தகுதியுடன் இருக்கும் போது சிறந்த 11 வீரர்களுக்கே முதலிடம். ஏனெனில் ஏற்கெனவே போட்டிகளுக்கு இடையே நிறைய இடைவெளி உள்ளது. இந்த ஓய்வு நேரம் போதுமானது. காயம் பற்றிய இடர் இல்லையெனில் தொடர்ந்து தற்போதைய பதினொரு வீரர்களையே களமிறக்குவோம். புதிதான ஒன்றை முயற்சி செய்கிறோம் என்றால் அதன் முடிவுகள் அணிக்குச் சாதகமாக அமைவது அவசியம்.

அப்போதுதான் புதிய முயற்சிகளை மேற்கொள்ள முடியும். வலைப்பயிற்சியின் போது துடுப்பாட்ட வீரர்கள் சில மாற்றங்களைச் செய்து கொள்கின்றனர். அதனை பொருத்தமானதாகவே அவர்கள் உணர்கின்றனர். எனவே வெற்றிப்பாதையில் தொடர்ந்து பயணிக்க விரும்புகின்றோம் நிச்சயம் பயணிப்போம்' என்றார். (ரி)

## மாண்புமிகு மாணவன் அஸ்வின்

பிளமிங் தெரிவித்துள்ளார். இந்தியாவின் பந்து வீச்சு நடப்பு உலகக்கிண்ண தொடரில் மிகவும் மேம்பட்டுள்ளது. அதிலும், சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் 5 ஆட்டங்களில் 11 இலக்குகளை வீழ்த்தி, ஷமிக்கு அடுத்த இடத்திலுள்ளார்.

இந்நிலையில், அஸ்வினின் இந்த எழுச்சி தொடர்பாக ஸ்டீபன் பிளமிங் கூறியதா[illegible] 'அஸ்வின் எப்போதுமே புதிதாக கற்றுக்கொள்ள வேண்டும் என்ற விருப்பம் கொண்டவர். பயிற்சியின்போது மிகவும் சிறப்பாக கற்றுக்கொள்வார். புதிது, புதிதாக எதையாவது முயற்சி செய்து பார்ப்பதில் வல்லவர். அவரது பந்து வீச்சு அசத்தலாக உள்ளது. இந்த வெற்றிப்பயணத்தை இந்தியாவும் அஸ்வினும் தொடர்வார்கள் என்று நம்புகிறேன்' என்றார். (ரி)

## இப்படியாயிற்று இங்கிலாந்து



முடையவர்கள் என்றே கருதுகின்றோம். இந்தத் தொட[illegible] அவர்கள் ஒருவர் கூட திறனில் இல்லை. நாளை(இன்று) நடக்கும் இந்த ஆட்டத்தில் நன்றாக விளையாடி, எங்கள் பதட்டத்தை அமைதிப்படுத்தி இங்கிலாந்துக்கு அதிர்ச்சியளிப்போம்.

நாங்கள் உலகக்கிண்ணத்தை வெல்ல இங்கு வரவில்லை. அது எங்களால் முடியாது என்பது ஆப்கானில் இருந்து நாம் புறப்படும்போதே எங்களுக்குத் தெரியும். ஆனால் எங்களால் என்ன முடியும் என்பதைக் காட்டாமல் விடமாட்டோம். ஸ்கொட்லாந்தை வீழ்த்தினோம், இலங்கையை அச்சுறுத்தினோம், நாளை (இன்று) இங்கிலாந்தை [illegible]றி பெறவும் உள்ளோம்' என்றார். (ரி)

## சிக்சரில் வில்லியர்ஸ் சாதனை

தொடரொன்றில் அதிக சிக்சர்கள் விளாசியவர் என்ற புதிய சாதனையை படைத்துள்ளார். நடப்பு உலகக்கிண்ண தொடரில் வில்லியர்ஸ் இதுவரை 20 சிக்சர்கள் விளாசியுள்ளார். இதற்கு முன்னர் கடந்த 2007 ஆம் ஆண்டு உலகக்கிண்ண தொடரில் ஆஸ்திரேலியாவின் ஹைடன் விளாசிய 18 சிக்சர்களே இதுவரையில் ஒருவீரர் அதிகம் அடித்த சிக்சர் என்று இருந்தது. தற்போதுடிவில்லியர்ஸ்ஹைடனை பின்தள்ளி முதலிடம் பிடித்துள்ளார். (ரி)

# டுவிட்டால் சர்ச்சை




ஸ்கொட்லாந்து அணி நிர்வாகத்தின் மீது நிறவெறி முறைப்பாடு சுமத்திய சுழற்பந்துவீச்சாளர் மாஜித் ஹக் அணியிலிருந்து நீக்கப்பட்டது மட்டுமல்லாமல் நாட்டுக்கும் திருப்பி அனுப்பப்பட்டார்.


இலங்கைக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் ஸ்கொட்லாந்து அணி வீரர் மாஜித் இடம்பெறவில்லை. இவருக்குப் பதிலாக மைக்கல் லீஸ்க் தெரிவு செய்யப்பட்டார். தான் புறக்கணிக்கப்பட்டது தொடர்பாக ஆத்திரமடைந்த மாஜித் ஹக் தனது டுவிட்டர் பதிவில், ‘சிறுபான்மையினராக இருந்தால் கடினம்தான், நிறம், இனம்..’ என்று நிறவெறி முறைப்பாடு தொனிக்க கூறியிருந்தார். பின்னர் இந்த டுவிட் அகற்றப்பட்டது. இதனையடுத்து அணியின் நடத்தை விதிகளை மீறியதாக ஸ்கொட்லாந்து அணி நிர்வாகம் நாட்டுக்கு திருப்பி அனுப்பியது.

32 வயதாகும் மாஜித் ஒருநாள் ஆட்டங்களில் 60 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார். சிறந்த பெறுபேறாக ஒரு ஆட்டத்தில் 5 இலக்குகளை வீழ்த்தியுள்ளார்.

மாஜித்தின் ருவிட் அகற்றப்பட்டாலும், குறித்த பிரச்சினை தொடர்பாக மாஜித் வெளியிட்ட ‘நீங்கள் செல்லும் படகில் நீங்கள் கவனியாத தருணத்தில் அனைவரும் துடுப்பு போடுகின்றனரா அல்லது படகில் ஓட்டை போடுகின்றனரா என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள். உங்கள் வட்டத்தை நன்கு தெரிந்து கொள்ளுங்கள்.’ என்ற மற்றொரு வாசகம் இன்னமும் அவரது டுவிட்டர் பக்கத்தில் அப்படியே இருக்கிறது. (ரி)

# விரலில் கிண்ணம்

உலக்கிண்ணத் தொடரில் இந்திய அணி காலிறுதிக்கு இலகுவாக முன்னேறியுள்ள நிலையில், விழுப்புரத்தைச் சேர்ந்த ராஜகோபால் என்பவர் தனது கைவண்ணத்தில் 70 மில்லிகிராம் நிறையுடைய மிகச்சிறிய உலகக் கிண்ணத்தை தங்கத்தில் உருவாக்கியுள்ளார்.



இது தொடர்பாக ராஜகோபால்கூறும்போது, ‘இந்த சிறிய உலகக்கிண்ணத்தைத் தங்கத்தில் செய்து முடிக்க 2 மணிநேரம் ஆனது. இந்தியா கிண்ணம் வென்றால், அவர்களுக்கு இந்தக் கிண்ணத்தையும் பரிசாக வழங்குவேன். இந்தக் கிண்ணத்தை செய்வதற்கு எனக்கு 600 ரூபா மதிப்பிலான தங்கம் மட்டுமே தேவைப்பட்டது – என்றார். (ரி)

**தினம் ஒரு பரிசுப் போட்டி 27**

அயர்லாந்து – பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நாளை மறுதினம் (15.03.2015) நடைபெறும் ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

.................................................

பெயர் : .............................................

தே.அ.இல. : ........................................

முகவரி : ............................................

.............................................

தொலைபேசி இல.: .................................

இந்தக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (14.03.2015) மாலை 6 மணிக்கு முன், ‘தினமொரு பரிசு’, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலிலோ, உதயன் அலுவலகத்திலோ அல்லது எம்மால் அனுமதியளிக்கப்பட்ட இடங்களில் வைக்கப்பட்டுள்ள இதற்கான பெட்டியலோ சேர்க்கலாம்.

தினமும் 2,500/= இருவருக்கு

**பரிசுப் போட்டி**

நடப்பு உலகக் கிண்ணத்தின் தொடர் நாயகன் யார்?

.......................

நடப்பு உலகக் கிண்ணத்தின் இறுதி ஆட்டத்தின் ஆட்ட நாயகன் யார்?

.......................

பெயர்: .......................

தே.அ.அ.இல. .......................

முகவரி. .......................

தொலைபேசி .......................

போட்டி முடிவுத் திகதி 26.03.2015

தலா 10,000/= 45 பேருக்கு

**போட்டி விதிகள்**

- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.
- தே.அ.அட்டை பெறும் வயதுக்கு குறைந்தவர்கள், பெற்றோரின் தே.அ.அட்டை இலக்கத்தை குறிப்பிட முடியும்.

**அரையிறுதிப் பரிசுப் போட்டி**

அரையிறுதிக்கு தகுதி பெறும் அணிகள் எவை?

1)....................... 2).......................

3)....................... 4).......................

பெயர்: .......................

தே.அ.அ.இல. .......................

முகவரி .......................

தொலைபேசி .......................

போட்டி முடிவுத் திகதி 17.03.2015



தலா 5,000/= 20 பேருக்கு

**Tilko Jaffna City Hotel**



TILKO JAFFNA CITY HOTEL
- LUXURIOUS ROOMS
- BANQUET HALL
- SWIMING POOL
- GYM & SPA
- RESTAURANT
- CONFERANCE HALL
- FREE WIFI

BCAS CAMPUS JAFFNA

5 லட்சம் ரூபாவுக்கான பரிசுக் கூப்பன்

**மாபெரும் இறுதிப் பரிசுப் போட்டி**

நடப்பு உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

.......................

பெயர்: .......................

தே.அ.அ.இல. .......................

முகவரி. .......................

.......................

தொலைபேசி .......................

போட்டி முடிவுத் திகதி 23.03.2015

1 ஆம் பரிசு 2½ லட்சம் பணப்பரிசு

2 ஆம் பரிசு 1½ லட்சம் பணப்பரிசு

3 ஆம் பரிசு 1 லட்சம் பணப்பரிசு

தலா 5,000/= 10 பேருக்கு

நியூ மைதிலி ஜுவலர்ஸ்
யாழ் மண்ணில் தன்னிகரில்லாதலைமை நிறுவனம்
தொ.பே: 021 221 7878/ 021 221 7873
E-mail: newmaithily@gmail.com
இல. 38, 40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**லக்கி பான்சி கவுஸ்** இருபாலைச்சந்தி, கோப்பாய்.
**மொடோன்** பஸ்நிலையம் வீதி,நெல்லியடி.
**கவிதா** 350ஏ பிரதான வீதி,பருத்தித்துறை.
**கனன் போட்டோ** 165 பிரதான வீதி.பருத்தித்துறை.
**சூரியா பாமசி** புதிய சந்தை,அச்சுவேலி.
**நகுலன்** 85 பருத்தித்துறை, வீதி நல்லூர்.
**தாட்சாயினி ஸ்ரோர்ஸ்** 3ஆம் சந்தி, கெருடாவில்.
**தர்மலிங்கம்** கோவில் ஒழுங்கை, உடுப்பிட்டி.
**கலைச்சோலை** இல 3 நவீன சந்தை, வல்வெட்டித்துறை
**அஞ்சலோ புக் சொப்** ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறை.
**மாவடி ஸ்ரீ முருகன்** மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.
**தயாளன் ஸ்ரோர்ஸ்** பலாலி,வீதி,கோண்டாவில்.
**சிவசக்தி ஸ்ரோஸ்** உரும்பிராய் மேற்கு, சிவகுலவீதி,
**சிவன் ஸ்ரோர்ஸ்** பரமேஸ்வரா சந்தி,திருநெல்வேலி.
**தாஸ் ஸ்ரோர்ஸ்** திருநெல்வேலி.
**ஓம் கணேசா** இல1, புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு.
**பேரின்பநாதன்** 103,வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**பூபாலசிங்கம் புத்தகசாலை** 41. வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**திருநீலகண்டன் ஸ்ரோர்ஸ்** 14. விதானையார் வீதி, சுண்டுக்குளி.
**சுரேஸ் ஸ்ரோர்ஸ்** இல. 376 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
**அன்ரனீஸ் ஸ்ரோர்ஸ்** 19 புதுமை மாதா கோவில் கிழக்கு.
**சிவானந்தா கபே** செட்டி தெரு நல்லூர்.
**ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்** சித்தங்கேணி வீதி, பண்டத்தரிப்பு.
**புஸ்பநாதன்** பிரதான வீதி, சங்கானை
**சுசிலா தேவி அச்சகம்** சித்தங்கேணிச்சந்தி, சித்தங்கேணி
**வானம்பாடி புத்தக நிலையம்** பிரதான வீதி சுழிபுரம்.
**குலம் ஸ்ரோர்ஸ்** சந்தையடி மானிப்பாய்.
**துர்க்கா புத்தகசாலை** பஸ் நிலையம் சுன்னாகம்.
**கிருபா போட்டோ** கே.கே.எஸ் .வீதி மல்லாகம்.
**பாக்கியா** கொக்குவில்.
**சிறிராம்** கைதடி சந்தி.
**பரம்ஸ்** நவீன சந்தை சாவகச்சேரி.
**மணியம்** ஏ–9 வீதி சாவகச்சேரி.
**அருள்நாயகி** ஏ –9 வீதி கொடிகாமம்.
**கஜானன்** அல்லாரை வீதி, மீசாலை சந்தி.
**அன்பரசன் புத்தகசாலை** வித்தியாபுரம் ஒட்டுசுட்டான்.
**உயர்ச்சி புத்தகசாலை** மல்லாவி.
**கோமதி நெற்கபே** வெற்றிலைக்கேணி.
**கே.பி.கே.புத்தகசாலை** 24, பஸ் நிலையம் வவுனியா.
**வன்னி பேபி நீட்ஸ்** 55 ஏ மன்னார் வீதி குருமன்காடு வவுனியா.
**சோமசுந்தரம்** ஏ – 9 வீதி மாங்குளம்.
**மோகன்** பளை.
**நகுலேந்திரன்** 31ஆம் கட்டை முழங்காவில்.
**ஜோதி புக்சொப்** பெரிய கடை மன்னார்.
**சிவசாந்தி உணவகம்** தாழ்வுப்பாடு வீதி மன்னார்.
**நிரஞ்சனா** தலைமன்னார்.
**பூநகரி(எம்.பி.சி.எஸ்)** பூநகரி.
**டிலசிகா** 124 கட்சன் வீதி வட்டக்கச்சி.
**மகிழன் களஞ்சியம்** தர்மபுரம்.
**பொதிகை புக்சொப்** 2 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு.
**தாயன்பு** உடையார் கட்டு.
**சஜி புக் சொப்** விசுவமடு.
**வரணா புக்சொப்** 755 கனகராசா வீதி திருநகர் கிளிநொச்சி.
**வவிசனா புக் சொப்** குமரபுரம் பரந்தன்.
**ராஜா தேநீரகம்** உருத்திரபுரம்
**அபி புத்தகசாலை** பிரதான வீதி முல்லைத்தீவு.
**ஸ்ரீ கருணா மல்ரி சொப்** வரணி.
**விநாயகர் களஞ்சியம்** அளவெட்டி.
**சிவலிங்கம் ஸ்ரோர்ஸ்** வியாபாரி மூலை.
**குகன் ஸ்ரோர்ஸ்,** நவாலி.
**நாகமுத்து ஸ்ரோர்ஸ்** காரைநகர்.

**பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில் சேர்க்கலாம்**



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** விருப்பமான நபரைச் சந்தித்து மகிழ்வீர்கள். எப்போதோ உங்களுக்கு உதவியவர்களுக்கு நீங்கள் மனமுவந்து உதவும் காலகட்டம் இது. சுதந்திரமாகச் சிந்தித்துத் தனித்துச் செயல்படுவீர்கள்.

**இடபம்:** குடும்பத்தாரிடம்விட்டுக்கொடுத்து நடந்து கொள்ளவும். அனைவரையும் அனுசரித்துச் செல்லவும். நன்கு யோசித்த பிறகே முக்கிய முடிவுகளை எடுக்கவும். கடுமையான சொற்களை உதிர்க்காமல் நிதானமாகப் பேசவும்.

**மிதுனம்:** அனைத்து வேலைகளும் சுமுகமாக முடியும். உங்களைத் தேடிப் புதிய வாய்ப்புகள் வரும். திறமைகளை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் தாமாகவே அமையும்.

**கடகம்:** தொண்டர்கள் உங்களிடம் சற்று பாராமுகமாகவே நடந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். மேலதிகாரிகள் உங்களுக்கு நெருக்கமாவார்கள்.

**சிங்கம்:** எதிரிகளின் இரகசியத் திட்டங்களை அம்பலப்படுத்திப் புகழடைவீர்கள். மனதில் தெம்பு உண்டாகும். மகிழ்ச்சி அதிகரிக்கும். முயற்சிகள் சாதகமான பலன் தரும் வயிறு சம்பந்தப்பட்ட நோய் வரலாம். கவனம் தேவை.

**கன்னி:** தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களைச் செய்வது நல்ல பலன் தரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பணவரத்து திருப்தி தரும். ஆனால் எதிர்பார்த்த அளவு இருப்பது கடினம்.

**துலாம்:** குடும்பத்தில் வீண் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். புத்தி சாதுரியத்தால் எல்லாவற்றையும் சமாளித்து வெற்றி காண்பீர்கள். வாழ்க்கை துணையுடன் வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நல்லது.

**விருச்சிகம்:** முயற்சிகள் சாதகமான பலன்தரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வீண்கவலையைத் தவிர்ப்பது நல்லது. உங்களது கருத்துக்கு மற்றவர்களிடம் வரவேற்பு இருக்கும்.

**தனுசு:** எதிர்ப்புகள் விலகும். தடைபட்ட காரியங்களை மீண்டும் செய்து முடிக்க தேவையான முயற்சிகளை மேற்கொள்வீர்கள். மனதில் புதிய உற்சாகமும், தைரியமும் உண்டாகும்.

**மகரம்:** உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலை செய்யும் இடத்தில் இருந்த பிரச்சினைகள் குறையும். அலுவலகம் தொடர்பான பயணம் செல்ல வேண்டி இருக்கலாம். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் குறையும்.

**கும்பம்:** புதிய நண்பர்களின் சேர்க்கை அவரால் உதவி உண்டாகும். தடைப்பட்ட காரியங்களைச் செய்து முடிக்க மீண்டும் முயற்சிகள் மேற்கொள்வீர்கள். உற்சாகம் உண்டாகும். பணத்தட்டுப்பாடு நீங்கும்.

**மீனம்:** கொடுத்த வாக்கைக் காப்பாற்றி அதன் மூலம் மதிப்பும், மரியாதையும் கிடைக்கப் பெறுவீர்கள். சிக்கலான சில விடயங்களை சாதுரியமாகப் பேசி முடித்து விடுவீர்கள். வீண் பயத்தைத் தவிர்ப்பது நல்லது.



காரணம் இல்லாமல் சிரிக்கலாம்...! ஆனால் கவலை இல்லாமல்...; அழ முடியாது...!!!

## கொஞ்சம் சிரிங்க பாஸ்...



பாஸ்...
இயக்குநர் : இந்தக் காட்சில நீங்க 100 அடி உயரத்தில இருந்து நீச்சல் குளத்தில குதிக்கணும்.
கதாநாயகன் : எனக்கு நீச்சல் தெரியாதே.
இயக்குநர் : கவலைப்படாதீங்க. குளத்தில தண்ணியே இருக்காது.
கதாநாயகன் : ????



நபர் 1 : உங்கள் சொந்த ஊர் எது?
நபர் 2 : அந்த அளவுக்கு எங்களுக்கு வசதி இல்லைங்க, சொந்த வீடுதான் இருக்கு.
நபர் 1 : ???

நீதிபதி: பார்த்தா அப்பாவியா தெரியிறாய் ? நீயா பிக்பொக்கெட் ? நம்பவே முடியலையே ?
குற்றவாளி: உங்களை மாதிரித்தாங்க எல்லோரும் ஏமாந்துடறாங்க...
நீதிபதி: ????



# வீடு வாங்கினால் மனைவி இலவசம்

புதிய வீடு வாங்கினால், தளபாடங்கள் இலவசமாக கொடுக்கும் நிறுவனங்களைப் பார்த்திருக்கிறோம். ஆனால், வீடு வாங்கினால், தன்னையே (மனைவியாக) இலவசமாகத் தரவுள்ளதாக ஓர் பெண் வெளியிட்ட விளம்பரம் இணையத் தளத்தை கலக்கி வருகிறது.

இந்தோனேசியா, ஸ்லீமன் நகரைச் சேர்ந்த வினாலியா (வயது–40) எனும் பெண் பரபரப்பான இந்த விளம்பரத்தை இணைய தளத்தில் உலாவ விட்டுள்ளார். அழகுநிலையம் வைத்திருக்கும் விதவைப் பெண்ணான வினாலியா இரு குழந்தைகளுக்குத் தாய் என்பது குறிப்பிடத்தக்கது. லியா, தான் விற்பனை செய்யவுள்ள வீட்டில், இரு படுக்கை அறைகள், இரு குளியலறைகள், நீச்சல் குளம் போன்றவைகள் உள்ளன என்று தெரிவித்துள்ளார்.

இதைக் காட்டிலும் முக்கிய விடயமாக, இந்த வீட்டை வாங்குவோர்கள், வீட்டின் முதலாளியான தன்னையும் திருமணம் செய்து கொள்ளலாம். இந்தச் சலுகை மிகவும் அரிதிலும் அரிதானது என்று தெரிவித்துள்ளார்.

வீட்டை வாங்க வருவோர்கள், பேரம்பேசக் கூடாது என்றும் அன்புக்கட்டளையிட்டுள்ளார் லியா. இந்த வீட்டின் விலை ஒரு கோடியாகும்.

# விரைவில் பேஸ்புக் கார் வருமா?





கணினித் துறையில் முன் னணியில் இருக்கும் நிறுவனங்கள் வேறு பல துறை களிலும் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தி வரும் காலமிது. அந்த வகையில் கூகுள், சாரதி இல்லாத தானியங்கிக் கார்களைத் தயாரித்து வருகிறது. செல்போன் மற்றும் கணினி உற்பத்தியில் முன்னணியில் இருக்கும் அப்பிள், எலக்ட்ரிக் கார் தயாரிக்கும் திட்டத்தில் இருக்கின்றது.

இந்த நிலையில், ஸ்பெய்னின் பார்சிலோனா நகரில் நடக்கும் சர்வதேச செல்போன் மாநாட்டில் கேள்வி நேரத்தின் போது பேஸ்புக், கார் தயாரிப்பில் ஈடுபடுமா என்று அந்த நிறுவனத்தின் மார்க் சக்கர்பெர்க்கிடம் கேட்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த மார்க், சர்வதேச அளவில் பேஸ்புக்கின் வலையமைப்பை இன்னும் விரிவாக்குவது, இணையத்தின் மூலம் வளர்ந்த நாடுகளில் உள்ள மக்களைச் சென்றடைவது மற்றும் தொழில் நுட்பத்தை மேம்படுத்துவது போன்றவையே பேஸ்புக்கின் இலக்கு என்றும், தற்போது கார் தயாரிக்கும் திட்டம் எதுவும் இல்லை என்றும் தெரிவித்தார்.





# காதலன் இல்லை

எனக்கு இப்போது காதலன் இல்லை. எனவே, உடனடியாகத் திருமணம் செய்துகொள்ள வாய்ப்பில்லை என்கிறார் ஸ்ருதிஹாசன். தமிழ், தெலுங்கு, ஹிந்தி உள்ளிட்ட மொழி திரைப்படங்களில் நடித்து வருகிறார். திரைப்படங்களில் நடிப்பதோடு மட்டுமல்லாது, பாடல்களைப் பாடியும் வருகிறார். திருமணம் குறித்து, ஸ்ருதி ஹாசன் தற்போது மனம் திறந்துள்ளார்.

எனக்குக் காதலன் இல்லை. அதன் காரணமாக, உடனடியாகத் திருமணம் செய்துகொள்ள வாய்ப்பில்லை. நான் இன்னும் பல்வேறு வித்தியாசமான கதாபாத்திரங்களில் நடிக்க வேண்டியுள்ளது. இன்னும் 6 ஆண்டுகள் நடித்த பிறகு தான், திருமணத்தை பற்றி யோசிக்க உள்ளேன். என்னுடைய பாத்திரங்களை பார்த்து, எனது ரசிகர்களுக்கு வெறுப்பு வரும்வரை தொடர்ந்து நடிக்க உள்ளேன் என்கிறார் ஸ்ருதிஹாசன்.

# பங்குனித் திங்கள் பொற்தூறல் ஞாயிறன்று

யாழ்ப்பாணம்,மார்ச்13
திருமறைக் கலாமன்றம் பொன் விழா ஆண்டை முன்னிட்டு நடத்தி வரும் மாதாந்த நிகழ்ச்சித் தொட ரான பொற் தூறல் நிகழ்வின் இம் மாதத்துக்கான நிகழ்வு பங்குனித் திங்கள் பொற்தூறல் என்னும் பெய ரில் நாளை மறுதினம் ஞாயிற் றுக்கிழமை மாலை 5 மணிக்கு, யாழ்ப்பாணம், பிரதான வீதி, 286 ஆம் இலக்க கட்டடத்தில் அமைந் துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடை பெறவுள்ளது.

இந்த மாதத்துக்கான பொற் தூறல் நிகழ்வு பாரம்பரிய தவக் காலப் பண்கள் பாடப்படும் நிகழ்வாக வடி வமைக்கப்பட்டுள்ளது. யாக் கோமே கொன்சால்வேஸ் அருந் தவ முனிவரால் இயற்றப்பட்ட இயேசுகிறிஸ்து மானிடர் ஈடேற்றத் துக்காக பூங்காவனத்திலே தொடங்கி சிலுவை மரணம் வரைக்கும் அனுப வித்த பாடுகளின் வரலாறு 9 பிரசங்கங்களாக வகுக்கப்பட் டுள் ளது. இந்தப் பிரசங்கங்களை யாழ்ப் பாணம், மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு மாவட்டங்களின் பல்வேறு பிரதேசங் களைச் சேர்ந்த அண்ணாவிமார், கலைஞர்கள் பங்கு கொண்டு தத்தம் பிரதேசங் களில் வழக்கில் உள்ள ராகங் களில் பாடவுள்ளார்கள்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தி னராக யாழ்.பல்கலைக்கழக கிறிஸ் தவ–இஸ்லாமிய நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் அருட்கலா நிதி ஞானமுத்து பிலேந்திரன் அடி களார் கலந்து கொண்டு சிறப்பிக்க வுள்ளார். (வ–23)

# சைவத் திருமுறை விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை

வலி.தென்மேற்கு, மார்ச்13
ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத்தின் சைவத் திரு முறை விழாவும் சைவசமய செயற் பாட்டு பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறும்.

ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப் பாளர் ஆ.வே.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் மூத்த நயினார் தேவஸ் தான சிவஸ்ரீ க.கிருஷ்ணேஸ்வரக் குருக்கள் ஆசியுரை வழங்குவார். அதனைத் தொடர்ந்து ஓய்வு நிலை உப அதிபர் க. கதிரேசு வாழ்த் துரையையும், இந்து சமய விருத்திச் சங்க பொருளாளர் கலாபூசணம் இ.சரவணபவன் வரவேற் புரையை யும் வழங்குவார்கள்.

துர்க்காதேவி தேவஸ்தான தலை வர் கலாநிதி ஆறு.திருமு ருகன், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை ஓய்வு நிலைப் பேராசிரியர் சி.சிவ லிங்கராசா, சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி மாலினி கிருஷ்ணானந்தன் ஆகியோர் சிறப்புரை வழங்குவார் கள்.

அதையடுத்து பரிசில்கள் வழங்கப் படவுள்ளன. (வ–115)

## தென்மராட்சி வலய அதிபர்கள் 8 பேர் தரம் Iஇற்குதெரிவு

தென்மராட்சி,மார்ச்13
கல்வி அமைச்சால் இலங்கை அதிபர் சேவை வகுப்பு Iக்கு தெரிவு செய் யப்பட்ட 2 ஆயிரம் அதிபர்களில் 8 பேர் தென் மராட்சி கல்வி வலயத் தைச் சேர்ந்தவர்கள் என்று தெரி விக்கப்பட்டது.

அவர்களில் ஏழு பேர் செவ்வாய்க் கிழமை கொழும்பு றோயல் கல் லூரியில் இடம்பெற்ற பதவியுயர்வு நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இலங்கை அதிபர் சேவை வகுப்புI இற்கு இலங்கை அதிபர் சேவை வகுப்புII இல் கடமையாற்றிய சி.பவளகாந்தன் (கைதடி முத்துக் குமாரசாமி ம.வி.)வி.கணபதிப் பிள்ளை (மீசாலை விக்னேஸ்வரா ம.வி.), ந.மங்களேஸ்வரன் (வரணி மத்திய கல்லூரி), திருமதி ச.தர்ம குலசிங்கம் (சரசாலை ஸ்ரீகணேசா வித்தி.), கா.குணசிங்கம் (கச்சாய் அ.த.க.பாடசாலை), ந.ஜெயக் குமார் (மட்டுவில் சந்திர மௌலீச வித்தி.), ந.உதயகுமார் (சாவகச்சேரி கோட் டக் கல்வி அலுவ்லகம்) ஆகியோர் நிய மனக் கடி தங் களைப் பெற் றுள்ள தாக தெரி விக் கப்பட்டது. (வ–9)

# பொதுக்கூட்டம்

அச்சுவேலி, மார்ச் 13
அரசசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் கோப் பாய் பிரதேச செயலர் பிரிவுச் சங்கத்தின் 6 ஆவது வரு டாந்தப் பொதுக்கூட்டம் நீர்வேலி அத்தியார் இந்துக்கல் லூரியில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். சங்கத்தின் தலைவர் வை.குணசேகரம் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் பிரதம விருந்தின ராக வலி கிழக்கு பிரதேச செயலர் எம்.பிரதீபன் கலந்து கொள்வார். விருந்தினர்களாக வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக் கணக் காளர் திருமதி கலைச் செல்வி ரமணன், சமூகசேவை அலுவ லர் திரு மதி விஜயகுமாரி முகுந்தன், ஓய்வூதிய அலு வலர் திருமதி தி. ஜெயமாலா, ஓய்வூதிய பிரிவு அலுவ லர்கள் இ.லோகேந்திரா, செல்வி த.திருநிலை நாயகி ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (வ–11)

★ ★ ★

அச்சுவேலி, மார்ச் 13
அச்சுவேலி பிரதேச மருத்துவமனையின் நோயா ளர் நலன்புரி சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். மருத்துவமனை பொறுப்பதிகாரி மருத்துவர் செல்வி எஸ்.சிந்துஜா தலைமையில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் மருத்துவமனை யின் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடப் படவிருப்பதால் உறுப்பினர்களைகலந்து கொள்ளு மாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ–11)

# பிணைப்பணத்தின் ஒரு பகுதி வழங்கல்

யாழ்ப்பாணம்,மார்ச்13
மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கான பிணைப் பணத்தின் ஒரு பகுதியை வழங்கி வருகின்றது. 2010ஆம் ஆண்டுக்கு பின்னர் சங்கத்தில் இருந்து இளைப்பாறிய பணியா ளர்களுக்கு இந்தக் கொடுப்பனவுகளின் ஒரு பகுதி வழங்கப்பட்டு வரு கின்றது. 2010ஆம் ஆண்டுக்கு முன்னர் பணியில் இருந்து ஓய்வு பெற்று இந்தக் கொடுப் பனவை எவரா வது பெறாது இருந்தால், அவர்களுக்கும் இந்த பிணைப் பணத்தில் ஒரு பகுதி வழங்கப்படுமென சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (வ–17)


**TV, கள் மலிவு விற்பனை**

SONY Wega Flat 14"-5000/=, 21"-10000/=, 25" - 14000/=, SONY DVD-3000/=, ரேடியோ கஸெற்- 3000/=, BOX, குளிர்சாதனப் பெட்டி- 20000/=

**சோனி ரேற்ற் சென்ரர்**
(கொமர்ஷல் வங்கி எதிரில்)
56, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம். T.P: 077 044 0570
(57038)(4.3.7)

**உதயன் விளம்பரத் தொடர்புக்கு—**
advt@uthayan.com
0215671111

**ஒத்துமாறல்**

வடமாகாண திணைக்களம் ஒன்றில் அபி விருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவருக்கு ஊர்காவற்றுறை பிரதேச அலுவலகம் ஒன்றுக்கு இடமாற்றம் கிடைக்கப்பெற்றுள்ளது. அவர் யாழ்ப்பாண பிரதேச பகுதி அலுவலகம் ஒன்றில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவருடன் ஒத்துமாற விரும்புகின்றார்.

(57751) (10.3.7)

தொடர்புகளுக்கு: 0774482719

**விற்பனைக்கு**

ஆறுமாத காலம் பாவனையிலுள்ள, சிறிது தூரம் ஓடிய, மிகவும் சிறந்த நிலையிலுள்ள Activa i மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

(57740) (10.3.7) T.P: 0770774639

**ASIAN SUPER CENTER**

440 B, Pointpedro Rd, Nallur.
(நல்லூர் பின்புறம்) 0770712001

எம்மிடம் மிகக்குறைந்த விலையில் கைத் தொலைபேசி, பற்றறி, Toys (விளையாட்டுப் பொருள்கள்), Memory Cards என்பன மொத்த மாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

(57750) (10.3.7)

**மணப்பெண்கள் தேவை**

UK PR பொறியியலாளர்களான 35 வயது 99 பாவம், வயது 35 பாவம் 40, செவ்+சூரி சேர்ந்த UK ENGINEER பாவம் 25 உள்ளூர் இஞ்ஜினியர் வயது 34 பாவம் 40, Doctor பாவம் 42 To வயது 34 பாவம் லிகிதர்கள் 33 வயது 32 வயது 30 வயது பாவம் முறையே 38,40, 28 இவர்களுக்கு செவ்+சூரி குறிப்பு: மணப் பெண்கள் மட்டும்

(57643) (10.3.7) தொடர்பு: 0772 115783

**தேவை**

V-R Advertising கம்பனியில் வேலைவாய்ப்பு களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. O/L, A/L தகைமை உள்ள ஆண், பெண் இருபாலாரும் நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு: 0776763334, 0771449798
முகவரி: Pointpedro Road, Nelliyadi.

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும் பத்தைச் சேர்ந்த 1979இல் பிறந்த பல்கலைக்கழக விரிவுரையாள ருக்கு மணமகள் தேவை. கார்த் திகை 4, சூரியன் செவ்வாய் 11ஆம் இடத்தில், உயரம் 5'7'' விவாகரத்துப் பெற்றவர். (innocent party)

(C/15227) (10.3.7)

தொடர்பு: 0777840262

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

திருமதி. யோகராணி தில்லைநாதன்
(S.L.P.S-I)



மு/பாலிநகர் மகாவித்தியாலயத்தின் அதிபர் திருமதி யோகராணி தில்லைநாதன் அவர்கள் 10.03.2015 அன்று கொழும்பு ராஜகிய வித்தியாலயத்தில் நடைபெற்ற இலங்கை அதிபர் சேவை தரம் I இற்கு 02.07.2008 ஆம் திகதி தொடக்கம் பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிசங்கம்,
மு/ பாலிநகர் மகாவித்தியாலயம்,
வவுனிக்குளம்.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

கொழும்பு இராஜகிய வித்தியாலயத்தில் 10.03.2015 அன்று நடைபெற்ற இலங்கை அதிபர்சேவை தரம் I இற்கான பதவிஉயர்வு வைபவத்தில் இலங்கை அதிபர்சேவை தரம் I இற்கு பதவி உயர்வு பெற்ற எமது வித்தியாலய அதிபர்

**சின்னத்தம்பி பவளகுமாரன்**



அவர்களை உளமாரப் பாராட்டுவதுடன், அவர் மேன்மேலும் பட்டங்கள் பல பெற்று சீரும் சிறப்புமாகப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திக் குழு
யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி

**தேவை**

யாழ், நகரில் இயங்கிவரும் ஆங்கில மருந்தகத்துக்கு முகாமையாளர், மருந்தாளர், விற்பனையாளர் தேவை. கல்வித்தராதரம், அனுபவம், ஆற்றல் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விளம்பர இல : 5051
மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்**

பகுதிநேர தமிழ் வாத்தியக் கலைஞர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- கர்நாடக இசை, வயலின், மிருதங்கம், புல்லாங் குழல், வீணை, கடம், கெஞ்சிரா, மோர்சிங், தம்புரா போன்ற வாத்தியக் கலைஞர் பதவி களுக்குப் பொருத்தமானவர் களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமை களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- இசைத்துறையில் அங்கீகரிக்கப்பட்ட நுண் கலைத்துறை கல்லூரி அல்லது இசைக் கல்லூரி யில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட வாத்தியங்களை வாசிக் கும் ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- வயதெல்லை 35 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரிகள் சான்றிதழ்களின் பிரதிக ளுடன் தமது விண்ணப்பங்களை பதிவுத் தபா லில் பணிப்பாளர் நாயகம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், சுதந்திரசதுக்கம், கொழும்பு-7 என்ற முகவரிக்கு 2015, மார்ச் மாதம் 23 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண் ணப்பிக்கும் பதவியின் பெயரைக்குறிப்பிடல் வேண்டும்.

(C/15226)(4.3.7)

**துன்பம் தீர அருள்வாக்கு**



குழந்தைப்பேறு இல்லாதவர்கள், திருமணத்தடை தோஷம் உள்ளவர் கள், குடும்பப் பிரச்சினைகள், வெளி நாடு செல்லத் தடை, தொழிலில் முன்னேற்றமின்மை, கல்வியில் முன்னேற்றமின்மை, தீராத நோய் தீர அருள்வாக்குக் கூறப்படும். வெள்ள வத்தை பேர்னாந்து வீதியிலுள்ள துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வமான ஞானேஸ்வரி அம்மன் அவர்கள் 15, 16, 17/03/ 2015 வரை யாழ்ப்பாணத்தில் அருள்வாக்குக் கூறவுள்ளார்.

தொடர்புகளுக்கு: ஞானவைரவர் ஆலயம்
கலாசாலை வீதி, 2ஆவது ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

பூசை நேரம்:
முற்பகல் 10.30 மணி, மாலை 4 மணி

★ கலாசார உடையுடன் வருகைதரவும்.

T.P: 021 221 9127 (56812)(4.3.7)

## மெய்வன்மைப்போட்டி

உடுவில் கல்விக்கோட்டத்தின் மெய்வன்மைப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இணுவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் கோட்டக்கல்விப்பணிப்பாளர் தி.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந் தசாமி கலந்துகொள்வார். (வ)

### வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

திருமதி செல்வேஸ்வரி விஜயபாஸ்கரன்



தோற்றம் 24 . 09 . 1942

மறைவு 11 . 02 . 2015

கடந்த (11.02.2015) புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி செல்வேஸ்வரி விஜயபாஸ்கரன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வும் எதிர்வரும் (15.03.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.24, கண்டுவில் ஒழுங்கை,
சாவகச்சேரி.
தொலைபேசிஇல.077 985 9218

வை.விஜயபாஸ்கரன் (கணவர்)
வி.பகீரதன் (மகன்)
சந்திரன் கல்யாணி (மகள்)
(61917(4.7.3)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 23 . 11 . 1935

உதிர்வு 15 . 03 . 2014

திருமதி திரேசம்மா அருளானந்தம்

"இதோ உன்னைப்பெயரிட்டு நாமே அழைத்தோம்
ஆகவே நீ எனக்கே சொந்தம்"
(எசாயா 43:1)

அன்பின் நிறைகுடமே அம்மா
பாசத்திலும், பண்பிலும் இனிய தாயே!
எங்கள் வீட்டின் ஒளிவிளக்கே!
பாசத்துடன் நடமாடிய எம் தெய்வமே!

தரணியில் எம்மை உயரவைத்து
இன்பமுடன் நாம் வாழ வழிகாட்டி
குருமகனை மகிழ்வாகப் பெற்றுக்கொடுத்து
இப்போ எம்மையெல்லாம் துயரத்தில் ஆழ்த்திவிட்டு

நீங்கள் சென்று ஓராண்டு ஆனதம்மா
இவ்வளவு சீக்கிரம் உங்கள் பிரிவு வருமென்று
எண்ணவில்லை நாம்
பல்லாண்டு காலம் இப்பாரினில்
வாழ்வீர்கள் என்று
பல கனவுகள் கண்டோமம்மா
இன்பத்திலும் துன்பத்திலும்
ஆறுதல் நீங்களம்மா

எத்தனை ஆண்டுகள் தான் சென்றாலும்
அம்மா, அம்மா என்றழைக்கும்
எம் உதடுகள் என்றென்றும் ஓயாது
பாசமுள்ள மனைவியாகவும்
அன்புத் தாயாகவும்
ஆதரவான மாமியாராகவும்
அரவணைப்பான பேர்த்தியாகவும்
என்றென்றும் எம் மனதில் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ்.சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் நாளை (14.03.2015) சனிக்கிழமை காலை 6 மணிக்குத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

36/2,
ரெம்பிள் றோட்,
யாழ்ப்பாணம்.
(57698)(4.3.7)

அன்பு நினைவுகளுடன்
கணவர், உடன் பிறப்புக்கள்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## வடமராட்சி கிழக்கு பிரதேச அபிவிருத்தி அமைப்பு அங்குரார்ப்பணம்

வடமராட்சி,மார்ச் 13

வடமராட்சி கிழக்குப் பிரதேச அபிவிருத்தியை முன்னெடுக் கவும் பௌதிக வளங்களைப் பேணிப் பாதுகாக்கவும் என வடமராட்சி கிழக்கு பிரதேச அபிவிருத்தி அமைப்பு என்னும் புதிய அமைப்பு ஒன்று நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வில் அனைத்து சமூக ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (வ–173)

### கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி லங்கினி ஜெயசீலன் அவர்களின் அன்புத் தந்தை
கனகரட்ணம் இரத்தினசபாபதி
(முன்னாள் தொலைபேசி இயக்குநர், யாழ் பல்கலைக் கழகம்) அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஆசிரியர் சங்கம்,
யா/புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
(57736(5.3.7)

### 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
ஜெயதேவி வேலாயுதம்

மலர்வு
03.02.1941

உதிர்வு
08.03.2010


திதி: அட்டமி (13.03.2015)

என்றென்றும் உங்கள் நினைவுடன்! உங்கள் ஆத்மா
சாந்தி பெற, எல்லாம்வல்ல கந்தவன
முருகப்பெருமானை வேண்டுகின்றோம்.
கதிர்காமத்து இறைவா சரணம்!
கந்தவனத்து அரசே சரணம்!!
கண்கண்ட தெய்வமே சரணம்!!!

"கணபதி"
வதிரி, நெல்லியடி வடக்கு, கரவெட்டி.

குடும்பத்தினர்.
T.P : 021 2264564
(54235)(5.3.7)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 10 . 03 . 1936

மறைவு 11 . 02 . 2015

அமரர் இராசையா கனகரத்தினம்

அன்பின் இருப்பிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய் வாழ்ந்து,
எங்களை வளர்த்து ஆளாக்கி,
கலங்கவைத்து விண்ணுலகு
சென்றீர்களே,
மாதமொன்று ஆகிடினும்
ஆறவில்லை எம் துயரம்
எங்களை வாழவைத்த தெய்வமே,
உங்களது ஆத்மா சாந்திபெற
ஆண்டவனைப் பணிகின்றோம்.

எமது அன்புத் தெய்வம் எம்மை விட்டுப் பிரிந்த செய்திகேட்டு உடன் வந்து எமது துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இன்று (13.03.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெறும் எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்குகொள்வதோடு, அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

ஞானவைரவர் வீதி,
உடுப்பிராய் கிழக்கு, உடுப்பிராய். (57743)(5.3.7)

குடும்பத்தினர்.

## திசைமுகப்படுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவன 2015ஆம் கல்வியாண்டு புதிய மாணவர்களுக்கான திசை முகப் படுத்தல் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிதொடக்கம்குறித்தநிறுவனத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் 2015ஆம் கல்வியாண்டுக்கான முழு நேர கற்கை நெறியில் பதிவை மேற்கொண்ட அனைத்து கற்கை நெறிகளையும் சேர்ந்த அனைத்து மாணவர்களும் தமது பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒருவ ருடன் தவறாது கலந்து கொள்ளுமாறு அறி விக்கப்பட்டுள்ளது. புதிய கல்வியாண்டுக்கான முழுநேர கற்கை நெறி கள் எதிர்வரும் திங்கட் கிழமையும், பகுதி நேர கற்கை நெறிகள் எதிர்வரும் 21 ஆம் திகதியும் ஆரம்பமாகவுள்ளன. (வ)

## மக்கள் ஒத்துழைப்பு வழங்கினால் பூரண சேவை வழங்கத் தயார்

வலி.தென் மேற்கு பிரதேசசபை தவிசாளர் தெரிவிப்பு

மானிப்பாய், மரர்ச் 13

எந்தவொரு சபைக்கும் இல்லாத பேரிடரை நான் சந்திக்க வேண்டியுள்ளது. மக்கள் என்னுடன் பூரணமாக ஒத்துழைத்தால் அவர்களுக்கு முழுமையான சேவைகளை வழங்க நான் தயாராக உள்ளேன் என்று வலி.தென் மேற்கு பிரதேசசபை தவிசாளர் சி.சி.மகேந்திரன் தெரிவித்தார்.

வலி.தென்மேற்கு கழிவு ஒயில் காரணமான குடிதண்ணீர் பிரச்சினை மற்றும் கல்லுண்டாய் வெளி திண்மக்கழிவு காரணமான பேரிடர் ஆகிய இரண்டும் எமக்கு முன்னுள்ள சவால் என அவர் தெரிவித்தார். அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

திண்மக் கழிவுகள் எதனையும் எமது பிரதேசத்திற்குள் கொண்டு வந்து கொட்டாதீர்கள் எனக் கூறியபோதும் எமது பிரதேசம் இன்று எல்லையற்ற கழிவுகளின் பிரதேசமாக மாறி விட்டது. இன்று சட்டத்தின் முன் ஆராயப் படவுள்ளது. அதேபோல் சுன்னாகம் கழிவு ஒயில் எமது வலி. தென்மேற்கு பிரதேசத்தை ஆக்கிரமித்து விட்டது.

இதனால் திண்மக்கழிவு, கழிவு ஒயில் ஆகிய இரு விடயங்களும் என்னை ஆக்கிரமித்தவண்ணம் உள்ளன.வலி.தென்மேற்குபிரதேச சபையின் உறுப்பினர்கள், அலுவலர்கள், ஊழியர்கள் எமக்கு முழுமையான ஒத்துழைப்பைநல்கி வருகின்றனர்.

அதேபோல் பொதுமக்களும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கும் பட்சத்தில் மானிப்பாய் பிரதேச சபையின் அனைத்து வளங்களையும் முழுமையாகப் பிரயோகித்து மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீரை வழங்குவேன். மேலும் கல்லுண்டாய் வெளி திண்மக்கழிவு அபாயத்தில் இருந்தும் மக்களைக் காப்பாற்றுவேன். எனவே வலி.தென்மேற்கு மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குவார்கள் என்று நம்புகிறேன் என தவிசாளர் தெரிவித்தார் (வ–50)

## இசைக்கச்சேரி

யாழ்ப்பாணம், மார்ச் 13

ஏ.ஜி.எஸ். கலையரங்கம் நடத்தும் இசைக் கச்சேரி இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கொழும்பு, பம்பலப்பிட்டி யில் அமைந்துள்ள குறித்த கலையரங் கத்தில் நடை பெறவுள்ளது. சங்கீத பூஷணம் திரு மதி இந்திரா குமாரசிவத்தின் மாணவர்களின் வீணை இசை, நிகழ்வில் இடம் பெறும். (வ)

# யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் நடத்தும் திருவள்ளுவர் விழா

யாழ்ப்பாணம், மார்ச் 13
யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுக்கும் திருவள்ளுவர் விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

யாழ். பெரியகடை சிவ கணேசன் புடைவையகத்தின் ஆதரவில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வு யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் துணைத்தலைவரும் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவருமாகிய பேராசிரியர் கி.விசாக[illegible] தலைமையில் நடைபெறும். நிகழ்வின் அனுசரணையாளரான கனகசபை அருள்நேசன் மங்கள விளக்கேற்றுவார். ஊர்காவற்றுறை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.தயாபரன் தமிழ் வணக்கப் பா இசைப்பார். யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சாந்தினி அருளானந்தம் வரவேற்புரையையும் தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி தொடக்கவுரையையும் ஆற்றுவர்.

குறள் நீதி என்ற பொருளில் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் ந.விஜயசுந்தரம் சிறப்புரையாற்றுவார். தொடர்ந்து தமிழ்ச்சங்கத் துணைத்தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் சுழலும் சொற் போர் இடம்பெறும்.

இக்கால உலகுக்கு வள்ளுவம் பெரிதும் வலியுறுத்துவது எது? என்ற பொருளில் இடம்பெறும் இச்சொற்போரில் ஒழுக்கம் அல்ல கடமையே என்ற பொருளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கு.பாலஷண்முகனும், கடமைஅல்லமனிதநேயமே, என்ற பொருளில் யாழ். போதனா மருத்துவமனையின் மருத்துவத் தொழில்நுட்பவியலாளர் லோ.துஷி[illegible]னும், மனித நேயம் அல்ல உலகியலே என்ற பொருளில் வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கௌரி முகுந்தனும், உலகியல் அல்ல ஒழுக்கமே, என்ற பொருளில் முல்லை. குமுழமுனை மகா வித்தியாலயத் தமிழாசிரியர் க.சந்திரசேகரும் கருத்துரைகளை வழங்குவர்.

சிறப்பு நிகழ்வாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நடனத்துறை விரிவுரையாளர் சத்தியப்பிரியா கஜேந்திரனின் நெறியாள்கையில் நீர்வேலி பொன் ச[illegible]கலாலயா நாட்டியப் பாடசாலை மாணவிகளது நாட்டிய நிகழ்வு இடம்பெறும். யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா நிகழ்வுகளை முன்னிலைப்படுத்துவார். (வ)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச்13
சிக்கனக்கடனுதவிவாரத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட சிக்கன கடனுதவிச் சங்க சமாசம் நடத்தும் மருதங்கேணி பிராந்தியத்துக்கான விளையாட்டு விழாவும், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு குடத்தனை அ.த.க. பாடசாலையில் சமாசத் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (வ)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

உயர்திரு. காசிநாதர் குணசிங்கம்
(S.L.P.S- I



10.03.2015 இல் கொழும்பு ராஜகீய வித்தியாலயத்தில் இடம்பெற்ற பதவிஉயர்வு வழங்கும் நிகழ்வில் 15.11.2010 ஆம் திகதி தொடக்கம் தரம்-1 அதிபர் சேவை நியமனத்தைப் பெற்ற எமது வித்தியாலய அதிபர் கா.குணசிங்கம் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவர் மேலும் பல பதவி உயர்வுகளையும் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

அத்துடன் இந்நாளில் தரம்-1 அதிபர் நியமனத்தைப் பெற்ற எமது பாடசாலையின் முன்னாள் அதிபர்களான க.மங்களேஸ்வரன், க.உதயகுமாரன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றோம்.

மேலும் இந்நாளில் தென்மராட்சிக்கல்வி வலயத்தில் தரம்-1 அதிபர் நியமனத்தைப் பெற்ற அதிபர்களான வி.கணபதிப்பிள்ளை, ந.ஜெயகுமாரன், S.பவளகுமாரன், செ.பேரின்பநாதன், திருமதி S.தர்மகுலசிங்கம் அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதில் பாடசாலைச்சமூகம் பெரும் மகிழ்ச்சி அடைகின்றது.

பாடசாலைச்சமூகம்.
யா/கச்சாய் அ.த.க. பாடசாலை, கொடிகாமம்.
(51920)(4.3.6)



சேவைநலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்தும்

திருமதி தெய்வநாயகி கந்தசாமி
சுதந்திரபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் உப அதிபராகப் பணிபுரிந்து, அவரது பிறந்தநாளாகிய இன்று (13.03.2015) வியாழக்கிழமை



ஓய்வுபெறும் திருமதி தெய்வநாயகி கந்தசாமி அவர்களது
சேவையைப் பாராட்டுவதுடன்
60 ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்களையும்
தெரிவிக்கின்றோம்.
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
151, சுதந்திரபுரம்.



பாராட்டி வாழ்த்துகின்றோம்

தனுக்கோடி அருமைநாயகம்
(SLPS-1)



10.03.2015 அன்று கொழும்பு ராஜகீய வித்தியாலய புதிய நாடகமண்டபத்தில் இடம்பெற்ற அதிபர்களுக்கான பதவி உயர்வு வழங்கும் நிகழ்வில் முதலாம் தர அதிபர்சேவை நியமனத்தைப் பெற்ற எமது கல்லூரி முதல்வர் தனுக்கோடி அருமைநாயகம் அவர்களைப் பாராட்டுவதுடன், அவர் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று சீரும் சிறப்பும் பெற்று இன்பமுடன் வாழ வாழ்த்தி நிற்கின்றோம்.

ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்.
மு/ பாண்டியன்குளம் மகாவித்தியாலயம்
(57729)(5.3.7)



உவகையுடன் உளம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



வைத்திய கலாநிதி
ஆறுமுகம் கேதீஸ்வரன்
(பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்)

அவர்கள் கடந்த 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராகக் கடமை புரிந்து யாழ்.பிராந்திய வைத்தியசாலைகள் அனைத்தினதும் வளர்ச்சிக்காக பாரபட்சமின்றி அயராது பாடுபட்ட உன்னத சேவையாளராவார். யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவில் இவரின் சேவைக்காலம் ஒரு பொற்காலம் ஆகும்.

2000 ஆம் ஆண்டு யுத்த சூழ்நிலைகளால் முழுமையாக அழிவுற்ற சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை படிப்படியாக அபிவிருத்தியடைந்து இன்று சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையாக தரமுயர்வதற்கு வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அவர்களின் அர்ப்பணிப்பான சேவையே காரணமாகும்.

சுமார் பத்தாண்டுகள் சாவகச்சேரி வைத்தியசாலையின் தேவைகளை உடனுக்குடன் அறிந்து ஆலோசனைகள் வழங்கி, தேவையான வளங்களைப் பெற்றுக்கொள்ளவும் அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் எதுவிதமான தடங்கலுமின்றிக் கிடைப்பதற்கும் முழுமனதுடன் உதவிய பெருமகனாவார்.

தனது உன்னத சேவையினால் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராகக் பதவியுயர்வு பெற்ற வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அவர்கள் மேலும் தமது சேவையில் உயர்வடைந்து நலமுடனும், வளமுடனும் வாழ இறையருள் வேண்டுவதுடன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நிர்வாகசபை,
நோயாளர் நலன்புரிசங்கம்,
ஆதாரவைத்தியசாலை-சாவகச்சேரி.
(சி/19881)(4.3.7)



பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது அதிபர்
இ. நேவிற் ஜீவராசா
B.E.D SLPS-I



நீண்ட காலமாக சேவையாற்றி எமது பாடசாலையை மகா வித்தியாலயமாக தரமுயர்த்திய எமது அதிபர் 10.03.2015 அன்று கொழும்பு ராஜகீய வித்தியாலயத்தில் நடைபெற்ற இலங்கை அதிபர் சேவை தரம்-I இற்கு பதவியுயர்வு நியமனம் பெற்றமையை மனதாரப் பாராட்டுவதுடன் மேன்மேலும் பட்டங்கள் பல பெற்று நீண்டகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.
மு/ அளம்பில் றோ.க.ம.வித்தியாலயம்
(57729)(5.3.7)



30 ஆவது ஆண்டு திருமண நாள் வாழ்த்து

திரு.திருமதி
இராஜேந்திரராஜா கமலேஸ்வரி
தம்பதிகள்



யாழ்ப்பாணம் - கொழும்புத்துறையை வசிப்பிடமாகக் கொண்ட
திரு.திருமதி இராஜேந்திரராஜா கமலேஸ்வரி தம்பதிகள்
இன்று (13.03.2015) வெள்ளிக்கிழமை 30 ஆவது திருமண ஆண்டைக் கொண்டாடுகின்றார்கள்.
அவர்களை மகன் - விமல்ராஜ், மருமகள் - மதிவதனி, மகள் - ராகினி,
மருமகன் - சஞ்சித்குமார், மகன் - சானுஜன், செல்லப் பேர்த்தி - சப்திகா மற்றும்
உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஸ்ரீ வதிரிப்பிட்டி விநாயகரின்
அருள் பெற்று பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றார்கள்
வாழ்த்துவோர்: இ. விமல்ராஜ் - மகன், இ.சானுஜன் - மகன்,
ச. ராகினி - மகள்.

## மணிவிழாவும் சேவை நயப்பும்

வலிகாமம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமியின் மணிவிழாவும், சேவை நயப்பு நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இணுவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தி.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் வாழ்த்துரையை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் சந்திர ராஜா, ஓய்வு பெற்ற மேலதிக கல்விப் பணிப்பாளர் கலா நிதிரா. தணிகாசலம்பிள்ளை ஆகியோர் வழங்குவர். பாராட்டுரையை வலிகாமம் உதவிக் கல்விப் பணிப்பாளர் சுகணேசலிங்கம், தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிப்பாளர் சுகண்முகுலகுமரன் ஆகியோர் நிகழ்த்துவர். (வ)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கடந்த (11.02. 2014) செவ்வாய்க்கிழமை மாங்குளம் வீதி விபத்தில் சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்கள்





**அமரர் சின்னத்துரை சிவநேசன்**

மண்ணில் 28.02.1971 விண்ணில் 11.02.2014

**திருமதி தர்மிளா சிவநேசன்**

மண்ணில் 22.04.1982 விண்ணில் 22.02.2014

**13.03.2015**

காலங்கள் எவ்வளவு வேகமாக நகர்கிறது
கண்ணயர்ந்த வேளையில்
ஓர் ஆண்டுகள் கடந்தும் - முள்ளாக
எங்கள் மனதில் உங்கள் நினைவுகள்
ஒரு வருடம் என்ன இன்னும் ஓராயிரம் வருடங்கள்
கடந்தாலும் அழியாது உங்கள் நினைவுகள்

முதலாம் ஆண்டு நினைவுக் கிரியைகள் இன்று (13.03.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள்
சி.சிந்தூரி, சி.கவீனா,
வ.கனகரத்தினம் (அப்பா, மாமா)

குமரகோட்டம்,
கோண்டாவில்.

(சி.19868) (45.6.3)

## 30 ஆவது ஆண்டு நினைவஞ்சலியும் 44 ஆவது பிறந்தநாளும்



அமரர்
**துரைசிங்கம் சரவணன்துரை**
(அச்சுவேலி மத்திய கல்லூரி மாணவன்)

தாயின் மடியில் 27 ★ 04 ★ 1971

ஆண்டவன் அடியில் 13 ★ 03 ★ 1985

பாசத்தின் திருமகனாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
மனம் மகிழ நீ பிறந்தாய் ஆசை மகனே!
அன்பு மொழி பேசி அறிவொளி பரப்பி
கல்வியிலே சிறந்து கலைகள் பயின்ற நீ!
இன்ப நிழல் பரப்பி எமைக் காப்பாய் என்றிருந்தோம்
ஈரேழு வயது தனில் இறைவனடி சேர்ந்தனையோ!
முப்பது வருடங்கள் சென்றாலும் உன் முகம்
எம் நெஞ்சில் நிறைந்திருக்கும் என்றென்றும்
நாம் மறவோம் – நெஞ்சிருக்கும் வரையும்
நினைவிருக்கும் சரவணா!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

அப்பா, அம்மா,
பெரியம்மா குடும்பத்தினர்.

திருச்செந்தூர்,
நாவலம்பதி, அச்சுவேலி.
(சி/19880)(3.6.4)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்

### 45 ஆம் நாள் நினைவு



தாயின் மடியில் 27 • 11 • 1951

இறைவன் அடியில் 28 • 01 • 2015

**அமரர் செல்லையா துரைராசா J.P**
(ஓய்வுபெற்ற போதனா ஆசிரியர்- யாழ். தொழில்நுட்பக்கல்லூரி)

### 85 ஆம் நாள் நினைவு



தாயின் மடியில் 27 • 10 • 1998

இறைவன் அடியில் 19 • 12 • 2014

**அமரர் துரைராசா தனுசன்**
(மாணவன்- யாழ்.இந்துக்கல்லூரி தரம்- 11)

கடந்த 19.12.2014 எம்மை விட்டு இறைபதம் எய்திய செல்வப்புதல்வன் அமரர் துரைராசா தனுசன் அவர்களினதும் கடந்த 28.01.2015 இறைபதமெய்திய குடும்பத்தலைவர் அமரர் செல்லையா துரைராசா அவர்களினதும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (13.03.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் இவர்களின் துயரச் செய்திகேட்டு நேரிலும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், மலர்வளையங்கள் வைத்தோருக்கும் மற்றும் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வெடியரசன் வீதி, காரைநகர்.

(376704)(13.6)

**குடும்பத்தினர்.**

# வயோதிபர்களல்ல ஓய்வூதியர்கள்

சு.பரமேஸ்வரி, *ஓய்வூதியர்.*

நல்லாட்சி கிட்டுமெனும் நாட்டு மக்களின் நம்பிக்கையுடன் ஜனவரி 9ஆம் திகதி அன்று ஆட்சிப் பீடமேறினார் தற்போதைய ஜனாதிபதி.
இந்த நாட்டில் முதியோர் ஏழு வீதம். அத்தனை பேருக்கும் வாக்குரிமை உண்டு. அவர்களில் 90 வீதமானவர்கள் வாக்களித்தார்கள். ஆனால் அவர்களின் நிலை நல்லாட்சி வரவு –செலவுத்திட்டத்தால் சொல்ல முடியாத துன்பியல் நாடகமாக்கப் பட்டுள்ளது.
2014இல் மஹிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு–செலவுத்திட்டத்தின் படி முதியோரின் நிலையான வைப்புக்கு 12வீத வட்டியை 25 லட்சம் ரூபா வரை வங்கிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன் மூலமாக ஒரு வயோதிபர் வருட வட்டியாக 3 லட்சத்தைப் பெற முடியும். எனவே ஒரு மாதம் 25000 ரூபாவை வட்டியாகப் பெற முடியும். 'நல்லாட்சி' வரவு –செலவுத் திட்டத்தின்படி 10 லட்சம்ரூபா வரை மட்டுமே உயர்வட்டி பெற முடியும். இதன் வருட வட்டி ஒரு லட்சத்து 50 ஆயிரம் எனவே மாதம் வட்டியாக 12,500 ரூபா மட்டுமே பெறமுடியும்.
இனி 'ஓய்வூதியம்' தொடர்பாகப் பார்க்கும் போது முதிய அரச ஊழியர்களுக்கு மட்டும் இது உரியதல்ல. இளம் பெண்களும் ஓய்வூதியம் பெறுகின்றனர். இவர்கள் போன்று ஆயிரக்கணக்கான அரச உத்தியோகத்தர்களைக் கணவர்களாகக் கொண்டிருந்தவர்கள். அவர்களை இழந்து விதவைகளாகி விதவைகள் ஓய்வூதியம் பெறுகிறார்கள்.
எந்த ஒரு வரவு–செலவுத்திட்டத்திலும் அரச ஊழியர்களின் சம்பளமும், ஓய்வூதியமும் ஒரே நேரத்தில் (ஒரே மாதத்தில்) அதிகரிக்கப்பட்டு வந்துள்ளன. 'நல்லாட்சி' வரவு – செலவுத்திட்டத்தில் தான் ஒரு நூதனமான முறை கடைப்பிடிக்கப்பட்டு உத்தியோகத்தர் சம்பள அதிகரிப்பு மா'சியிலும் ஓய்வூதியர் சம்பள உயர்வு சித்திரையிலும் வழங்கப்பட முன்மொழியப்பட்டுள்ளது. இது ஓய்வூதியரை அவமதிப்பதாகவே நாம்கருதுகிறோம்.
எந்த ஒரு வரவு செலவுத்திட்டத்திலும் இதுவரை அரச உத்தியோகத்தரின் சம்பள அதிகரிப்புக்கும்ஓய்வூதிய அதிகரிப்புக்கும் இடையில் வேறுபாடு ரூபா 2000க்கு மேல் சென்றதேஇல்லை.
இதற்குச் சிறந்த உதாரணமாக2014 கார்த்திகையில் 2015ஆம் ஆண்டுக்கெனத் தயாரிக்கப்பட்ட வரவு – செலவுத்திட்டத்தில் கூட ரூபா 500 மட்டுமே இருசாராருக்கும் இடையில் வேறுபாடுகாணப்படுவதைக் கொள்ளலாம்.



'நல்லாட்சி' வரவு – செலவுத்திட்டத்தில் அரச உத்தியோகத்தருக்கும் ஓய்வூதியருக்கும் உள்ள வேறுபாடு ரூ 6500. தற்போது இந்த நிலை காணப்படுகின்றது. 2015 இன் பின் (மாசிக்கு) ஓய்வு பெற்றவர்களுக்கும் (மாசிக்கு முன்) 2015 தை 29 இன் முன் ஓய்வு பெற்றவர்களுக்கிடையிலும் பெரிய ஓய்வூதிய முரண்பாடு காணப்படப்போகின்றது. ஏற்கனவே ஓர் ஓய்வூதிய முரண்பாடுசரிசெய்யப்படாது இழுத்தடிக்கப்பட்டு வரும் நிலையில் இனி இந்த 'நல்லாட்சி' வரவு –செலவுத்திட்டம் உண்டாக்கப் போகும் ஓய்வூதிய முரண்பாடு இனி என்றுமே நிவர்த்தி செய்ய முடியாதவாறு அமையப் போகிறது.
எனவே எமது ஓய்வூதிய முரண்பாட்டைமேலும் அதிகரிக்காதவகையில் உத்தியோகத்தரின் சம்மள அதிகரிப்பிற்கேற்ப முன்னைய அரசின் வரவு– செலவுத்திட்டங்கள் போல், எமது ஓய்வூதியத்தையும் உயர்த்துவதுடன் எமது ஓய்வூதிய அதிகரிப்பையும் மாசியிலிருந்து வழங்கி 'நல்லாட்சியை' உறுதிப்படுத்துமாறு அரசைத் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன்.

> இனி 'ஓய்வூதியம்' தொடர்பாகப் பார்க்கும் போது முதிய அரச ஊழியர்களுக்கு மட்டும் இது உரியதல்ல. இளம் பெண்களும் ஓய்வூதியம் பெறுகின்றனர். இவர்கள் போன்று ஆயிரக்கணக்கான அரச உத்தியோகத்தர்களைக் கணவர்களாகக் கொண்டிருந்தவர்கள். அவர்களை இழந்து விதவைகளாகி விதவைகள் ஓய்வூதியம் பெறுகிறார்கள்.

இன்னும் ஒரு
நாள் மட்டுமே!!
பதிவுக்கு
முந்துங்கள்!

செவ்வாய்
புதன்
ஞாயிறு
தினங்களில்

மீண்டும்
கல்விச்சுடர்
தரம் 5 மாதிரி வினாத்தாள்
(கல்வித்துறையில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட
அனுபவம் உள்ள வல்லுநர்களால்
தயாரிக்கப்பட்டவை. முற்றிலும் எதிர்பார்க்கை
வினாக்களை உள்ளடக்கியவை.)

உதயன்

# ஜெயலலிதாவின் வழக்கு ஒத்திவைப்பு

டில்லி,மார்ச் 13
கர்நாடக உயர்நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு வழக்கின் தீர்ப்பு திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

சொத்துக் குவிப்பு வழக்கின் மேல் முறையீட்டில் 40 நாள்கள் விசாரணை நடைபெற்றுள்ளது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரின் வாதமும் விசாரணையும் நேற்று முடிவடைந்தன. இதனையடுத்து தீர்ப்பை ஒத்திவைப்பதாக கர்நாடக உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா, அவரது தோழி சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் கர்நாடகத்தில் உள்ள சிறப்பு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து, ஜெயலலிதாவும் அவரது தரப்பினரும் கர்நாடக உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்திருந்தனர். இந்த வழக்கை உயர் நீதிமன்றம் விசாரணை செய்துவந்தது.



இந்த வழக்கில் குற்றவாளிகள் தரப்பு, அரசுத் தரப்பு ஆகியோரின் வாதங்கள் முடிவடைந்த நிலையில், பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவரான சுப்பிரமணியன் சுவாமி தனது எழுத்துபூர்வமான வாதத்தை நேற்று தாக்கல் செய்தார்.

இந்த மேல்முறையீட்டு வழக்கின் விசாரணை முடிவுக்கு வந்த நிலையில், இந்த வழக்கின் தீர்ப்பை, திகதி குறிப்பிடாமல் ஒத்திவைப்பதாக நீதிவான் சி.ஆர்.குமாரசாமி அறிவித்தார். (14)

# இந்தியா – செஷல்ஸ் இடையே முக்கிய ஒப்பந்தங்கள் கைச்சாத்து

விக்டோரியா,மார்ச் 13
இந்தியா – செஷல்ஸ் ஆகிய இரு நாடுகளுக்கிடையே பாதுகாப்பு மேம்பாடு, அடிப்படை கட்டமைப்பு உட்பட முக்கியமான 4 ஒப்பந்தங்கள் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளன.



இந்தியப் பெருங்கடலில் உள்ள செஷல்ஸ், மொரிஷியஸ், இலங்கை ஆகிய நாடுகளுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சுற்றுப் பயணங்களை ஆரம்பித்துள்ளார். இதன் முதற்கட்டமாக செஷல்ஸ் நாட்டுக்குச் சென்றுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, செஷல்ஸ் நாட்டு ஜனாதிபதி ஆலிக்ஸ் மைக்கேலால் நேற்று முன்தினம் விமான நிலையத்தில் வைத்து வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து செஷல்ஸ் நாட்டின் தலைநகர் விக்டோரியாவில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நடந்த சந்திப்பின்போது, இரு நாடுகளுக்கும் இடையே பாதுகாப்பு, அடிப்படைகட்டமைப்பு மேம்பாடு உள்ளிட்டவை தொடர்பான 4 முக்கிய ஒப்பந்தங்களில் இரு நாட்டுத் தலைவர்களும் கையெழுத்திட்டுள்ளனர்.

இதனடிப்படையில் நீரை அடிப்படையாகக் கொண்டு செயல்படுத்தப்படும் திட்டங்கள், புதுப்பிக்கூடிய சக்திகளைக் கையாளுதல், அடிப்படை கட்டமைப்பை மேம்படுத்துதல், கடல்சார் பாதுகாப்பு, கடற்பயண வழிகாட்டிகள், மின்னணு கடற்பயண வழிகாட்டிகள் விற்பனை ஆகியவற்றில், இருநாடுகளும் பரஸ்பரம் ஒத்துழைப்புடன் செயற்படும்.

"இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில், இந்தியாவின் முக்கிய நட்பு நாடாக செஷல்ஸ் உள்ளது. இரு நாடுகளினதும் பாதுகாப்பு தொடர்பான உறவுகள் வலிமை மிக்கவை. நெருங்கிய நட்பு நாடு என்கின்ற அடிப்படையில், செஷல்ஸின் பாதுகாப்புத்துறைகளை மேம்படுத்துவதற்கும், இந்தியா சிறப்புக் கவனம் செலுத்தும். இதன் மூலமாக, அழகு மிக்க தீவுகளையும், அவற்றைச் சுற்றியுள்ள கடல் பகுதியையும் செஷல்ஸ் பாதுகாப்பதற்கு வழி ஏற்படும். அத்துடன் கடலோரக் கண்காணிப்பு மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்ளக்கூடிய இரண்டாவது நவீனரக விமானத்தை செஷல்ஸுக்கு இந்தியா வழங்கும்" இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். (14)



# புதிய தலைமுறை அலுவலகம் மீது தாக்குதல்

சென்னை,மார்ச் 13
சென்னையிலிருந்து ஒளிபரப்பாகி வரும் புதிய தலைமுறை தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைமையகத்தின் மீது நேற்று அதிகாலை வெடி குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அதிகாலை மூன்று மணியளவில் மோட்டார் சைக்கிளொன்றில் வந்த இருவர் பாத்திரமொன்றில் பொருத்தப்பட்ட குண்டுகளை அலுவலகத்தின் மீது வீசிவிட்டுச் சென்றுள்ளனர். அந்தச் சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை.

இதனையடுத்து அந்த அலுவலகத்தின் முன்பாக பெரும் எண்ணிக்கையில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். வெடிகுண்டு நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு, அந்த வெடி குண்டின் பாகங்கள் சேகரிக்கப்பட்டன.

சி.சி.டிவி கமராக்களில் பதிவாகியிருக்கும் காட்சிகளை வைத்து, குண்டை வீசிய நபர்கள் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

புதிய தலைமுறை தொலைக்காட்சியில் தாலி தொடர்பான விவாதம் ஒன்று ஒளிபரப்பாகவிருந்தது. இந்த விவாதத்தை ஒளிபரப்பக்கூடாது என இந்து அமைப்புகள் சில எதிர்ப்புத் தெரிவித்து கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று போராட்டம் ஒன்றை நடத்தி இருந்தன. அந்தப் போராட்டத்தின் போது புதிய தலைமுறை தொலைக்காட்சியின் ஒளிப்பதிவாளர் ஒருவர் தாக்கப்பட்டார். ஒளிப்பதிவுக் கருவி ஒன்று சேதப்படுத்தப்பட்டது. அந்தச் சம்பவம் தொடர்பாக 10 பேர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (14)



# பணத்துக்காக பிள்ளைகள் விற்பனை; இணைய விளம்பரங்களால் சிக்கல்

## சீனாவில் தடை இருப்பதால் பிரச்சினை

பிஜிங்,மார்ச் 13
சீனாவில் பணத்துக்காகப் பிள்ளைகளை விற்பதற்கான விளம்பரங்கள் இணையத்தில் வெளிவருவது பிரச்சினையொன்றாக உருவெடுத்துள்ளது.

தத்தெடுப்பு என்ற போர்வையில் குழந்தை விற்பனை விளம்பரங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும், குழந்தைகள் சட்டவிரோதமாக கடத்தப்படுவதைத் தடுக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்ற போதிலும் இந்த நிலை நீடிக்கிறது என்றும் ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

பிள்ளைகளைத் தத்துக் கொடுப்பதற்காக விளம்பரம் செய்வதற்கு சட்டத்தில் தடையில்லை. ஆனால் பணத்துக்கு விற்பனை செய்வதற்குத் தடையுண்டு.

சீனாவில் ஆண்டுதோறும் சுமார் இருபதாயிரம் பிள்ளைகள் கடத்தப்பட்டு அவர்களில் பலர் பின்னர் விற்கப்படுகிறார்கள் என மதிப்பிடப்படுகிறது. ஆனால் உத்தியோகபூர்வ எண்ணிக்கையைச் சீனா வெளியிடவில்லை.

பிள்ளைகளைக் கடத்துபவர்களுக்கு சாவு தண்டனை வரை வழங் கப்படுவதற்கு சீனாவில் சட்டங்கள் உண்டு. ஆனால் பிள்ளைகளை இணையத்தில் விளம்பரம் செய்து வாங்க நினைப்பவர்களுக்கும் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் சீனாவில் குழந்தைப் பாக்கியமில்லாத தம்பதியர் இணையத்தில் விளம்பரம் செய்து பிள்ளைகளை வாங்கத் தயாராக இருப்பதுதான், இந்த சட்ட விரோத காரியம் பிரபல்யம் பெறக் காரணம் என்றும் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (14)

# இந்திய தூதரக அதிகாரிகளை கண்காணிக்கும் ஐ.எஸ்.ஐ.

டில்லி, மார்ச் 13
பாகிஸ்தானில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள், அந்த நாட்டு உளவுத் துறையான ஐ.எஸ்.ஐ. அமைப்பால் இரகசியமாக கண்காணிக்கப் பட்டு வருகின்றனர் என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் திடுக்கிடும் தகவலொன்றை வெளியிட்டுள்ளார்.

வெளிநாடுகளில் இந்திய தூதரக அதிகாரிகள் அவமதிக்கப்படுவது தொடர்பாக லோக்சபாவில் நேற்று முன்தினம் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு சுஷ்மா ஸ்வராஜ் பதில் அளிக்கும்போது, கடந்த சில வருடங்களாக பாகிஸ்தான் உட்பட வெளிநாடுகளில் இந்திய தூதரக அதிகாரிகள் அவமதிக்கப்படும் சம்பவங்கள் நடந்துள்ளன. இவை உடனடியாக அந்தந்த நாட்டு அரசுகளின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்ட பின்னர், பாகிஸ்தானைதவிர ஏனைய நாடுகளில் மீண்டும் அதுபோன்ற சம்பவங்கள் நடைபெறவில்லை. பாகிஸ்தானில் பணியாற்றும் இந்திய தூதரக அதிகாரிகளை இரகசியமாக பின் தொடர்வது உட்பட அவர்களின் நடவடிக்கைகளை அந்த நாட்டு உளவுத்துறையினர் கண்காணித்து வருகின்றனர். இந்த விவகாரம் பாகிஸ்தான் அரசின் பல்வேறு நிலைகளில் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்தசில வருடங்களாக சால்வேனியா, ருமேனியா, அல்பேனியா மற்றும் பாகிஸ்தானில் இந்திய தூதரக அதிகாரிகள் அவமதிக்கப்பட்ட சம்பவங்களை சுஷ்மா தனது பதிலில் குறிப்பிட்டார். முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜே. அப்துல்கலாம், மரபு களுக்கு எதிராக நியூயோர்க் விமான நிலையத்தில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார். இதுபோல் இந்திய பிரபலங்கள் பலர் வெளிநாடுகளில் அவமதிக்கப்பட்ட சம்பவங்களையும் சுஷ்மா சுட்டிக்காட்டினார். (14)

# மனிதக் கழிவுகளை அள்ளத் தடை தமிழக அரசு உத்தரவு பிறப்பிப்பு

மனிதக்கழிவுகளை அகற்றுவதற்கோ, கழிவுநீர்த் தொட்டிகளைச் சுத்தம் செய்வதற்கோ மனிதர்களை நாளை மறுதினம் முதல் பயன்படுத்தக்கூடாது எனத் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

மனிதக் கழிவுகளை மனிதர்களை வைத்து அகற்றுவதற்குத் தடை விதிக்கும் 2013 ஆம் ஆண்டின் சட்டத்தின் 7வது பிரிவின் படி இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தனி மனிதரோ, உள்ளூர் நிர்வாகமோ, நேரடியாகவோ, மறைமுகமாகவோ கழிவு நீர்த் தொட்டிகளைச் சுத்தம் செய்யவும், மனிதக் கழிவுகளை அகற்றவும் மனிதர்களைப் பயன்படுத்தக்கூடாது.

2013ஆம் ஆண்டின் சட்டப்படி, இந்த மாதிரியான பணிகளுக்கு மனிதர்களைப் பயன்படுத்தினால், ஐந்து ஆண்டுகள்வரை சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படலாம். எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

# லண்டனில் 'செல்பிக் குச்சி' களுக்குத் தடை

லண்டன்,மார்ச் 13
செல்பி எனப்படும் தன்னைத் தானே கைத்தொலைபேசிகளில் கமராக்களைக் கொண்டு படமெடுக்கப் பயன்படுத்தும் 'செல்பிக் குச்சிகளை'த் தடை செய்துள்ள பிரபலமான இடங்கள் பட்டியலில் லண்டனின் பிரசித்தி பெற்ற தேசிய ஓவியக் கண்காட்சிக் கூடமான, நேஷனல் கலரியும், சேர்ந்துள்ளது.

ஓவியக் கண்காட்சிக் கூடம் உட்பட பலஇடங்களில் செல்பிக் குச்சிகளுக்கு லண்டனில் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தக் கருவிகள் கமராக்களை நிறுத்தி வைத்து ஒளிப்படமெடுக்க உதவும் முக்காலி வகைகளைச் சேர்ந்தவை என்றும், இவை ஏற்கனவே தடை செய்யப்பட்டிருக்கின்றன என்றும் தேசிய கலரி கூறியுள்ளது.

இந்தக் கருவியால் தங்களது அருங்காட்சியகங்களில் வைக்கப்பட்டிருக்கும் கலைப் பொருள்கள் மற்றும் அங்கு வருகை தரும் பிற பொதுமக்



களுக்குஏற்படக்கூடிய பாதிப்புகளைப் பற்றிக் கவலையடைந்த பிற அருங்காட்சியகங்கள் ஏற்கனவே எடுத்த நடவடிக்கைகளைப் பின்பற்றி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

வொஷிங்டனில் உள்ள ஸ்மித்சோனியன் அருங்காட்சியகம், நியூயோர்க்கில் உள்ள மோமா, கான்பெராவில் உள்ள தேசிய கலரி மற்றும் பாரிஸ் அருகே உள்ள வெர்சாய் அரண்மனை போன்றவை இந்தக் கருவிகளைப் பயன்படுத்த ஏற்கனவே தடை விதித்துள்ளன. (14)

# பிறந்த 7 வாரங்களில் 'ஹலோ' சொன்ன குழந்தை

லண்டன்,மார்ச் 13

அயர்லாந்து நாட்டில் வசிக்கும் தம்பதியரொருவரின் குழந்தை பிறந்த ஏழே வாரங்களில ஹலோ சொல்லி பெற்றோரை ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்தியுள்ளது. டோனி–பால் மெக்கேன் தம்பதியருக்கு பிறந்த ஆண் குழந்தையான சில்லியன், சில வாரங்களிலேயே தாயைப் பார்த்துச் சிரிக்கத் தொடங்கி... துறு துறுவென அலைபாயும் மகனின்கண்களைப்பார்த்துப்பரவசப்பட்டடோனி, ஏழாவது வாரத்தில் மகனின்மழலைகுறும்புகளை வீடியோ காட்சியாக படம் பிடிக்க ஆரம்பித்தார்.



அப்போது, கன்னங்களில் குழி விழ, தனது வாயை காட்டிச் சிரித்த சில்லியன், திடீரென 'ஹலோ' என்று சொன்னான். தனது கண்களையும், காதுகளையும் நம்பமுடியாதடோனி, தனது கமராவில் பதிவான காட்சி க... ஓடவிட்டுப் பார்த்தார். பின்னர், தான் அது கனவல்ல என்பது தெரியவந்தது. நான் அந்தக் காட்சியை வீடியோவாக எடுத்திருக்காவிட்டால் நான் சொல்வதை யாருமே நம்பியிருக்க மாட்டார்கள் என்று கூறிய டோனிக்கு 12, 11, 8 வயதில் மூன்று பெண் குழந்தைகளும் உள்ளனர். ஆனால், நான்காவது குழந்தையான சில்லியன், பிறந்த ஏழே வாரங்களில் 'ஹலோ' சொல்லும் அந்த வீடியோவின் மூலம் தனது தாய் டோனியை உலகப் பிரபலமாக்கி விட்டான். (14)

# ஆப்கனில் வெடிகுண்டு தாக்குதல்; 13 பேர் சாவு



காபூல்,மார்ச் 13

ஆப்கானிஸ்தானின் பல்வேறு பிராந்தியங்களில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வெடிகுண்டுத் தாக்குதல்களில் 13 பேர் சாவடைந்துள்ளதுடன் 50 பேர் படுகாயம் அடைந்தனர் என்று ஆப்கன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் ஹெல்மான்ட் பிராந்தியத்தில் தலிபான் உட்பட பல்வேறு தீவிரவாத இயக்கத்தினரை ஆப்கன் பொலிஸாரும் இராணுவத்தினரும் வேட்டையாடி வருகின்றனர். அவர்களுக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக, தலிபான் தீவிரவாத இயக்கத்தினர் பல்வேறு வெடிகுண்டுத்தாக்குதல்களைநடத்தி வருகின்றனர்.


இந்த நிலையில் ஹெல்மான்ட் பிராந்தியத்தில் இருக்கும் லஸ்கர் கா என்ற இடத்தில் நேற்று முன்தினம் தலிபான்கள் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தினார்கள். இந்தத் தாக்குதலில் 8 பேர் சாவடைந்ததுடன் மேலும் 23 பேர் படுகாயம் அடைந்தனர். இதேபோன்று மற்றொரு பகுதியில் நடைபெற்ற சாலையோர வெடிகுண்டுத் தாக்குதலில் 4 பேர் சாவடைந்ததுடன் 5 பேர் படுகாயம் அடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து, ஆப்கன் வடக்கே பாக்லான் பிராந்தியத்தில் வைத்தியசாலைக்கு அருகே நடைபெற்ற வெடிகுண்டுத் தாக்குதலில் ஒருவர் சாவடைந்ததுடன் 22 பேர் படுகாயம் அடைந்தனர். (14)

# கொலம்பியாவில் நிலநடுக்கம்

பகோடா,மார்ச் 13

கொலம்பியா தலைநகர் பகோடாவில் திடீரென்று ஏற்பட்ட நிலநடுக்கம் 6.6 என்ற ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளதுடன், அதில் சேதங்கள் எதுவும்ஏற்பட்டதாகத்தகவல்இல்லை. தென்அமெரிக்க நாடான கொலம்பியாவின் தலைநகர் பகோடாவில் நேற்று முன்தினம் திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் இந்த நிலநடுக்கம் 6.6 புள்ளிகளாகப் பதிவாகி இருந்தது. நிலநடுக்கம் ஏற்பட்டபோது கட்டடங்கள் குலுங்கியதால் பீதி அடைந்த பொதுமக்கள் வீதிகளில் தஞ்சம் புகுந்தனர். புகாரமங்கா நகரின் தென்புறத்தில் 17 மைல் தொலைவில் 98.5 மைல் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டு இருந்தது. நிலநடுக்கம் காரணமாக உயிர்ச்சேதமோ, பொருள்சேதமோ ஏற்பட்டதாகத் தகவல்கள் இல்லை. இந்த நிலநடுக்கம் அங்கு பல நகரங்களில் உணரப்பட்டுள்ளது. (14)



# ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் புதிய வீடியோ

ஈராக்,மார்ச் 13

இஸ்ரேலுககாக உளவு பார்த்ததாகக் கூறி பாலஸ்தீன இளைஞர் ஒருவரை கொலை செய்த வீடியோவை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் வெளியிட்டுள்ளனர். கொல்லப்பட்ட இளைஞன் பாலஸ்தீனத்தைச் சேர்ந்த 19 வயதே ஆன முகமது சையது இஸ்மாயில் முஸ்லாம் என்பவர் ஆவார்.

அந்த வீடியோவில் செந்நிற நிற உடை அணிந்த நிலையில் மண்டியிட்ட படி முகமது சையது இஸ்மாயில் முஸ்லாம் உள்ளார். அவருக்குப் பின்னால் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பைச் சேர்ந்த சிறுவனும் மற்றொருவனும் நிற்கின்றனர்.

அந்தச் சிறுவன் பாலஸ்தீன இளைஞரை தலையில் துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற வீடியோக் காட்சி வெளியாகியுள்ளது. கொலை செய்யப்பட்ட முஸ்லாம் இஸ்ரேலின் மொசாத் என்ற உளவு அமைப்புக்கு உளவு பார்த்ததாக ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் குற்றம் சாட்டியுள்ளனர். ஆனால் அந்தக் குற்றச்சாட்டை அவனது பெற்றோர் மறுத்துள்ளனர். ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் வெளியிட்டுள்ள 13 நிமிட வீடியோ காட்சியின் உண்மைத் தன்மை உறுதிபடுத்தப்படவில்லை என்று கூறப்படுகிறது. ஐ.எஸ் தீவிரவாத இயக்கத்தில் சேர்ந்த முஸ்லாம் அங்கிருந்து தப்பிச் சென்ற போது பிடிப்பட்டதாகக் கூறப்படுகிறது. (14)

# சீனாவில் ஐ.எஸ். தீவிரவாதிகள்

பீஜிங்,மார்ச் 13

சீனாவின் ஜின்ஜியாங் பிராந்தியத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் ஊடுருவி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

சீனாவில் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் நாடுகளின் எல்லைக்கு அருகே ஜின்ஜியாங் பிராந்தியம் உள்ளது. இங்கு உய்குர் தீவிரவாத இயக்கம் உட்பட பல்வேறு தீவிரவாத இயக்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அவர்கள் இந்தப் பிராந்தியங்களில் பல்வேறு வன்முறைத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். அவர்களை ஒடுக்குவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த நிலையில் அந்தப் பிராந்தியத்துக்குள் ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் ஊடுருவியிருப்பதாக அரசுக்குக்குத் தகவல் கிடைத்துள்ளது.

மியன்மார் நாட்டின் எல்லை வழியாகச் சீனாவுக்குள் கடந்த சில நாள்களாக அத்துமீறி நுழைந்தவர்கள் கைது செய்யப்பட்டனர். அதே போன்று போலிக் கடவுச் சீட்டுக்களை வைத்து சீனாவுக்குள் ஊடுருவ முயன்ற உய்குர் பகுதியை சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் ஐஎஸ் தீவிரவாதிகளாக இருக்கலாம் என்ற சந்தேகம் உள்ளது. தற்போது அவர்களிடம் விசாரணை நடைபெற்று வருகிறது. ஜின்ஜியாங் பிராந்தியத்தில் இது போல் ஊடுருவுபவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (14)



தென்னாபிரிக்காவில் உள்ள கடற்கரை ஒன்றில் பெரிய கற்பாறை அளவு கொண்ட பனிப்பாறைகள் ஒதுங்கியுள்ளன. இந்தப் பெரியபனித்துக்கள்கள் மனிதர்களை விட உயரமாக இருந்துள்ளன. இதனைப் ஒளிப்படக்காரர் ஒருவர் படம்பிடித்து டுவிட்டரில் பதிவேற்றியுள்ளார். (14)

# சிறுமியைக் கொ... முயன்ற பேய்

கான்பரா,மார்ச் 13

ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாநிலத்தில் கிம் டேவிசன் என்ற பெண் தனது 3 குழந்தைகள் மற்றும் ஜெஸ்ஸிலூ என்ற தோழியுடன் லோக்யர் நதியில் குளிக்கச் சென்றுள்ளார். அதன் போது கிம்மின் குழந்தை ஒன்று எவரோ தன்னைத் தண்ணீருக்குள் மூழ்கடிக்க முயல்வதாக கூறியுள்ளார். எனினும் அதைப் பெரிதாக எடுத்து கொள்ளாமல்அனைவரும்குளித்துவிட்டு வீடு திரும்பியுள்ளனர்.

இதன் பின்னர் தாங்கள் எடுத்த ஒளிப்படங்களை பேஸ்புக்கில் கிம் பதிவேற்றம் செய்யும் வேளையில் அதிர்ச்சியடைந்துள்ளார். தனது குழந்தையின் பின்புறம் கறுப்பு நிறக் கண்களுடன், தலைமுடியை விரித்தபடி கோரமான உருவத்தில் பேய் ஒன்று இருந்தது. இதைப் பற்றி அவர் இணையத்தில் ஆராய்ந்த போது, சுமார் 100 வருடங்களுக்கு முன்பு அந்த நதியில் 11 வயது சிறுமி



இறந்ததாகவும், அதனால் அந்த இடம் குளிப்பதற்குத் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (14)


# தமது குடும்பத்தையே கொலை செய்ய கொலையாளியை நியமித்த சிறுவன்

வொஷிங்டன்,மார்ச் 13

அமெரிக்காவில் 14 வயது சிறுவன் ஒருவன் தனது குடும்பத்தாரைக் கொலை செய்ய ஆயிரத்து 200 அமெரிக்க டொலரைக் கொடுத்து தன்னுடைய சக மாணவனை கொலையாளியாக பயன்படுத்தியுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. குறித்த சிறுவன் தன்னுடைய தந்தை, வளர்ப்புத்தாய் ஆகியோரைக் கொலை செய்ய கொலையாளியை நியமித்துள்ளார். சிறுவனுடைய தந்தை தன்னுடைய அறையில் இருந்து கத்தி ஒன்றை கண்டெடுத்துள்ளார் அப்போது அதன் அருகில் இருத்த கடிதத்தில் மற்ற மாணவர்கள் தொல்லை தருவதாகவும் வீட்டில் உள்ளவர்களிடம் கூறினால் அவர்கள் அதனைக் கண்டிக்கவில்லை என்பதால் கொலை செய்ய ஆளை நியமித்ததாகவும் சிறுவன் எழுதி வைத்துள்ளான். பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து சிறுவனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (14)


புதியவை பயில்வோம்
பரிசுகள் வெல்வோம்
தினம் தினம் புதியவைகளை தேடிக் கற்கும் சிறார்களுக்கு, தமது அறிவினை விருத்தி செய்து கொள்ளும் விதம் சேர்.ஃப் எக்செல், புத்தகங்கள், புத்தகப்பை உள்ளடங்கலாக பாடசாலை உபகரணங்களை இலவசமாக வழங்கவுள்ளது.
சேர்.ஃப் எக்செல் 150 கிராம், 300 கிராம், 500 கிராம், 1கி.கிராம் என ஏதாவதொரு மேலுறையொன்றுடன் கீழ்காணப்படும் குறுக்கெழுத்து கூப்பனையும் பூர்த்தி செய்து, த.பெ 1266 கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
06
04
03
01
05
02
இடமிருந்து வலம்
1.—— நல்லதே செய்யும்
2.கறைகள் நீங்கும் —— நேரத்தில்
3.—— கல்வி கல் மேல் எழுத்து
மேலிருந்து கீழ்
4.—— குடம் தழும்பாது.
5.அவசரகாரனுக்கு —— மட்டு
6.—— பயமறியாது
உற்சாகமாய் பாடசாலை செல்ல
பெறுமதியான பரிசுகள்
400
ரூ.2500/-
பெறுமதியான பரிசுகள்
பெயர்: ..........
விலாசம்: ..........
..........
தொ.பே.இல: ..........
* மேம்படுத்தல் திட்ட கால எல்லை பெப்ரவரி 15 முதல் - ஏப்ரல் 15 வரை.
ரூ.50 இலிருந்து
Surf excel
WP/GT/4297

# வாசகர் திருமுகம்



## தரமான மோட்டார் படகை புதிதாக உருவாக்குதல்

முதலமைச்சரும் வடமாகாண சபை உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனும் இன்னும் பிரமுகர்களும் கடந்த ஜனவரி மாதம் 27ஆம் திகதி நெடுந்தீவுக்கு வருகை தந்திருந்தனர்.

பொது மக்கள் பெரும் தொகையானோர் சேர்ந்து அவர்களிடம் நெடுந்தீவுக்குத் தேவையான முக்கிய விடயங்களை நடைமுறைப் படுத்துமாறு கோரும் மனுவொன்றைக் கொடுத்தார்கள்.

அதில் மிகவும் முக்கியமானதும் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டியதுமான விடயம்,

நெடுந்தீவு–குறிகாட்டுவான் கடல் பிரயாணத்துக்குத் தரமான வேகம் கூடியமோட்டார் படகு தேவை என்பதாகும். மோட்டார் படகுகளை உருவாக்குவதற்கு மாகாண சபையால் பண ஒதுக்கீடு செய்து நெடுந்தீவு மக்களின் பிரயாணக் கஷ்டத்தை போக்கும்படி மக்கள் சார்பாக வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

இதைச் செயற்படுத்துவதற்கு ஒரு தரமான ஆலோசனை முன் வைக்கப்படுகின்றது. இது சாத்தியப்பட்டால் நெடுந்தீவின் கடற் பிரயாண சேவை மிகவும் நன்றாக அமையும் என்பதை உறுதி செய்ய முடியும்.

பருத்தித்துறை,வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் பெரிய தரமான வள்ளங்களைஉருவாக்கக்கூடிய அனுபவமுள்ளவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் உருவாக்கும் வள்ளங்கள் பெருங்கடல் அலைகளையும் சமாளித்துக் கொண்டு செல்லும் வல்லமை கொண்டவை. ஆகவே இதில் அனுபவம் உள்ளவர்களை நெடுந்தீவுக்கு அழைத்து வந்து "குமுதினி மோட்டார் படகை" பார்த்துஅதேபோலப்படகுஅமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டால் சாலச் சிறந்ததாகும் என மக்கள் கருதுகின்றனர்.

நெடுந்திவுக்கடல்ஏழுபாகத்துக்குக் கூடிய ஆழமானது. பெரு கற்களைக் கொண்டுள்ளது. அலைகள் மலைபோல எழும்பும் கடலாகும். இந்தக் கடல் அலைகளைச் சமாளித்துக்கொண்டு பயணம் செய்யக் கூடியது குமுதினி மோட்டார் படகுதான்.

ஆகவே படகுகளை அமைத்து சேவையில் ஈடுபடுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மிகவும் விரைவாகச் செயற்படுத்தினால் மிகவும் உதவியாக இருப்பதுடன் மக்களும் நன்றி உடையவர்களாக இருப்பார்கள் என்பதையும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

*சி.வ.சங்கரப்பிள்ளை.*

## பஞ்சம் வருமுன் காத்துக் கொள்வோம்

உணவு உற்பத்தி போதிய அளவில் அதிகரிக்கப் படாததால் தெற்காசிய மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் அபரிமித சனத்தொகை அதிகரிப்புக் காரணமாக உணவுப் பஞ்சம் ஏற்படுமென விஞ்ஞானிகள் எதிர்வு கூறுகின்றனர். உணவு உற்பத்தியைப் பெருக்கி நெருக்கடியைத் தவிர்க்க அவர்கள் கூறும் உத்திகள் பலவாகும்.

போதிய நெல் உற்பத்தியைக் காணாத விவசாயிகள் இனங்காணப்பட்டு அவர்கள் அதிக விளைச்சலைப் பெற்றுக் கொள்ள ஆவன செய்தல் வேண்டும். அவர்கள் சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளாகவே இருப்பர்.

வறட்சிப் பிரதேசங்களில் வறட்சியைத் தாங்கும் நெல்லினங்கள் பயிரிடப்படல் வேண்டும்.


நெற்பயிர் மழை வெள்ளத்தில் மூழ்கி அழியும் பிரதேசங்களில் வெள்ளத்துக்குத் தாக்குப் பிடிக்கும்நெல் இனங்கள் கண்டறியப்பட்டு அறிமுகம் செய்யப்படல் வேண்டும்.

உவர் நீர்பிரதேசங்களில் ஏற்ற இனங்கள் பயிர் செய்யப்படல் வேண்டும்.

மேற்படி நடவடிக்கைகளை விவசாயம் சம்பந்தப்பட்ட விஞ்ஞானிகளும் அலுவலர்களும் மேற்கொள்ளும் போது எமது பிரதேசத்தை சிறப்பான உற்பத்திப் பிரதேசமாக மாற்றிக் கொள்ளலாம். அவர்கள் இந்தச் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டுமென விண்ணப்பிக்கின்றேன். சிறப்பான விவசாயச் சூழலானது மக்களைப் பஞ்சத்திலிருந்து காக்கும், வருமுன் காப்போமாக.

*வ.நடராசா, நெல்லியடி.*

கேலிச் சித்திரம்




# மோடி வருகையால் கிடைக்குமா தீர்வு?

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி நாளை சனிக்கிழமை இலங்கைக்கு இரு நாள் பயணம் மேற்கொள்கிறார். நரேந்திரமோடியின் வருகை இலங்கையில் பலத்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது. இலங்கை வரும் அவர் சிங்கள அரசியல் தலைவர்களுடன் தமிழ் அரசியல் தலைவர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்துகிறார்.

28 ஆண்டுகளின் பின்னர் இலங்கைக்கு வருகை தரும் இந்தியப் பிரதமர் என்ற சிறப்பைப் பெறவுள்ள மோடி, யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் முதலாவது இந்தியப் பிரதமர் என்ற பெருமையையும் பெறுகிறார். இதனால் தான் மோடியின் வருகை குறித்து அதிக் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

மோடியின் இலங்கைப் பயணமானது இலங்கையில் நீடித்த அமைதியையும், ஈழத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்திரத் தீர்வையும் ஏற்படுத்தும் ஒரு வடிகாலாக அமைய வேண்டும் என தமிழகக் கட்சிகள் பலவும் வலியுறுத்தியுள்ளன. அதேநேரத்தில் இலங்கையில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளும் இதனையே சுட்டிக்காட்டி உள்ளன.

இலங்கையின் அண்டை நாடாக – நல்ல நண்பனாக இந்தியா செயற்பட்டு வருகின்றமை தெரிந்த விடயமே. இலங்கையில் ஆட்சியில் அமரும் அரசுகளுக்கு இந்தியா தொடர்ந்தும் உதவி அளித்து வருகின்றது. வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது·புலிகளை அழித் தொழிப்பதற்கான உதவிகளையும் இந்தியா வழங்கியது என்பது வெளிப்படையானதொன்று.

இவ்வாறு இலங்கைக்குத் தொடர்ச்சியாக உதவியளிக்கும் இந்தியா இலங்கையில் நிலவி வரும் உள்நாட்டுப் பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் 13ஆவது திருத்தச் சட்டத்துக்குப் பதிலீடாக, கூடுதல் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் முறைமை ஒன்று அறிமுகப் படுத்த உதவ வேண்டும் என்று வடக்கு மாகாண முதல மைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

13ஆவது திருத்தச்சட்டம் தமிழர்களின் பிரச்சினைக்கு இறுதியான தீர்வாக இருக்க முடியாது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை நாம் வரவேற்கிறோம். அவர் ஒரு நண்பர். வடக்குக்கு வரும் அவரது, எம்மைப் பற்றிய கரிசனைகளை மதிக்கிறோம். அவரிடம் நாம், 1987ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இந்திய– இலங்கை உடன்பாட்டுக்கு அமைய உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை மீளாய்வு செய்ய வேண்டிய தருணம் இதுவென்று பரிந்துரைப்போம். அதற்குப் பதிலாக, வடக்கு,கிழக்கிற்கு கூடுதல் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அதிகாரப்பகிர்வுக்காக வாதிடுபவர் என்ற வகையில், மோடி இலங்கையின் நிலைமையை ஏற்றுக் கொள்வார். குறிப்பாக, 13ஆவது திருத்தச் சட்டத்தின் குறைபாடுகளை அவரால் புரிந்து கொள்ள முடியும் என்பதில் சந்தேகமில்லை. அவரது பயணமும், புரிதலும், எமது அரசமைப்பு பிரச்சினைகளுக்கு முடிவு கட்டுவதற்கு மிகவும் முக்கியமானவை.

இந்தியாவின் மத்திய, மாநில அரசுகளுக்கிடையில் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும், அரசமைப்பினால் தான், மோடியின் சிறந்த தலைமைத்துவத்தின் மூலம், குஜராத்தை மாற்றியமைப்பது சாத்தியமானது. ஆனால், இலங்கையின் ஒற்றையாட்சி அரசமைப்பில் அது சாத்தியமற்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

வடக்கு முதலமைச்சரின் இந்தக் கருத்துக் குறித்து பிரதமர் மோடி அதிக அக்கறையும் கவனமும் செலுத்த வேண்டும். நீண்ட காலமாக இழுபட்டுக்கொண்டு செல்லும் இந்த இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றே தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

அதேவேளை, சீனாவை இலங்கையிடம் இருந்து பிரிப்பதற்கான முயற்சிகளை இந்தியா கனகச்சிதமாக மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு அங்கமே கொழும்புத்துறைமுக நகர திட்டம் இடைநிறுத்தப்பட்டமையாகும். இந்த வேளையிலேயே மோடியும் இலங்கைக்கு வருகிறார்.

இந்தப் பிராந்தியத்தில் தனது பாதுகாப்புத் தளங்களை அமைப்பதன் மூலம் இந்தியாவைச் சுற்றிவளைப்பதே, சீனாவின் திட்டமாகும். தனியே இந்தியா மட்டுமன்றி இலங் கையும் கூட தனது நாட்டை சீன இராணுவம் பயன்படுத் துவதை விரும்பவில்லை. இலங்கையின் புதிய அரசு இதையெல்லாம் விரும்பவில்லை.

துறைமுகங்கள், அணைக்கட்டுகள் மற்றும் ஏனையவற்றை சீனா இந்தப் பிராந்தியத்தில் நிறுவுவது இந்தியாவுக்குப் பெரும் கவலையை அளிக்கிறது. அவர்களின் கடற்பயண வழிகள், பட்டுப் பாதை, வீதி இணைப்புகள், தொடருந்துப் பாதை இணைப்புகள், எல்லாமே, அடிப்படையில் இந்தியாவைச் சுற்றிவளைக்கும் திட்டத்தின் ஒரு பகுதி தான். இந்தியப் பிரதமர் இந்த விவகாரங்கள் குறித்து இலங்கை ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவார் என்று கூறப்படுகின்றது.

இந்தியாவுக்கு எதிராக இலங்கையை மற்றொரு நாடு பயன்படுத்திக் கொள்வதற்கு அனுமதிக்கப் போவதில்லை என்று இலங்கை இந்தியாவுக்கு வாக்குறுதி கொடுத்திருப்பதாக இந்திய ஊடகங்கள் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தன.

இவ்வாறான நிலையில் இலங்கை வரும் மோடியிடம் தமிழர்கள் எதிர்பார்ப்பது நிரந்திரத் தீர்வுக்கான ஒரு வழியை ஏற்படுத்த வேண்டும் என்பதையே.தமிழர் பகுதியான யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொள்ளும் முதல் இந்தியப் பிரதமர் என்ற பெருமைப் பெறவுள்ள மோடி, தமிழர்களுக்கான தீர்வை வழங்குவதற்கு இலங்கை அரசுக்கு உரிய அழுத்தத்தை கொடுப்பாரேயானால், அதன் மூலம் தமிழர் வரலாற்றில் அவர் ஒரு கதாநாயகன் ஆவார் என்பதில் சந்தேகம் இல்லை.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பூச்சியத்துக்குள் ஓர் இராச்சியம் அதேவழி நாடாதே புதிய அரசே.....

வார்த்தைகளை விடவும், இலங்கை அரசு ஆற்றவேண்டியவை மிக அதிகமாகும். பொறுப்புக்கூறல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், ஏற்பாடுகள் குறித்து, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு தனது அறிக்கையை இலங்கை அரசு சமர்ப்பித்தாக வேண்டும்.

கடந்தவாரம், எமது நாட்டுக்கு வருகை தந்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ - மூனின் உதவிச் செயலர் ஜெப்ரி பெல்ட்மன் மேற்கண்டவாறு வலியுறுத்தி உள்ளார்.

தலைநகர் கொழும்புக்கு மட்டுமன்றி வடக்கின் தலைநகர் யாழ்ப்பாணத்துக்கும் வருகை தந்திருந்த அவர், பல தரப்பினர்களுடனும் சந்திப்புக்களை நடத்தி, நிலைமைகளை விரிவாகக் கேட்டறிந்தார்.

ஜெனிவா சென்றடைந்ததும் வாராந்தச் செய்தியாளர் மாநாட்டில் வைத்து, மேற்கண்ட தமது அவதானிப்புக்களை மிக விஸ்தாரமாக வெளிப்படுத்தினார்.

வடக்கில் உள்ள மக்களின் மனக்குறைகளுக்கு பொறுப்புக் கூறும் தீர்வு மிக அவசியம். இலங்கை வாழ் சகல மக்களினதும் கவலைகளுக்கும் முடிவு காண்பதற்கு அது மிகப் பெரிய அளவில் உதவும் --

அதேவேளை, மனித உரிமைகள் பேரவையில், 2009 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கைக்கு அமைவாக, அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான நம்பிக்கையைக் கட்டி எழுப்ப வேண்டியது மிகவும் அவசியம் --

அதனை நாடி, இலங்கையின் புதிய அரசு செயற்படுவது புலப்படுகிறது. அதனை மேலும் ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் தேவை --

தமிழ் மக்களின் பிரதேசங்களில், ஊன்றிப் படர்ந்திருக்கும் அரச ஒடுக்குமுறைகளைக் களைந்து செயற்பட வேண்டிய தேவை அதிக அளவில் உள்ளது --

வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள மக்களின் நிலங்களை விடுவிப்பது போன்ற சாத்தியமான செயற்பாடுகளைப் புதிய அரசு தாமதம் காட்டாது செயலாக்க வேண்டும் --

அவை எல்லாவற்றுக்கும் மேலாக, புதிய அரசு தனக்குரிய கடப்பாட்டை நிறைவேற்றுவது மிகப்பிரதானமாகும். ஆனால், வடக்கு வாழ் மக்கள் மத்தியில் இப்போதைய புதிய அரசு குறித்து இன்னமும் அவநம்பிக்கையே மேல் எழுந்துள்ளது. அவற்றைத் தணித்துத் தவிர்ப்பது, கொழும்பு அரசின் கைகளிலேயே உள்ளது என்பதையும் - ஜெப்ரி பெல்ட்மன் ஊன்றி அழுத்தித் தொட்டுக் காட்டத் தவறவில்லை.

எதுவாயினும், பொறுப்புக் கூறுதலில் இருந்து இலங்கைஅரசு நழுவி விடுவதற்கு, எந்த வகையிலும் செயலாற்றக் கூடாது என்பதையும் --

ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ - மூனின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர், கண்டிப்பான - காத்திரமான தொனியில் எச்சரித்துள்ளார்.


அதனை ஊன்றிக் கருத்தில் எடுத்து, இந்த மாத இறுதிக்குள் -- இன்னமும் பத்தொன்பது நாள்களுக்குள் -- வலி.வடக்கு மற்றும் வலி. கிழக்குப் பகுதிகளில், அந்தப் பிரதேசங்களின் ("பூர்வீக") மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப் படுவார்கள் என்று அரச அறிவிப்பு வெளிவந்துள்ளது.

மைத்திரிபால சிறிசேனவின் -- அவரது அரசினது -- நல்லெண்ண சமிக்ஞைகள் வரவேற்கத்தக்கவை என்று வெளிநாட்டுத் தலைவர்கள் மற்றும் இராஜதந்திரிகள் சிலாகிக்கலாம். ஆனால், இலங்கையின் அரசியல் வரலாற்றில் நாட்டின் தலைவர்கள் சொன்னதைச் செய்வது என்பது, வழமைப் பிரகாரம் பூச்சியத்துக்குள் ஓர் இராச்சியம் என்ற நிலை என்பதை சொல்லித் தெரியவேண்டியதில்லை.

தமது ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைப்பதற்காக, தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் இனவாதத்தையும், பிராந்திய வாதத்தையும் தாண்டி ஆட்சியைக் கைப்பற்றுவதை ஒரு வாய்ப்பாடாக -- சூத்திரமாகக் -- கொண்டுள்ளமை கடந்த ஆறு தசாப்த (59 ஆண்டுகள்) காலமாக நெட்டுயர்ந்து தொடர்கிறது.

அனைத்துலக அரசியல் தலைவர்கள் அதனை மறந்துவிட மாட்டார்கள். எனவே புதிய அரசின் பிரதானிகள், தமிழ் மக்களை ஏமாற்றக் கூடாது. நல்லாட்சிக்கு அதுவுமோர் பிரதான அலகு என்பதையும் மறந்துவிடலாகாது.

■ தி.அமுதன்



# மோடியின் வருகையுடன் ஈழத்தமிழர்களுக்கு விடிவு கிடைக்கட்டும்

அன்று 2008ஆம் ஆண்டு ஜுலை மாதம் 22ஆம் திகதி இரவு 7 மணி பரபரப்பான சூழ்நிலை. ஆட்சி கவிழுமா இல்லை தொடருமா என்பதை அறிய இந்திய மக்கள் மட்டுமன்றி இலங்கை மக்கள் குறிப்பாக ஈழத் தமிழ் மக்கள் எதிர்பார்த்து இருக்கின்றனர். இந்தியத் தொலைக்காட்சிகளில் மாத்திரமின்றி இலங்கைத் தொலைக் காட்சிகளிலும் நேரலையாகப் போய்க் கொண்டிருக்கின்றது.

வன்னி நிலப் பரப்பில் இறுதிக் கட்டப் போர் எட்டியிருந்த வேளை. இந்தியாவில் ஆட்சி மாற்றத்தை ஈழத் தமிழ் மக்கள் விரும்பியிருந்தனர். ஏனெனில், போருக்கு இந்திய அரசு சகல வகையிலும் உதவி செய்து கொண்டிருந்தது. ஆனாலும் ஈழத் தமிழ் மக்களின் விருப்பத்திற்கு மாறாக, மன்மோகன் சிங் அரசு 19 வாக்குகளால் தப்பித்துக் கொண்டு ஆட்சியில் அமர்ந்தது.

**16.05.2009**

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்தன. மறுபுறம் ஈழத்தில் நடந்து கொண்டிருந்த போர் முள்ளிவாய்க்காலில் இறுதிக் கட்டத்தை எட்டிக் கொண்டிருந்தது. ஈழத் தமிழன் சேடம் இழுத்துக் கொண்டிருந்த நேரம். இந்தியாவில் இந்தத் தருணத்திலாவது ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, ஈழத்தமிழர்கள் காப்பாற்றப்பட மாட்டார்களா என்ற நப்பாசையுடன் ஏங்கிக் கொண்டிருந்த நேரம். தமிழ் மக்களின் விருப் பத் திற்கு மாறாக, மீண்டும் மன்மோகன் சிங் தலைமையிலான அரசு ஆட்சி அமைத்தது.

**16.05.2014**

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. இந்தியாவில் ஆட்சி மாற்றம் ஏற்படுகின்றது. இந்த ஆட்சி மாற்றத்தினால், இந்திய மக்கள் மகிழ்சியடைந்தார்களோ இல்லையோ, ஈழத் தமிழ் மக்கள் அளவு கடந்த மகிழ்ச்சியடைந்தனர். ஏனெனில், தமிழர்களை கருவறுத்தகாங்கிரஸ், ஆட்சியிலிருந்து தூக்கி எறியப்பட்டிருந்தது.

பாரதிய ஜனதாக் கட்சியின் ஆட்சியையும், புதிய பிரதமர் நரேந்திர மோடியையும் ஈழத் தமிழ் மக்கள் நம்பினர். விரும்பியோ விரும்பாமலோ, ஈழத் தமிழர் பிரச்சினை இந்திய அரசியலுடன் இரண்டறக் கலந்து விட்டது. இதனால், மோடி அரசினால் விடுதலை கிடைக்கும் என்று ஈழத் தமிழ் மக்கள் நம்பினார்கள். ஆயிரம் வோல்ட் பல்பின் பிரகாசமாக இருந்தது ஈழத் தமிழர்களின் முகங்கள்.

போரின் போதும் – போரின் இறுதிக் கட்டத்திலும் இந்தியாவில் ஆட்சி மாற்றத்தை எதிர்பார்த்த ஈழத் தமிழ் மக்களுக்கு ஏமாற்றம் கிடைத்தது. அது மட்டுமல்லாமல், ஈழத் தமிழ் மக்களின் விடிவுக்காக – பாதுகாப்புக்காக போராடிய விடுதலைப் புலிகள் இயக்கமும் இந்திய அரசினால் – காங்கிரஸ் அரசினால் அழிக்கப்பட்டது.

இந்தப் பின்புலங்களினாலேயே, மோடியின் ஆட்சியை ஈழத் தமிழ் மக்கள் விரும்பியிருந்தனர். மோடி கடந்த ஆண்டு பதவியேற்கும் போது, தமிழ் மக்கள் ஆயிரம் வோல்ட் பிரகாசத்துடன் அவரை வரவேற்றிருந்தாலும், தற்போது அந்தப் பிரகாசம் பத்து வோல்டில் கூட இல்லை என்பதுதான் உண்மை.

இந்திய மத்திய அரசு, எப்போதும் தனது பிராந்திய நலனுக்காகவே ஈழத் தமிழ் மக்களை பகடைக் காயாகப் பயன்படுத்துகின்றது என்ற விடயத்தை மோடியும் செயலுருவில் காட்டத் தொடங்கினார். தமிழ் மக்கள் வேண்டாம் என்று நிராகரித்த 13 ஆவது அரசியல் சீர்திருத்தத்தையே நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் தொடங்கி, இலங்கை அரசுடன் நெருக்கமான உறவைப் பேணுவதற்காக தமிழர் தரப்பு விடயங்களை தள்ளி வைப்பது வரையில் எல்லாம், கடந்த அரசின் பாணியிலேயே மோடி மேற்கொண்டு வருகின்றார்.

ஈழத் தமிழ் மக்கள் மோடியிடம் எதிர்பார்த்தது இவையல்ல. நிரந்தர அரசியல் தீர்வுக்கான வழிவகைகளை அவர் ஏற்படுத்தித்தருவார் என்றே எண்ணினார்கள். இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி, எப்படி பங்களாதேஷை தனிநாடாக்கினாரோ, அந்தளவு தூரத்துக்கு இல்லாவிடினும் ஆகக்கூடிய தீர்வை வழங்குவதற்குகூட இலங்கை அரசை கிடுக்கிப் பிடியில் வைப்பதற்கு மோடி முயற்சிக்கவில்லை. இவை எல்லாமுமே, மோடி மீதான ஈழத் தமிழ் மக்களின் காதலை கொஞ்சம் கொஞ்சமாக கசப்பாக மாற்றிக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறானதொரு சூழ்நிலையி லேயே மோடி இலங்கைக்கு இன்று வருகை தருகின்றார். நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். முதன் முறையாக இந்தியப் பிரதமர் ஒருவர் ஈழத்துக்கு வருகை தருகின்றார். கடந்த காலப் போரின் வடுக்கள் தொடக்கம் இங்கு நடந்தவை – நடந்துகொண்டிருப்பவை எல்லாமே மோடிக்குத் தெரியும்.

ஆனால் அவற்றை அவருக்கு உணர்வுரீதியாக உட்புகுத்த வேண்டும். மோடியின் மனதில், ஈழத் தமிழ் மக்களுக்கு விடிவு பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்ற வேண்டும். இந்தியாவை நம்பியதால், ஈழத் தமிழ் மக்கள் நடுத்தெருவில் நிற்கின்றார்கள் என்பதை மோடி உணர வேண்டும்.

வெறுமனே மோடி யாழ்ப்பாணத் துக்குவந்தார், சென்றார்என்றநிலைமை தோன்றக் கூடாது. மோடியின் இந்தப் பயணம், எமக்கு வரலாறு மீண்டும் ஒரு முறை தந்திருக்கின்ற சந்தர்ப்பம். இந்தியாவைத் தாண்டி எமக்கான தீர்வு என்பது இல்லாத ஒன்று. எனவே இந்தியப் பிரதமருக்கு உறைக்கக் கூடிய விதத்தில் எங்கள் பிரச்சினைகளைக் கொண்டு செல்ல வேண்டும்.

இதன் மூலம், ஈழத் தமிழ் மக்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வை எட்ட முடியும். மோடி மனது வைத்தால், இப்போதைய சூழ்நிலையில் முடியாதது எதுவுமில்லை. எந்தக் கல்நெஞ்சக்காரனையும் கரைய வைப்பதற்கு முடியும். எனவே, மோடியின் யாழ்ப்பாணப் பயணத்துடன் தமிழ் மக்களின் வாழ்வில் விடிவு வரவேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தையும் தவற விட்டால், இன்னமும் எத்தனை ஆண்டுகளுக்கு காத்திருக்க வேண்டுமோ என்பது தெரியாது.

வாய்த்த சந்தர்ப்பத்தைத் தமிழ்த் தலைவர்கள் மாத்திரமல்ல, தமிழ் மக்களும் பயன்படுத்த வேண்டும்.

சேரலாதன்

# துணிவுபடைத்த தலைவர்தான் நாட்டின் இன்றைய தேவை

தமது அரசில் அங்கம் வகிக்கும் அனைவரையும் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கக்கூடிய துணிவு படைத்த தலைவரொருவர் இல்லாததன் விளைவுகளை இலங்கை அனுபவித்து வருகின்றது. கொள்கைகளில் வேறுபாடுகளைக் கொண்டவர்களின் கலவையால் உருவானதுதான் தற்போதைய அரசு. அதனது ஆயுள் 100 நாள்களுடன் முடிந்து விடுமெனக் கூறுவோரும் உள்ளனர். பொதுத் தேர்தல் இப்போதைக்கு வேண்டாமென ஒரு சாராரும், ஏப்ரல் மாதம் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு பொதுத் தேர்தலை நடத்தியே தீரவேண்டுமென வேறொரு சாராரும் வற்புறுத்திக் கூறி வருகின்றனர். –இவ்வாறு ஆளுக்கொரு விதமா கக் கருத்துக்களை வெளியிட்டு நிலைமையைக் குழப்பி வருகின்ற போதிலும் இதைக் கட்டுப்படுத்துவதற்கான துணிவும், மனோதிடமும் தற்போதுள்ள அரசுத் தலைமையிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இலங்கைக்கு இன்று வருகை தரும் நிலையில் எல்லை தாண்டி வருகின்ற தமிழக மீனவர்களை சுடுவதில் தவறில்லையென பிரதமர் ரணில் தெரிவித்த கருத்து, இந்தியாவில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் பெரும் உணர் வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

> ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அந்தப் பதவியில் அமர்ந்திருப்பதையோ அல்லது எதிர்காலத்தில் அமர்வதையோ அவர்கள் விரும்பவில்லை என்பதும் தெளிவாகத் தெரிகின்றது.


சந்தர்ப்பம் அறியாது இலங்கைப் பிரதமர் வெளியிட்ட அந்தக் கருத்து இந்தியப் பிரதமருக்கு சங்கடத்தை ஏற்படுத்தவே செய்யும். மோடியின் வருகையின் போது மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இரண்டு நாடுகளின் மீனவர்களும் காத்திருக்கும் நிலையில் ரணிலின் கருத்து அதிர்ச்சியை ஏற்படுத்தவே செய்யும். ஆனால் ஜனாதிபதி இதைக் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது, இவ்வாறானதொரு நிலை காணப்படவில்லை. சகல விடயங்களையும் அவர் தமது கட்டுப்பாட்டினுள் வைத்துக் கொண்டார். அவரது விருப்பத்துக்கு எதிரான கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு அவருடன் இருந்தவர்களுக்குத் துணிவு இருக்கவில்லை. இதற்கு மஹிந்த மீதான பயம் ஒரு காரணமாக இருந்தாலும், அனைத் தும் மஹிந்தரின் கட்டுப்பாட்டினுள் இருந்தன. ஆனால், தற்போது அவ்வாறானதொரு நிலையைக் காண முடியவில்லை.

ஜனாதிபதி தலைமை தாங்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும், ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினரும் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படுவது இதற்கான பிரதான காரணமாகக் கூறப்பட்டாலும் ஜனாதிபதி என்ற வகையில் எவரையும் கட்டுப்படுத்துவதற்கு அவரால் முடியும்.

இதேவேளை– ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தரான நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்த சில கருத்துக்கள் தற் போதைய அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தவே செய்யும். அரசமைப்பு திருத்த வரைவுகள், அவசரமாக நிறைவேற்றப்படக் கூடாதெனவும் அவை சாதாரண சட்ட வரைவுகளாகவே கொண்டுவந்து நிறைவேற்றப்பட வேண்டுமெனவும், தெரிவித்த அவர், தமது விருப்பத்துக்கு மாறாக அரசு நடந்து கொள்ளுமாயின் 120 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை அரசுஇழந்து நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டு விடுமென எச்சரிக்கை செய்துள்ளார். ஜனாதிபதி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக உள்ள போதிலும் அதே கட்சியைச் சேர்ந்த நிமல் சிறிபாலடி சில்வா அதட்டும் குரலில் தெரிவித்த கருத்துக்கள் பாரதூரமானவை என்றே கருதவேண்டும்.





> “ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தரான நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்த சில கருத்துக்கள் தற் போதைய அரசுக்கு நெருக்கடியை ஏற் படுத்தவே செய்யும்.”

மேலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் தமது கட்சியைச் சேர்ந்த ஒருவரே பிரதமராக வர வேண்டும் என்ற கருத்தைக் கொண்டுள்ளதை அனுமானிக்க முடிகின்றது. ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிர மசிங்க அந்தப் பதவியில் அமர்ந்திருப்பதையோ அல்லது எதிர் காலத்தில் அமர்வதையோ அவர் கள் விரும்பவில்லை என்பதும் தெளிவாகத் தெரிகின்றது. ஜனாதி பதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு, பிரதம மந்திரியே எதிர்காலத்தில் அதிகாரம் படைத்தவராக விளங்கப் போகும் நிலையில் அந்தப் பதவியைத் தமது பொறுப்பில் வைத்துக் கொள்ளவே அவர்கள் விரும்புவார்கள். ஆனால், மஹிந்தவை வீழ்த்துவதற்கு வியூகம் வகுத்து மைத்திரியை அதிகாரத்தில் அமர்த்திய ஐக்கிய தேசியக் கட்சியினர் இதை ஒரு போதுமே ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

எனவேதான் அரசியல் சூழ் நிலைகளை நன்கு கணிப்பீடு செய்து துணிகரமான முடிவு களை எடுக்கக் கூடிய தலைவர் ஒருவர் தான் இந்த நாட்டின் முக்கிய தேவையாகக் காணப்படுகின்றது. மேலும், நல்லபிள்ளையைப்போன்று வேடம் பூண்டு தாம் சார்ந்த மக்களின் அனுதாபத்தை மெல்லமெல்ல சம்பாதித்து வரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் எதிர்கால அரசியலில் பெரும் சவாலாக விளங்கப் போகின்றார்.

இவை யாவற்றையும் துணிவுடன் எதிர்கொண்டு, நல்லாட்சியைத் தொடர்வதற்கான செயற்பாடுகளைத்தான் மக்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் எதிர்பார்த்து நிற்கின்றனர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | | 1 | | | 7 | 4 |
| 7 | | 8 | | | 9 | | | |
| | | | 2 | | | 3 | | |
| 5 | 8 | 7 | 3 | | | | | 9 |
| 9 | 4 | 3 | 7 | | 1 | 6 | 5 | 2 |
| 6 | | | | | 4 | 8 | 3 | 7 |
| | | 1 | | | 7 | | | |
| | | | 8 | | | 1 | | 3 |
| 2 | 9 | | | 4 | | | 8 | |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 8 | 3 | 7 | 5 | 9 | 2 | 4 | 1 |
| 1 | 9 | 2 | 6 | 4 | 3 | 7 | 8 | 5 |
| 4 | 7 | 5 | 8 | 1 | 2 | 9 | 6 | 3 |
| 3 | 6 | 9 | 5 | 8 | 1 | 4 | 7 | 2 |
| 7 | 4 | 1 | 9 | 2 | 6 | 5 | 3 | 8 |
| 5 | 2 | 8 | 4 | 3 | 7 | 1 | 9 | 6 |
| 8 | 5 | 6 | 2 | 9 | 4 | 3 | 1 | 7 |
| 9 | 1 | 7 | 3 | 6 | 5 | 8 | 2 | 4 |
| 2 | 3 | 4 | 1 | 7 | 8 | 6 | 5 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....

## மன உறுதியுடன் இருங்கள்

ஒவ்வொரு மனித இதயத்தின் உள்ளும் மிக ஆழத்தில் ஆதிஅந்தமில்லாத இறைவன் ஒளிந்து கொண்டிருக்கின்றான்.அவனை உணர்ந்தவனே உண்மையை உணர்ந்தவன் ஆவான்.

தன்னுடைய பலவீனங்கள், குற்றங்கள், பாவங்கள் எல்லாவற்றையும் வேறொருவரின் மேல் சுமத்துவது மனித இயல்பாக இருக்கிறது. எம்முடைய தவறுகளை உணர மறுப்பது தான் இதற்குக் காரணம்.

எத்தனை நல்ல நூல்களை வாசித்தாலும் எம்மால் தூயவராக முடியாது. உண்மையை நாம் உணர வேண்டுமானால், தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். அப்போது மெய்யுணர்வு எம்முள் மலரத் தொடங்கும்.

உங்களுக்குப் பிடித்ததை கடைப்பிடிப்பதுபோல, மற்றவர்களும் அவரவருக்கு விருப்பமானவற்றை பின்பற்றும் சுதந்திரத்தைக் கொடுங்கள். ஏனென்றால், சுதந்திரம் இல்லாத எதுவும் வளர்ச்சி அடைவதில்லை. எந்த விடயத்தையும் நன்கு ஆய்ந்து பாருங்கள். கொண்ட கொள்கை மற்றும் குறிக்கோளில் மன உறுதியுடன் இருங்கள்.

# தினையளவு புண்ணியம் மலையளவு பயன்




காவிரிக் கரையில் சிவலிங்கத்தின் மீது காய்ந்த சருகுகள் வீழ்வதைக் கண்டு எச்சில் நூலால் ஒரு சிலந்தி பந்தரிட்டது. இந்தச் சிவ புண்ணியத்தால் சிலந்தி மறுபிறப்பில் சோழ நாட்டில் கோச்செங்கட் சோழனாகப் பிறந்து தமிழகத்தை ஒரு குடையின் கீழ் ஆட்சி புரிந்தது. சிவபெருமானுக்கு 70 சிவாலயங்களும் திருமாலுக்கு 3 திருக்கோயில்களும் கட்டி வழிபாடு செய்து சிவபதம் பெற்றது.

வேதாரணியத்தில் அணைகிற நெய் விளக்கைத் தீண்டிய சிவபுண்ணியத்தால் எலி,பலிச் சக்கரவர்த்தியாகப் பிறந்தது. பலிச் சக்கரவர்த்தியின் பெருமையை அளவிடமுடியாது. ஆதலால் அணுவளவும் பாவம் செய்யாது சிவபுண்ணியம் செய்து நலமடைவோமாக.

நாம் இப்போது நுகர்கின்ற இன்ப துன்பங்களுக்கு முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைகளே காரணமாகும். அவரவர் செய்த வினை ஊழாக மாறி உருத்து வந்து ஊட்டும்.

நம் உடம்பின் நிழல் நாம் நடந்தால் நம்மைத் தொடர்ந்து வருவதைப்போல, நாம் செய்த வினையும் நம்மைத் தொடர்ந்து வரும். இறைவன் நடுநிலை தவறாதவன், பாரபட்சம் இல்லாதவன். நாம் செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப சுகதுக்கங்களை வகுத்து விதிக்கிறான். இறைவனுடைய அருளாணையால் விதிக்கப்பட்டது விதி எனப்படுகிறது. விதியை வென்றவர் எவரும் இலர். விதி வழி மதி செல்லும்.

நாட்டையும், நகரத்தையும், பொன்னையும், மணியையும், விலையுயர்ந்த உடைகளையும் தூசாக எண்ணித் துறந்து உடுத்த உடையுடன் கானகம் சென்ற குணவதியாகிய சீதா தேவி ஒரு மானை விரும்பினாள். கணவனுக்குக் கட்டளையிடாத அந்தக் கற்புக்கரசி கணவனைப் பார்த்து "இந்த மானைப் பிடித்துக் கொடும்" என்று ஏவினாள். இதற்குக் காரணம் விதிதான். விதியின் வலிமையை யார் வெல்ல முடியும்.

## நாளை

**மாசி-30**
**சனிக்கிழமை**
**14.03.2015**

திதி:நவமி பி.இ.04.56 வரை
நட்சத்திரம்: மூலம் மு.இ.08.44 வரை
சுபநேரம்: 3.21.-04.51 வரை
இராகுகாலம்: 09.21-10.51 வரை

# தவக்காலச் சிந்தனை



## நோன்பின் மகத்துவம் காப்போம்

நோன்பு புனிதமானது. இறைவனுக்கும் எமக்கும், எமக்கும் பிறருக்கும் இடையேயுள்ள உறவை வலுப்படுத்துவதும், எமது புலன்களை அடக்கி அகத்தைத் தூய்மையாக்கி இறை செயற்பாட்டுக்கு இசைவாக்கம் அளிப்பதும் நோன்புதான். இன்று பல்வேறு காரணங்களுக்காக உடல், உள ஒறுத்தல் கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் நோன்புக்கு முன்னிருந்த மனநிலையில் மாற்றம் ஏற்படுகிறதா என்பது தான் கேள்வி? மனமாற்றமும் தகுந்த காரணமுமில்லாது சம்பிரதாயத்துக்காக நோற்கும் நோன்பு பயன் தருமா?

"மனங்களை உலகின்பால் அலையவிட்டுக் கொண்டு இறைவா! இறைவா! எனக் கூக்குரலிடுவதை இறைவன் விரும்பமாட்டான். நீங்கள் நோன்பிருக்கும் நாளில் உங்கள் ஆதாயத்தையே தேடுகிறீர்கள். வேலையாள்களை ஒடுக்குகின்றீர்கள். வழக்காடவும், சண்டையிடவும் கொடுங்கையால் தாக்கவுமே நீங்கள் நோன்பிருக்கிறீர்கள். இத்தகைய நோன்பின் குரல் உன்னதத்தில் கேட்கப்படாது. இதையே நீங்கள் நோன்பு என்றும், ஆண்டவருக்கு உகந்த நாள் என்றும் அழைக்கிறீர்கள்.(எசா 58: 3-5)

அறையைப்பூட்டி முகத்தை விகாரப்படுத்தி நடைமுறை மரபுகளுக்காக நோன்பிருப்பதை விடுத்து, வெளியே இறங்கி சமுதாய அன்புச் சேவைகளை முன்னெடுப்போம். எமது பாவங்களுக்குப் பரிகாரமாகவும் ஆன்மிக சமூக விடுதலையளிக்கும் பொது நோக்கில் நோன்பிருந்து தம் உயிரையே பரிசாகத் தந்த இயேசு எமக்கு நலமான வாழ்வளிப்பார். எமது மன்றாட்டுகளும் கேட்கப்படும். இதுவே ஏற்புடைய நோன்பாகும்.

**எஸ்.யேசுதாஸ்,கொழும்புத்துறை.**




| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 20–30 | 20 | 30 | 40 | 20/40 | 30/50 | 40 | 15 |
| கத்தரி | 70–90 | 70–80 | 80–100 | 80 | 60–100 | 120–140 | 80 –120 | 50–60 |
| கரட் | 90 –100 | 110 | 100–120 | 100 | 60–80 | 120 | 120–140 | 100 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 50 | 30–40 | 50 | 40–60 | 35–40 |
| பயிற்றை | 80–100 | 70–80 | 70–80 | 100 | 60–100 | 120 | 80–120 | 80 |
| பாகல் | 60–80 | 100 | 60 | 100 | 80–120 | 140 | 120–140 | 100 |
| கருணைக்கிழங்கு | 60–70 | 60 | 50 | 60 | 30–40 | 60 | 80–100 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 70–80 | 80 | 70–80 | 90 | 80–100 | 80 |
| சி.வெங்காயம் | 50 | 80–100 | 60 | 80 | 50–100 | 100 | 80–100 | 60 |
| பூசணி | 50–60 | 50 | 60 | 60 | 60–80 | 60 | 100–120 | 60 |
| தக்காளி | 30–40 | 30 | 40 | 30 | 25–40 | 60 | 60–80 | 50 |
| வாழைக்காய் | 60–80 | 70 | 60 | 60 | 60–80 | 80 | 80–100 | 60 |
| கீரை | 20 | – | 30 | 10 | 15–25 | 20 | 30–35 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 30 | 20 | 15 | 15 |
| பச்சை மிளகாய் | 60 –70 | 50 | 50 | 60 | 60–80 | 80 | 80–120 | 80 |
| புடோல் | 40–50 | 50 | 50 | 60 | 40–60 | 110 | 80–100 | 40 |
| கோவா | 40–50 | 45 –50 | 40 | 40 | 25–40 | 70 | 60–80 | 35 |
| வெண்டி | 40–60 | 50 | 30–50 | 40 | 40–60 | 60 | 80–60 | 40 |
| போஞ்சி | 100–120 | 120 | 100 | 120 | 80–120 | 140 | 160–200 | 100 |
| லீக்ஸ் | 140–160 | 170 | 160 | 140 | 140–160 | 200 | 160–180 | 150 |
| தேங்காய் | 60–70 | 35–45 | 60 | 50–60 | 40–50 | 60 | 35–50 | 60–70 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 90–100 | 90–95 | 70–90 | 100 | 80–90 | 60–70 |
| தேசிக்காய் | 50 | 50–60 | 60 | 30 | 20–30 | 40 | 40–60 | 25–30 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 10 | 20 | 15 |
| கறிமிளகாய் | 100–120 | 80 | 120 | 120 | 120–180 | 140 | 120–160 | 100 |
| இராசவள்ளி | 100–120 | 90 | 100–120 | 100 | 80–120 | 120 | 80–120 | 80 |
| பனங்கிழங்கு | 04 | 04 | 05 | 02 | 01–05 | 05 | 03 | – |




| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 650 | 600 | – | 700 | 700-600 | 550 |
| நண்டு | 400 | 300 | – | 350 | 250 | 400 |
| கணவாய் | 450 | 450 | – | 500 | 500 | – |
| பாரை | 500 | 500 | – | 600 | 500-600 | 380 |
| சுறா | 550 | 500 | – | 600 | 600 | 450 |
| சீலா | 400 | 400 | – | 500 | 500 | 350 |
| விளை | 400 | 350 | – | 500 | 400-500 | 350 |
| முரல் | 350 | 300 | – | 400 | 400 | 250 |
| கும்பிளா | 380 | 200 | – | 350 | 300 | 350 |
| கிழாக்கன் | 300 | 500 | – | 350 | – | – |
| ஒரா | 300 | 300 | – | 400 | 500 | – |
| திரளி | 250 | 200 | – | 250 | 300 | – |
| நகரை | 200 | 200 | – | 300 | – | 300 |
| ஆடை | 150 | 100 | – | 100 | 100-150 | 60 |
| ஒட்டி | 200 | 100 | – | 200 | 300 | – |
| திருக்கை | 150 | 250 | – | 300 | 200-250 | 140 |
| பாலை | 150 | 250 | – | 400 | – | – |
| வாளை | 250 | 100 | – | 250 | 300 | 250 |
| கொய் | 80 | 100 | – | 100 | 100 | – |
| மதனம் | 200 | 200 | – | 250 | 200 | 250 |

# தமிழ் மாதங்களில் பிறந்தவர்களின் பலன்கள்



சூரியன் தனுசு ராசியில் சஞ்சரிக்கும் காலத்தை மார்கழி மாதம் என்று அழைக்கின்றோம். இந்த ராசியானது குரு தேவரின் ஆட்சி வீடுகளில் ஒன்றாகும். சூரியனுக்கு இது நட்பு ராசியாகும். பஞ்ச தத்துவங்களில் தீ அல்லது அனலை இந்த ராசி குறிக்கின்றது.

## தோற்றம்

உயரமான தோற்றமுடையவர். நீண்ட, வளைந்த கை, கால்கள் உடையவர். சிறுவயதில் மெலிந்த சரீரமுடையவராகவும், வயது வளர வளர தடித்த சரீரமுடையவராகவும் விளங்குவர். அகன்று விரிந்த, உயர்ந்த நெற்றி யுடையவர். வளைந்த, மிருதுவான புருவமுடையவர். அகன்ற வாயுடையவர். பொருத் தமான உதடுகள் அமைந்திருக்கும். கண்கள் அகன்று பளபளப்பாகத் தோற்றமளிக்கும் புஜங்கள் சரிந்து காணப்படும். எடுப்பா ன பற்களும், புன்சிரிப்பான முகத் தோற்றமும் உடையவர். உரத்த குரலும் சாய்ந்த நடையும் உடையவர்.

## குணபாவங்கள்

மார்கழி மாதத்தில் தோன்றி யவர்கள் சுயேச்சையை விரும்புபவர், வெள்ளை உள்ளம் படைத்தவர். பிறர் உள்ளத்தில் உள்ளதை எளிதில் கிரகிக்கும் சக்தியுடையவர். பிறர் செய்யும் குற்றம் குறைகளை அச்சமின்றி எடுத்துரைப்பர். யாவருக்கும் நன்மையே செய்ய வேண்டும் என்ற கருத்துடையவர். குற்றவாளிகளைக் கண்டிக்கவும், சமயம் வரும்போது தண்டிக்கவும் தயங்கார். மற்றவர்கள் தம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்பதைப் பற்றிச் சற்றும் யோசிக்காதவர். இவருடன் நட்பு கொள்வது அசாத்தியம். நட்பு ஏற்பட்டபின் இவர் உயிரையும் தியாகம் செய்திடுவர். சுறுசுறுப் புடையவர். எதையும் ஊடு ருவிக் கண்காணிப்பதில் சமர்த்தர். உதார குணமுடையவர். ஆனால், முன்கோபி. நியாயத்திற்கும், நேர் மைக்கும் கட்டுப்பட்டவர். தம்மைப்போலவே பிறரிடமிருந்தும் எதிர்பார்ப்பவர். இவர் எடுத்த காரியத்தை முடிக்காமல் உறங்கார். சுய தொழிலதிபர்கள் இவரை நம்பி இவருடைய கண்காணிப்பில் ஒப்படைத்தால் தொழில் அபிவிருத்தியடையும்.

வழி தவறி நடப்பவர்களிடத்தில் இவர் உறவு கொள்ளார். இளம் வயதிலேயே உலக அனுபவங்களைப் பெறுவதோடு உயர்ந்த தத்துவ ஞானத்தையும் அடைந்திடுவர். கீழோராயினும் உயர்ந்த பண்பு இருக்குமாயின் அவரிடத்தில் சரிசமமாகப் பழகுவர். சதாகாலமும் அரிய நூல்களைப் படிப் பதில் பெரும் பகுதியைச் செலவிடுவர்.

பிடிவாத குணமுடையவர். பரந்த நோக்கமுடையவரென்றாலும் சுயநல முடையவர். அவசரத்தில் எதையும் செய்யத் துணிந்திடுவர், பின் வருந்துவர். எட்டாத விடயங்களைப் பற்றி மனக்கோட்டை கட்டிடுவர். உயர்ந்த அபிலாஷைகள் நிறையவே உண்டு. ஆனால், வாழ்க்கையில் நிறைவேறுவது ஒன்றி ரண்டு மட்டுமேயாகும்.

## நோயும்-தீரும் வகையும்

இம்மாதத்தில் பிறந்தவர்கள் விளையாட்டுப் பந்தயங்களில் தீவிரமாக ஈடுபடுவர். இதனால் சரீர உறுப்புகளுக்கு அதிக உழைப்பு ஏற்படும். மேலும் வெயில் நேரங்களில் இவர் விளையாட்டுப் பந்தயங்களில் ஈடுபடுவதால் தாகம் தணிவதற்குப் பானங்களை அருந்துவர். இத னால் சளி கட்டுவ தும், மூச்சுத் திணறுவதும், சுவாச கோளாறுகளும் ஏற்படும். சிலர் முரட்டுத்தனமாக விளையாடு வதால் கை, கால்கள் முறிவதும், இரத்தக்காயங்களும் ஏற்படும். இத்தகைய விபத்துக்கள் இளம் வயதில் ஏற்படக்கூடியவை. வயது முதிர்ந்ததும், சத்துள்ள உணவுகளை உட்கொள்ளாமையால் சீழ் பிடிப்பு, முடக்குவாதம் போன்ற அசதிகளும் ஏற்படும். இந்த மாதத்தில் பிறந்தவர்களுக்கு நீண்ட நேர ஓய்வும், சத்தான உணவும் சிறந்த பரிகாரங்களாகும். மாலை நேரத்தில் உலாவி வரு வது இவருடைய ஆரோக்கியத்தைச் செழிப்ப டையச் செய்யும். களைப்பு ஏற்படும் போது நீர் அருந்துவதோ, குளிர்ந்த பானங்களை அருந் துவதோ, குளிர்ச்சியானஉணவுகளை உட்கொள்வதைத் தவிர்க் கவும். இவற்றைத் தவிர்த்தால் ஆரோக்கியம் நல்லபடி விளங்கும்.

உடற்பிணியை விட இவருக்கு மனோவியாதியும், பெண்களால் ஓயாத சங்கடங் களுமே அதிகம் பாதிக்கும்.

**மார்கழி**

## குறையும் நிறையும்

பொறுமை என்பது இவரிடத்தில் காண்பது அரிது. தாராளமாகச் செலவு புரிவர். ஒரே இடத்தில் தங்கியிருப்பது இவரால் இயலாத காரியம். அடி வாங்குவதும், பிறருக்கு வழங்குவதும் இவருக்குத் துச்சமான காரியமாகும். எதேச்சாதிகாரமுடையவர். குற்றவாளிகளைத் தண்டித்திடுவர். பணிந்தவர்களை மன்னிக்கும் சுபாவமுடையவர். விரிந்த அறிவுடையவர். பிறர் இவரைப் பற்றி ஏசுவ தையும், பேசுவதையும் கண்டஞ்சார். அயல் தேச யாத்திரையில் பிரியமுடையவர். உயர்தரப் பொருள்களை விரும்பி அடைந்திடுவர்.

# பெண்களுக்கு உள்ள நண்பர்களின் விதம்

# திடமான சிந்தை கொண்டவர்கள்



மிகவும் நம்பகத் தன்மை கொண்டவர்கள். அனைத்து நண்பர்களுக்கு மத்தியிலும், நம்பிக்கைக்கு உரியவர்கள். எந்த நிகழ்ச்சிக்கும் இத்தகைய நண்பர்களுடன் ஒரு பெண் தைரியமாக வெளியில் செல்லலாம். இத்தகைய நண்பர்கள் ஒரு பெண்ணுக்கு பொதுவாக ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பழக்கமுள்ளவர்களாக இருப்பார்கள். இருவரும் ஒருவருக்கொருவர் மணமகள் தோழிகள் போல இணைந்திருப்பார்கள்.

### உடன் வரும் தோழியர்கள்

இவர்கள் நல்ல உடல் வலிமையும், ஆடை அலங்கார வடிவமைப்பை எடை போடும் திறனும், கடன் கொடுத்து உதவும் எண்ணமும் நிறைந்தவர்கள். இவர்களுடன் சென்றால் நாம் வாங்கும் ஆடைகள், அலங்காரப் பொருள்கள் போன்ற பொருள்களைப்பற்றிய அவர்களது கருத்தினை தயங்காமல், மறைக்காமல், மிகவும் சரியாக சொல்வார்கள். தள்ளுபடி விற்பனைகளின் போது இவர்களை அழைத்துச் சென்றால், தரமான, தகுதியான மற்றும் நமக்குப் பிடித்தமான பொருள்களைத் தேர்ந்தெடுப்பதில் மிகவும் உதவிகரமாக இருப்பார்கள்.

### பேச்சுத் துணைவர்கள்

பொதுவாக வயதானவர் களாக இருப்பார்கள். ஒவ் வொரு பெண்ணுக்கும் இவர்கள் அம்மா போல இருப்பார்கள். அம்மாவிற் குத் தெரியக் கூடாது என்று நினைக்கும் மற்றும் அம்மா விடம் பேசத் தயங்கும் விஷ யங்களைக் கூட இவர்களிடம் பேசலாம். இவர்களுக்கு வாழ்க் கையில் நிறைய அனுபவம் இருக் கும். இவர்களும் நம்மிடம் பேசுவ தற்கு ஆர்வமாக இருப்பார்கள்.




### புலம்பித் தீர்ப்பவர்கள்

ஒரு பெண்ணின் தோழியரில் ஒரு சிலர் எப்போதும் தமது பிரச்சனைகளை அந்தப் பெண்ணிடம் புலம்பித் தீர்ப்பார்கள். அவர்கள் எந்தப் பிரச்சினை என்றாலும் தோளில் சாய்ந்து அழுவதற்கு இந்தப் பெண்ணையே தேடி வருவார்கள். பொதுவாக இந்தப் பெண் அவர்களுக்கு குப்பைத் தொட்டி போலாகிவிடுவார். அவர்களது மனக்க வலைகள், மனக்குமுறல்கள் அனைத்தும் மனம் திறந்து ஒப்படைத்து விட்டு அவர்கள் மனம் லேசாகி விடும். மிகவும் இக்கட்டான நேரங்களில் இவர்க ளது தொலைபேசி அழைப்பு வந்து தொல்லை செய் யும் அல்லது அவர்கள் ஏதாவது மது அருந்தி விட் டால் போதும், தொலைபேசியை எடுத்து இந்தப் பெண்ணின் எண்ணுக்கு பேசத் தொடங்கிவிடுவார்கள்.

### தோழியின் தோழி

இவர்களை ஒரு பெண் ஒரு சில சமயங்களில் சந்தித்திருப்பார் அல்லது பேஸ்புக்கில் நண்பர் களாக இருப்பார்கள். இவர்களுக் குள் பொதுவான விஷயங்கள் எதுவும் இருக்காது. எனினும், பரஸ்பர அறிமுகம் மட்டுமே இருந் திருக்கும். தெரு விலோ, சாலையிலோ, வழியில் எங்காவது பார்த்துக் கொண் டாலோ, சிறு உரையாடல் மட் டுமே இருக்கும். இருவரும் மற் றவர் பெயரைக் கூட மறந்திருப் பார்கள்.

### திருமணமாகி குழந்தையுடன் இருப்பவர்கள்


ஒரு பெண்ணுக்குத் திருமணமாகும் வரை, திருமணமாகி குழந்தையுடன் இருக்கும் பெண்களுடன் நன்றாக நேரம் போகும். அதன் பின் வெளி யில் செல்வதோ, இரவு நேர கேளிக்கைகளோ இருக்காது. உரையாடல்கள் கூட அளவுடன் தான் இருக்கும். இவர்கள் தனது தோழிக்கு நடந்த திருமணத்திற்கு எதிரானவர்கள் இல்லை. ஆனால் பழைய நட்பினை எண்ணி, அது மீண்டும் துளிர்க்காதா என்று எண்ணுபவர்கள் இவர்கள்.

### மாற்று ஏற்பாட்டு நண்பர்கள்

ஒவ்வொருவருக்கும் ஒருசில சமயங்களில் ஏதாவது நிகழ்ச்சிகளில் உடன் இருக்க வேண்டிய நண்பர்கள் வர முடியாத சூழல் ஏற்பட்டால், அந்த இடத்தை நிரப்ப ஆபத்பாந்தவனாக ஒருவர் இருப்பார். ஆனால் இவர்களை ஏன் முதலிலேயே அழைக்க முடியவில்லை என்று விளக்கி மன்னிப்பு கேட்க தகுந்த காரணத்தினைத் தயாராக வைத்தி ருப்பார்கள்.

# ஒரு பிடி மண்

ஓர் ஊரில், ஏழை இளைஞன் ஒருவன் வாழ்ந்து வந்தான். விவசாயம் செய்து தன் பிழைப்பை ஓட்டியவனுக்கு, தானும் பணக்காரனாக வேண்டும், பெரிய அளவிலான நிலத்துக்கு சொந்தக்காரனாக வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. பாடுபட்டு சிறுகச் சிறுகப் பணத்தைச் சேமித்து, பல ஏக்கர் நிலம் வாங்க வேண்டுமென என்ணினான். ஒரு நாள் அவன், பக்கத்தில் உள்ள சிற்றூருக்குச் சென்று கொண்டிருந்தான். பெரிய அளவிலான நிலம் பராமரிக்கப் படாமல் இருந்ததைப் பார்த்தான். அந்த ஊர்த் தலைவருக்குச் சொந்தமான அந்த நிலம் விவசாயத்துக்குச் சிறந்ததெனவும், மலிவான விற்பனைக்கு உள்ளதாகவும் ஊர் மக்கள் தகவல் கொடுத்தார்கள். ஊர்த் தலைவரைக் காணச் சென்ற அவன், நிலத்தை வாங்குவதற்கான தன் விருப்பத்தைக் கூறினான். ஊர்த் தலைவரும் அதற்கு ஒப்புக் கொண்டார்.'நீ ஓடிவிட்டுத் திரும்பும் வரை எவ்வளவு தூரம் உன் கால் படுகிறதோ அவ்வளவு தூரத்துக்கான நிலத்தை நீ எடுத்துக் கொள்', எனக் கூறினார் ஊர்த் தலைவர்.இதைக் கேட்ட இளைஞன் மகிழ்ச்சியடைந்தான். சிறிது காலத்தில் தான் கோடீஸ்வரனாகி விடலாம் என்ற எண்ணத்தில் பல கற்பனைகளைப் பறக்க விட்டான்.




மறுநாள் காலையில், இளைஞன் தனது இலட்சியத்தை அடைய எடுக்கப் போகும் முயற்சியைக் காண ஊர் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டனர். ஊர் தலைவர்கள் சரி சொல்லியவுடன் தன் னால் முடிந்த அளவிற்கு வேகமாக ஓடி னான். பசி மயக்கம் எதையும் பொருட்படுத்தாமல் ஓடிக் கொண்டே இருந்தான். உச்சி வெயில் சுல்லென்று எரிப்பதையும் பொருட்படுத்தாமல் ஓடினான். சூரியன் மறைவதற்குள் ஓடியவன் வந்துவிடுவானா இல்லையா என்ற சந்தேகமே ஏற்பட்டு விட்டது ஊர் மக்களுக்கு. மாலையில் திரும்பியவன் ஓட்டத்தை முடிக்க சிறிது தூரம் இருப்பதை உணர்ந்தான். இளைஞனைக் கண்ட ஊர் மக்கள் ஆரவாரம் செய்து உற்சாகப்படுத்தினர்.

அவனது உடல் வலுவிழந்திருந்தது. கால்கள் தள்ளாடியது. மூச்சுத் திணறியதால் அடுத்த அடி எடுத்து வைக்கச் சிரமப் பட்டவன், திடீரெனக் கீழே விழுந்து உயிர் துறந்தான். இவ்வளவு தூரம் ஓடிப் பல நிலங்களைச் சொந்தமாக்கிக் கொள்ள நினைத்தவனுக்கு, கடைசியில் மிஞ்சியது அவனை புதைப்பதற்கான ஒரு பிடி மண் மட்டுமே. பேராசை பெரும் நஷ்டம். ஆகவே அளவோடு ஆசைப் பட்டு ஆனந்தமாய் வாழ்வோம்.

# வர்ணம் தீட்டலாம் வாங்க...








# கங்காரு

கங்காரு ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த விலங்கு. இதன் குட்டிகள் முழுமையாக வளர்ச்சியடைவதற்கு முன்பே பிறந்துவிடுகின்றன. மீதம் வளர்ச்சி யெல்லாம் கங்காருவின் வயிற்றுப் பையில்தான் நடக்கும். குட்டி, பிறந்தவுடனே வயிறு வழியாக ஊர்ந்து பைக்குள் வந்துவிடும். பிரசவ நேரத்தில் கங்காரு, குட்டி வெளியே வருகின்ற துளை



முதல் வயிற்றின் மேல் பகுதிவரையான பாகத்தை நக்கும். இப்படி நக்கி நக்கி தன் உடல் ரோமத்தின் வழியே ஒரு பாதையை ஏற்படுத்தும். குட்டி இந்தப் பாதை வழியே ஊர்ந்து பைக்குள் வந்துவிடும். அம்மாவின் பாலைத்தவிர மற்ற உணவை, செரிக்கக்கூடிய திறன் வரும்போதுதான் உட்கொள்ளும். இந்தத் திறன் வரும் வரை குட்டி, அம்மாவின் பைக்குள்ளேயேதான் இருக்கும். குட்டியின் உடற்பகுதிகளெல்லாம் முழுமையாக வளர்ச்சியடைந்த பிறகுதான் கங்காரு, தன் குட்டியைக் கீழே இறக்கிவிடும். பிறகு எப்போதாவது நரியோ, கழுகோ, மற்ற விலங்குகளோ பிடிக்க வரும்போது குட்டி ஓடி வந்து தன் தாயின் பைக்குள் ஏறி ஒளிந்துகொள்ளும்.

# ஏளனம் நீ செய்யாதே!

மனிதர் வெறுக்கும் சேற்றிலே
மலர்ந்து நிற்கும் தாமரை
புனிதமான கடவுளை
பூசை செய்ய உதவுதே!
அழுக்கடைந்த சிப்பியில்
அழகு முத்தைக் காணலாம்;
கழுத்தில் நல்ல மாலையாய்
கட்டி மகிழ உதவுதே!
கன்னங்கரிய குயிலிடம்
காது குளிரும் கீதமோ
இன்பம் இன்பம் என்று நாம்
இன்னும் கேட்க செய்யுதே!
விஷம் மிக்க பாம்பிடம்
விலையுயர்ந்த இரத்தினம்;
அடடா அந்த இரத்தினம்



மனிதருக்கும் கிட்டுமோ?
ஊசி போன்ற முள்ளிலே
உயர்ந்த ரோசா மலருதே
வீசும் நல்ல மணத்திலே
விரும்பி அணிய செய்யுதே!
மோசமான இடத்திலும்
மிகுந்த நல்ல பொருளுண்டு,
யோசிக்காமல் எவரையும்
ஏளனம் நீ செய்யாதே!

# கண்டங்களுக்கு வந்த பெயர்கள்

**ஆபிரிக்கா**
ஆப்ரி என்ற பழங்குடியினர் அங்கே தொடக்கத்தில் வசித்தனர். 'ஆப்ரிக்கரின் நிலம்" என்ற அர்த்தத்தில் ஆபிரிக்கா என்று இதற்குப் பெயரிடப்பட்டது.

**அண்டார்டிகா**
அண்டார்டிகா என்பதும் கிரேக்க வார்த்தைதான். இதன் பொருள் 'வடக்கிற்கு எதிரானது'. பூமியின் தெற்குப் பகுதி நுனியில் தானே அண்டார்டிகா இருக்கிறது. இதனால் இந்தப் பெயர் சூட்டப்பட்டது.

**ஆஸ்திரேலியா**
ஆஸ்திரேலிஸ் என்றால் லத்தீன் மொழியில் 'தெற்கில் உள்ள தெரியாத பகுதி' என்ற அர்த்தம். அக்கால ரோமானியர்களுக்கு ஆஸ்திரேலியாவை அடைவதற்கான கடல் வழி இல்லை. எனவே இந்தப் பகுதியைப் பின்னர்தான் அடைந்தார்கள். ஆஸ்திரேலியா என்று போகிற போக்கில் இதற்குப் பெயர் சூட்டப்பட்டது.

**ஆசியா**
ஆசியா என்பதும் கிரேக்க வார்த்தைதான். 'ஏஜியா' என்ற வார்த்தையில் இருந்து கொஞ்சம் மாறிப்போன வார்த்தை இது. ஏஜியன் கடலின் கிழக்குக் கரையில் இருந்த பகுதிகளை முன்பு ஆசியா என்று குறிப்பிட்டார்கள். பிறகு மொத்த கண்டத்திற்கும் அந்தப் பெயர் வந்துவிட்டது.


ஆண்டுக்கு 12% உத்தரவாதமளிக்கப்பட்ட மீளளிப்புடன் ஆயுட் காப்புறுதியும்
இந் நன்மைகள் 31.03.2015 வரை மட்டுமே

Money Plus

5 ஆண்டு காலத்துக்கான
ஒரே கட்டுப்பண முதலீட்டுத்திட்டமாகும்

இணைவதற்கான தகைமை

குறைந்த வயதெல்லை : 18 வயது
உச்ச வயதெல்லை : 55 வயது
முதிர்ச்சியின் போதான உச்ச வயதெல்லை : 60 வயது
முதலீட்டுக் காலம் : 5 ஆண்டுகள்
கட்டுப்பண முறைமை : ஒரே தடவையில்

ஆகக்குறைந்த முதலீட்டுத்தொகை
வயது - 18 - 45 - LKR 21000/=
வயது - 46 - 55 - LKR 23000/=
முதலீட்டை ஒவ்வொரு 1000 ரூபாவால் அதிகரிக்க முடியும்



நன்மைகள்

| முதலீட்டுத் தொகை LKR | முதிர்ச்சி பெறுமதி LKR | முதல் 4 ஆண்டுக்குள் மரணம் நிகழ்ந்தால் | 5 ஆம் ஆண்டு மரணம் நிகழ்ந்தால் |
|---|---|---|---|
| 25 000 | 40 000 | 37 500 | 40 000 |
| 50 000 | 80 000 | 75 000 | 80 000 |
| 75 000 | 120 000 | 112 500 | 120 000 |
| 100 000 | 160 000 | 150 000 | 160 000 |
| 200 000 | 320 000 | 300 000 | 320 000 |

கடன் வசதிகளும் பெற்றுக்கொள்ளலாம்

மேலதிக தகவல்களுக்காக அருகிலுள்ள எமது கிளையை நாடுங்கள்

| | |
|---|---|
| ANURADHAPURA | - 0252236436 |
| BANDARAWELA | - 0572225084 |
| BALANGODA | - 0452286552 |
| BATTICOLOA | - 0652226701, 0652226702 |
| COLOMBO | - 0112552277 |
| CHAVAKACHERY | - 0212270070 |
| CHILAW | - 0322223297 |
| CHUNAKAM | - 0212242281 |
| GAMPAHA | - 0332232083 |
| HATTON | - 0512225771 |
| JAFFNA | - 0212226325, 0212226326 |
| KALMUNAI | - 0672224284 |
| KURUNEGALA | - 0372233553 |
| KALUTARA | - 0342235565 |
| KANDY | - 0812203655 |
| KILINOCHCHI | - 0212285449 |
| MANNAR | - 0232223452 |
| MANIPAY | - 0212256084 |
| MATARA | - 0412232558 |
| NEGOMBO | - 0312220862 |
| NUWARA ELIYA | - 0522222006 |
| POLONNARUWA | - 0272226033 |
| POINT PEDRO | - 0212260220 |
| PUTTALAM | - 0322267512 |
| RATNAPURA | - 0452226288 |
| TRINCOMALEE | - 0262223925 |
| VAVUNIYA | - 0242224465, 0242226960 |

LIC
Life Insurance Corporation (Lanka) Ltd.
29/2, Visaka Road, Colombo 4, Sri Lanka.
Tel: 2552277 (hunting line), 2553577-8, 2554411
Fax No: 2590495
Website : www.liclanka.com
A joint venture of LIC of India and Bartleet Transcapital Limited.

# நாடாளுமன்றத் தேர்தல் இப்போதைக்கு வேண்டாம்

**அர்ஜுண ரணதுங்க கூறுகிறார்**



கொழும்பு, மார்ச் 13
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் இப்போதைக்கு நடத்தப்படக் கூடாது என்பதே எனது தனிப்பட்ட கருத்தாகும் என்று விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுண ரணதுங்க தெரிவிக்கிறார்.

இந்த நாட்டிலுள்ள அனைத்து இனச் சமூகங்கள் மற்றும் கட்சிகளின் தலைவர்கள் ஒரே மேடையில் தோன்றிருக்கும் இன்றைய சந்தர்ப்பம் நாட்டைக் கட்டியெழுப்ப நல்ல தொரு வாய்ப்பே என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே, தேசிய அரசு என்ற எண்ணக் கருவைப் பலப்படுத்தி இன்றைய அரசு இன்னும் 5 ஆண்டுகளுக்கு நிர்வாகத்தைக் கொண்டு செல்வதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டியுள்ளது எனவும் அவர் கூறினார்.

இது நாட்டிலுள்ள அனைத்து இனச் சமூகங்களும் ஒருங்கிணைந்து உருவாக்கியுள்ள அரசு. இது குறித்துத் தீர்மானமொன்றுக்கு எனக்கு வாய்ப்பளிக்கப்படுமானால் இந்த அரசு இன்னும் ஐந்து ஆண்டுகளுக்குத் தொடர வேண்டுமென்றே நான் கூறுவேன். தேர்தல்கள் வேண்டாம். நாட்டைச் சீர்ப்படுத்த இதுவே நல்ல சந்தர்ப்பம். களவு, பொய்கள் இல்லாத ஜனாதிபதியொருவர் போன்றே களவு, பொய் அற்ற பிரதமர் உள்ளார். இவர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்துக்கொண்டு கடந்த 9 ஆண்டுகளாக பின்னோக்கிப் பயணித்துள்ள இந்த நாட்டை எதிர்வரும் 5 ஆண்டுகளில் முன்னோக்கி நகர்த்திச் செல்ல முடியும் எனவும் அமைச்சர் ரணதுங்க தெரிவித்தார்.

கடந்த 9 ஆண்டுகளில் நாட்டுக்கு ஏற்பட்டிருந்த அழிவு மிகப் பெரிதாகும். சர்வதேசத்தில் நாம் ஏளனமாகப் பார்க்கப்பட்டோம். எமது ராஜந்திரக் கடவுச் சீட்டுக்கள் எம்மைக் கள்வர்கள் என்ற எண்ணத்துடனேயே நோக்கப்பட்டன. கடந்த காலத்தில் நாம் மனித உரிமைகள் பிரச்சினைகளுக்கும் முகம்கொடுக்க நேர்ந்திருந்தது. இதற்கு நாம் காரண கர்த்தாக்கள் அல்ல. எம்மிடம் தூர நோக்குப் பார்வை இல்லாதிருந்ததே அதற்குக் காரணமாகியிருந்தது. கடந்த காலத்தில் பொருத்தமான இடங்களுக்குப் பொருத்தமானவர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. உறவினர்கள் உபசரிப்பின் மீதே அனைத்தும் நடந்தேறியிருந்தன என்றும் அமைச்சர் அர்ஜுணரணதுங்க குறிப்பிட்டார். (த-22)

# தெற்குத் தலைவர்களை நாளை சந்திப்பார் மோடி

கொழும்பு, மார்ச் 13
உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கை வரும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி தென்னிலங்கை, மலையகத் தமிழ் அரசியல் தலைவர்களை நாளை சனிக்கிழமை மாலை கொழும்பில் சந்திக்க ஏற்பாடாகியுள்ளது.

இந்தச் சந்திப்பில் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும், தேசிய நிறைவேற்று சபை உறுப்பினருமான மனோ கணேசன், தொழிலாளர் தேசிய சங்கத் தலைவரும், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான பழனி திகாம்பரம், மலையக மக்கள் முன்னணித் தலைவரும், கல்வி ராஜாங்க அமைச்சருமான ராதாகிருஷ்ணன் மற்றும் பெருந்தோட்ட ராஜாங்க அமைச்சர் வேலாயுதம் ஆகியோர் பங்குபற்றுவர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கூறியதாவது:-

இலங்கையில் புதிய அரசு பதவியேற்றுள்ளது. இந்தியாவிலும் புதிய அரசு ஆட்சியில் உள்ளது. இந்நிலையில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாகியுள்ளது. இந்த யதார்த்தங்களின் அடிப்படையில் நமது இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் பலப்படும் சாத்தியம் தோன்றியுள்ளது. அதேபோல் இங்கே தமிழர்கள் மத்தியிலும் புதிய அரசியல் தலைமைத்துவ அறிகுறிகள் தோன்றியுள்ளன. எனவே அரசுகள் மத்தியிலான உறவுக்குள் உள்ளடங்கலாக, இங்கே வாழும் இந்தியாவுடன் தொப்புள் கொடி உறவு கொண்ட நமது மக்களுடனும் புதிய போக்கில் இந்திய அரசு உறவுகளைப் பலப்படுத்த வேண்டும். இந்தப் பின்னணியில் இலங்கையில் உருவாகிவரும் நல்லாட்சி சூழல் நாடு முழுக்க வாழும் தமிழ் மக்களை அரவணைத்திட, இந்திய அரசு துணை செய்திட வேண்டும். குறிப்பாக இந்நாட்டில் மிகவும் பின்தங்கிய சமூக நிலைமைகளின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மலையக இந்திய வம்சாவளி தோட்ட தொழிலாளர்கள் தொடர்பாக பாரத நாட்டுக்கு வரலாற்று ரீதியான தார்மீக கடப்பாடு இருக்கின்றது. இந்த விடயங்களை நாம் பிரதமர் நரேந்திர மோடியின் நேரடிக் கவனத்துக்குக் கொண்டு வருவோம். - என்றார். (த)

# சிறைச்சாலைக் காவலர்கள் பதவிக்கு 1,300 வெற்றிடம்

## 15,000 பேர் விண்ணப்பம்

கொழும்பு, மார்ச் 13
சிறைச்சாலைகளில் உள்ள 1,300 சிறைச்சாலைக் காவலர்கள் பதவி வெற்றிடங்களுக்கு இது வரை 15ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்திருப்பதாகச் சிறைச்சாலைகள் தலைமையகம் தெரிவிக்கிறது.

இன்று வெள்ளிக்கிழமையுடன் இந்த விண்ணப்பம் முடிவுக்கு வருவதோடு இன்றுடன் விண்ணப்பங்களின் எண்ணிக்கை 20 ஆயிரத்தைக் எட்டக்கூடுமெனவும் எதிர் பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் 25ஆம் ,26ஆம் , 27ஆம் திகதிகளில் மாவட்ட மட்டத்தில் விண்ணப்பதாரிகளின் உடற்தகுதிகள் பரிசீலனைக்கு உள்ளாக்கப்படும். அதில் சித்தியடைவோர் கொழும்பில் இடம்பெறும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படு வார்கள் எனச் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ரோஹண புஸ்ப குமார் தெரிவித்துள்ளார்.

இந்த சிறைக்காவலர் நியமனங்கள் எதிர்வரும் ஏப்ரல் 20 ஆம் திகதியளவில் வழங்கி முடிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

ஒரே தடவையில் இவ்வாறு பெரும் எண்ணிக்கையான சிறைக்காவலர்கள் சேர்த்துக் கொள்ளப்படும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் எனவும் சிறைச்சாலைகள் தலைமையகம் கூறுகிறது. (த-22)

# 150 ஆண்டு பழைமை வாய்ந்த தொழில் சட்டங்களில் மாற்றம்

கொழும்பு, மார்ச் 13
150 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த தொழிலாளர் சட்டங்களை இன்றைய காலத்துக்குப் பொருந்தும் விதத்தில் மீளாய்வு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென நீதி மற்றும் தொழில் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஜ ஷதெரிவித்துள்ளார்.

தற்போது 58 தொழிலாளர் சட்டங்கள் இருப்பதாகவும், காலத்துக்கு ஒவ்வாத சட்டங்கள் காரணமாக உழைக்கும் வர்க்கத்தினர் ஏராளமான சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளமை குறித்து ஆராய்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் கூறியுள்ளார்.

தற்போது 58 சட்டங்களையும் பிரதானமான ஆறு சட்டங்களாக்குவதே தனது குறிக்கோள் எனவும், இந்த மீளாய்வுகளுக்குள் தொழிலாளர்களின் சம்பளங்கள், நலனோம்பு கருமங்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்து விசேட கவனத்தைச் செலுத்தவுள்ளதாக வும் அவர் தெரிவித்துள்ளார். (த-22)

### திஸ்ஸவுக்கு எதிரான ஆவணம் கையளிப்பு

ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரும் முன்னாள் சுகாதார அமைச்சருமான திஸ்ஸ அத்தநாயக்கவிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை ஆவணம் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது, போலி ஆவணங்களைத் தயாரித்தார் என்ற குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்தப் போலி ஆவணம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை ஆவணங்களே சட்டமா அதிபருக்குக் கையளிக்கப்பட்டுள்ளது. முறைப் பாட்டாளரின் இந்த விசாரணை ஜூன் 3ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (த)


கண்ணீர் அஞ்சலி



எமது புள்ளிவிவரக் கிளையில் கடமை யாற்றும் புள்ளிவிவர உத்தியோகத்தர்
திருமதி சுகந்தினி தேவேந்திரன்
அவர்களின் அன்புத் தந்தை
சிற்றம்பலம் கதிர்காமநாதன்
(ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர்)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் இரங்கலையும் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்ளும்
மாவட்ட புள்ளிவிவரவியலாளரும்
உத்தியோகத்தர்களும்
புள்ளிவிவரக்கிளை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
(84238)(5.3.7)



3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி கமலம் கந்தையா
மலர்வு 23.03.1927
உதிர்வு 15.03.2012
திதி: அட்டமி

ஆண்டுகள் மூன்று ஆனதுவோ
ஆறவில்லை அம்மா உங்கள் பிரிவு
வேதனையில் வாடுகின்றோம்
எம் தெய்வத்தைத் தேடுகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.
லில்லி (மகள்)



கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் M. மயூரன்
(முகாமையாளர் KPMG யாழ்ப்பாணம்)
அவர்களின் பாசமிகு தாயார்
திருமதி ரதி மயிலேறும்பெருமாள்
அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், நாமும் இத்துயரில் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள் A/L 2000
ஹாட்லிக் கல்லூரி
(57752)(5.3.7)



31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மனோரஞ்சிதம்
அருள்ஞானசுந்தரம்
மலர்வு 19 . 09 . 1956
உதிர்வு 11 . 02 . 2015

மனைத்தக்க மனையாளாகி
மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து
மனோரஞ்சிதமாய் ஈசனடி இணைந்த
மணிவிளக்கே எம் அகத்தில்
என்றும் ஒளிர்வீர்கள்

அமரர் மனோரஞ்சிதம் அவர்களின் பிரிவுத்துயர் கேட்டு, இறுதிக்கிரியைகளில், கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலமும், நேரடியாகவும் தமது அனுதாபத்தைத் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் யாவருக்கும் மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

155, செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
(57734)(5.3.7)



அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
சின்னத்தம்பி
நல்லதம்பி
தோற்றம் 12 . 06 . 1927
இறப்பு 12 . 02 . 2015

கடந்த 12.02.2015 வியாழக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சி.நல்லதம்பி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (14.03.2014) சனிக்கிழமை காலை 6.00 மணியளவிலும், வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் மு.ப 11.00 மணியளவிலும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கலப்பனாவத்தை லேன்,
தும்பளை, பருத்தித்துறை
குடும்பத்தினர்.
T.P 0770059338
(84238)(5.3.7)

# சரத் பொன்சேகாவுக்கு வாழ்நாள் சிறப்புரிமை


கொழும்பு, மார்ச் 13

ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜெனரல் சரத் பொன்சேகாவைப் பீல்ட் மார்ஷல் பதவிக்கு நியமித்து, அவருக்கு நாட்டின் நாட்டின் அதியுயர் பீடமான நாடாளுமன்றத்தின் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஒருவருக்கு இருக்கும் சிறப்புரிமைகள் மற்றும் அதிகாரங்களை வழங்க அரசு தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

ஓய்வுபெற்ற இராணுவ ஜெனரல் சரத் பொன்சேகாவை மார்ச் 22 ஆம் திகதி முதல் மீண்டும் செயற் பாட்டு ரீதியிலான சேவையில் இணைத்து அன்றைய தினத்தில் இருந்து அவரை பீல்ட் மார்ஷல் பதவிக்கு உயர்த்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுமதியை வழங்கியுள்ளார்.

இலங்கை இரண்டாகப் பிளவுபடுவதைத் தடுத்து நாட்டைப் பாதுகாக்க சரத் பொன்சேகா தலைமைத்துவத்தை வழங்கினார். மூன்று முறை அவர் தாக்குதலுக்கு உள்ளானார். இதனைப் பொருட்படுத்தாமல் நாட்டைக் காக்க அர்ப்பணிப்புக்களைச் செய்த பொன் சேகாவுக்கு பீல்ட் மார்ஷல் பதவியை வழங்குவதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பீல்ட் மார்ஷல் என்ற பதவி ஜெனரல் பதவிக்கும் மேலானது. 5 நட்சத்திரங்களை கொண்ட ஜெனரல் பதவிக்கு நிகரானது. பீல்ட் மார்ஷல் என்ற பதவியை வகிப்பவர் ஓய்வுபெறாது தொடர்ந்தும் சேவையில் இருப்பவராகக் கருதப்படுவார்.



இது கௌரவபதவி என்றும், பீல்ட் மார்ஷல் இராணுவ நடவடிக்கைகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளில் பொறுப்பு வகிக்க மாட்டார். அத்துடன் பீல்ட் மார்ஷல் என்ற பதவியை வகிப்பவர் இராணுவ சட்டத்துக்கு உட்பட்ட அதிகாரி அல்ல.

பீல்ட் மார்ஷல் ஒருவர் நாட் டில் உள்ள சகல பிரஜை களுக்கும் இருக்கும் உரிமைகளை கொண்டிருப்பார். ஜனநாயக ரீதியிலான அரசிய லில் ஈடுபட அவருக்கு சுதந்திரம் உள்ளது. அத்துடன் ராஜதந்திர முறைக்குள் அவர் நாட்டின் அதியுயர் பீடமான நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சரவை அமைச்சர் ஒருவருக்கு ஈடான அந்தஸ்தைக் கொண்டிருப்பார்.

பீல்ட் மார்ஷலாக பதவி உயர்த்தப்படும் சரத் பொன் சேகாவுக்கு 4 அதிகாரிகள் அடங்கலாக, 150 படையினரின் பாதுகாப்பு வழங்கப் படும். வாழ்நாள் முழுவதும் சம்பளம் வழங்கப்படும். வாழ்நாள் முழுவதற்குமான செயலகம் ஒன்று வழங்கப்படுவதுடன் ஊழியர்களும் வழங் கப்படுவார்கள்.

பீல்ட் மார்ஷல் ஒருவர் உயிரிழந்தால், இராணுவ மரியாதையுடன் இறுதிச்சடங்குகள் நடத்தப்படுவதுடன் 21 மரியாதை பீரங்கி வேட்டுகளும் தீர்க்கப்படும். இதனைத் தவிர உத்தியோகபூர்வ வாசஸ்தலம், இராணுவ உயரதிகாரிகளுக்கு வழங்கப்படும் போக்குவரத்து வசதிகள் என்பனவும் பொன்சேகாவுக்கு வழங்கப் பட உள்ளது.

பீல்ட் மார்ஷல் பதவியில் இருக்கும் ஒருவர் இறக்கும் பட்சத்தில் அவரது மனைவிக்கு வாழ்நாள் முழு வதும் கொடுப்பனவும் உத்தியோக பூர்வ வாசஸ்தலமும் வழங்கப் படும் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (த)

# கைக்குண்டு வைத்திருந்த பௌத்த தேரர் போராட்டம்

கொழும்பு, மார்ச், 13

கைக்குண்டு ஒன்றை வைத்திருந்த சம்பவம் ஒன்று தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ள பௌத்த தேரர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை சிலாபம் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டுச் சிறைச்சாலை பஸ்ஸிலிருந்து இறங்கும்போது தான் நான்கு வருடங்களாக சிறைத் தண்டனை அனுபவித்து வருவது அநீதியாகும் எனக் கூறி கூச்சலிட்டு குழப்பம் விளைவித்து ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளார். பொலனறுவைப் பிரதேச பௌத்த தேரர் ஒருவரே இவ்வாறு குழப்பம் விளைவித்துள்ளார்.

2012 ஆம் ஆண்டு ஜனவரி 4ஆம் திகதி கைக்குண்டு ஒன்றுடன் சிலாபம் நீதிமன்றத்துக்கு வருகை தந்ததையடுத்து அவர் கைது செய்யப்பட்டு அன்று தொடக்கம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். வேறு ஒரு வழக்குடன் தொடர்புபட்டு நீதிமன்றத்திற்கு வந்தபோதே அவரது உடையில் மறைத்து வைத்திருந்த கைக்குண்டு ஒன்றை நீதிமன்றத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் மீட் டுள்ளதுடன் தேரரைக் கைது செய் திருந்தனர்.

பின்னர் அவர் கைக்குண்டு ஒன்றை வைத்திருந்த குற்றச் சாட்டில் நீதிமன்றத்தில் மீண்டும் முன்னிலைப்படுத்தப்பட்டு அவருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக் கப்பட்டிருந்தது. இவர் மீதான வழக்கு விசாரணை சிலாபம் நீதிமன்றத்தில் இடம்பெறவிருந்த நிலையில் சந்தேகநபரான பௌத்த தேரர் சிறைச்சாலையிலிருந்து பஸ்ஸில் அழைத்து வரப்பட்டார். சிலாபம் நீதிமன்ற வளவினுள் அவர் பஸ்ஸை விட்டுக் கைவிலங்குடன் இறங்கும்போது, தான் நீண்ட காலமாக விளக்கமறியலில் வைக் கப்பட்டிருப்பது அநீதியாகும் எனக் கோஷமிட்டு குழப்பத்தில் ஈடுபட்டார். இதனையடுத்து சிறைச் சாலை அதிகாரிகள் அவரைக் கட்டுப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டு நீதிமன்றத்தினுள் அழைத்துச் சென்றனர்.

இவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது தொடர்ந்து ஏப்ரல் 21ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டார். (த-10)


## அண்ணா உற்பத்திப் பொருள்கள் மலிவு விலையில்

தென்மராட்சி வலயக்கல்வி பாடசாலைகளால் இன்றும் நாளையும் (13, 14/03.2015) சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் நடத்தப்படும் வர்த்தகக் கண்காட்சியில் பொதி செய்யப்பட்ட அண்ணா உற்பத்திப் பொருள்களான அரிசிமா, கோப்பி, ஜீவாகாரம், நூடில்ஸ், குரக்கன்மா மற்றும் அனைத்து அண்ணா உற்பத்திப் பொருள்களையும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். (சி/19884) (4.3.7)

அண்ணா தொழிலகம், இணுவில்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி சாரதாதேவி கிருஷ்ணதாஸ்
(B.A(Hons)Dip .in Ed,SLPS I)

கொழும்பு இராஜகீய வித்தியாலயத்தில் 10.03.2015 அன்று நடைபெற்ற இலங்கை அதிபர் சேவை தரம் I இற்கான பதவியுயர்வு நியமனம் வழங்கும் வைபவத்தில், 02.07.2008 இலிருந்து இலங்கை அதிபர் சேவை தரம் I இற்கு பதவி உயர்வு பெற்ற எமது மகா வித்தியாலய அதிபர் திருமதிசாரதாதேவி கிருஷ்ணதாஸ் அவர்களை உளமாரப் பாராட்டுவதுடன் அவர் மேன்மேலும் பட்டங்கள் பல பெற்று சீரும் சிறப்புமாகப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள்
யா/ நெடுந்தீவு மகா வித்தியாலயம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது அதிபர்
வி. ஸ்ரீகரன்
SLPS-I
B.A (Hons) Dip.in.Edu



எமது பாடசாலையினுடைய அதிபர் வி.ஸ்ரீகரன் அவர்கள் அதிபர் சேவையில் தரம்-1 இல் பதவி உயர்வு பெற்றதையிட்டு, மனம் மகிழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச்சங்கம், Congratulations
மு/ உடையார் கட்டு மகா வித்தியாலயம்.

## Majestic Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




பிளட்டினம் 10.30 / 2.30 / 6.30
சில்வர் 10.15 / 2.15 / 6.15
ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com


## மரண அறிவித்தல்



### திருமதி அன்னலட்சுமி கதிரவேலு

மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி கதிரவேலு நேற்று (12.03.2015) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலுவின் அன்பு மனைவியும், இராமச்சந்திரன் (ஓய்வுபெற்ற இ.போ.ச சாரதி), காயத்திரிதேவி, சாவித்திரிதேவி, மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான மீனாம்பாள், சண்முகராசா மற்றும் மங்களேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற மீரா, இரமணன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.03.2015) வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காட்டுவளவு கந்தசாமி கோவிலடி
மீசாலை கிழக்கு, மீசாலை.

தகவல்:
குடும்பத்தினர்.
தொலைபேசி: 0779 905 416

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினம் இலகுப்பிள்ளை

புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி இரத்தினம் இலகுப்பிள்ளை நேற்று (12.03.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு இராசமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-சின்னாச்சிபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இலகுப்பிள்ளையின் (முன்னாள் குமாரி ரவல்ஸ் உரிமையாளர்) அன்பு மனைவியும், தேவதாஸ் (ஆசிரியர், தனியார் கல்வி நிலையம்), மோகனதாஸ், தேவகுமாரி (கனடா), மோகனகுமாரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், சந்தனரூபி (ஓய்வுபெற்ற ஆசிரியை), சிவனேந்திரன் (கனடா), மோகனதாஸ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், றொசாஜினி, கோபி கிருஸ்ணன், தமிழினி, லக்கியா, சாகித்தியா, ஓபிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை, கந்தையா, நாகராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், அருளம்மா, தவமணிதேவி, ஜெயலக்சுமி ஆகியோரின் அன்புச் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2015) வெள்ளிக்கிழமை பி.ப 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புங்குடுதீவு மணற்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2ஆம் வட்டாரம், புங்குடுதீவு,
077 8143 927

தகவல்: இ. தேவதாஸ்
(மகன்-தேவன் மாஸ்ரர்)

# ஆசிரிய ஆலோசகர்கள் கொழும்பில் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

ஆசிரிய ஆலோசகர் சேவையை தனியான சேவையாக நடைமுறைப் படுத்தக்கோரி கொழும்பு பத்தரமுல்லையில் கடந்த திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அகில இலங்கை ஆசிரிய ஆலோசகர் தொழிற்சங்கம் இதனை ஏற்பாடு செய்து நடத்தியது. வடக்கு கிழக்கில் உள்ளவர்கள் உட்பட நாடளாவிய ரீதியில் உள்ள ஆசிரிய ஆலோசகர்கள் இந்தப் போராட்டத்தில் பங்குபற்றியிருந்தனர். ஆர்ப்பாட்டத்துக்குச் செல்ல முடியாத ஆசிரிய ஆலோசகர்கள் சுகவீன விடுப்புப் போராட்டத்தில் கடந்த திங்கட்கிழமை ஈடுபட்டிருந்தனர்.

அதனையடுத்து அவர்களது சங்கப் பிரதிநிதிகளை அழைத்து மத்திய கல்வி அமைச்சின் செயலாளர் கலந்துரையாடினார். இதன்போது அதனை நடைமுறைப்படுத்துவதற்கு தொடர்ந்து நடவடிக்கை எடுப்பதாகக் கூறியுள்ளதோடு எதிர்வரும் 23 ஆம் திகதி சங்கத்துடன் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகவும் செயலாளர் கூறியுள்ளார்.

சில வருடங்களுக்கு முன்னரே ஆசிரிய ஆலோசகர் பிரிவைத் தனியா அமைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. ஆனால் அரசியல் காரணமாக அது இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆசிரியர் சேவை, அதிபர் சேவை, கல்வி நிர்வாக சேவை என ஏற் கனவே 3 பிரிவுகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4)

# முன்னாள் பிரதி அமைச்சர் கைது

கொழும்பு, மார்ச் 13

முன்னாள் பெற்றோலியத் துறை பிரதி அமைச்சர் சரண குணவர்த்தன நேற்று வியாழக்கிழமை கைதுசெய் யப்பட்டார்.

அவருக்கு எதிராகச் செய்யப்பட்டிருந்த முறைப்பாடு ஒன்று தொடர்பாக வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக் கொள்ள குற்றத் தடுப்புப் பிரிவினரால் அழைக்கப்பட்ட அவர் மேலதிக விசாரணைகளுக்காக கைதுசெய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

சிலாபத்தைச் சேர்ந்த மொஹமட் ரிஸ்மி என்ற வர்த்தகர் மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக சரணவுக்கு எதிராக முறைப்பாடு செய்திருந் தார். இந்தச் சம்பவத்துடன் தொடர் புடைய ஒலி நாடா ஒன்றையும் குறித்த வர்த்தகர் ஆதாரமாகச் சமர்ப்பித்துள்ளார். (த)

# பிரதமருக்கு அழைப்பாணை

கொழும்பு, மார்ச் 13

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு உயர் நீதிமன்றம் அழைப்பாணை பிறப்பித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன் னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவினால் தாக்கல் செய் யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பில் பரிசீலனை செய்த உயர் நீதிமன்றம் இந்த அழைப் பாணை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமை ரத்து செய்யப்பட்டமைக்கு எதிராக அத்தநாயக்க மனு வொன்றை தாக்கல் செய்திருந்தார். இந்த மனு எதிர்வரும் 19ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இந்தத் தினத்தில் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (த)

# 3.8 லட்சம் டொலர் நாளாந்தம் இழப்பு

## இலங்கைக்குச் சீன நிறுவனம் எச்சரிக்கை

கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளதால், தமக்கு நாளொன்றுக்கு, 3.8 லட்சம் டொலர் இழப்பு ஏற்படுவதாகவும், தமது முதலீட்டைப் பாதுகாப்பதற்காகச் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும், சீனநிறுவனம் எச்சரித்துள்ளது.

கொழும்புத் துறைமுக நகர கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள, சீன தொடர்பாடல் கட்டுமான நிறுவனமே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

புதிய அரசினால் கடந்த 6ஆம் திகதி இந்தத் திட்டப்பணிகள் இடைநிறுத்தப்பட்டதில் இருந்து, இன்று வரை 2.33 மில்லியன் டொலர் இழப்பு தமக்கு ஏற்பட்டுள்ளதாகவும் சீன நிறுவனம் தெரிவித்துள்ளது.

இறுதியான முடிவு எப்போது அறிவிக்கப்படும் என்று இதுவரை எமக்குத் தகவல் தரப்படவில்லை. திட்டப் பணிகளை இடைநிறுத்தியதால், நாளொன்றுக்கு எமது நிறுவனத்துக்கு 380,000 டொலர் நேரடி இழப்பு ஏற்பட்டுள்ளது. மறைமுகமாக ஏற்படும் இழப்பு விவரம் இன்னமும் கணக்கிடப்படவில்லை. பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ள தால், பெரிய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக, உள்ளூரில் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்குவதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இந்தப் பணிகளை விரைவாக ஆரம்பிக்காவிட்டால், கடலில் கொட்டி நிரவப்பட்ட கற்களும் மண்ணும், கடல் அலைகளினால் இழுத்துச் செல்லப்பட்டு விடும்.

உண்மையில் கடல் அலைகள் பணத்தைக் கடலுக்குள் இழுத்துச் செல்கின்றன. நாளாந்தம் ஏற்படும் நேரடி இழப்புடன், மறைமுக இழப்பையும் சேர்த்து, இழப்புகள் அதிகரித்து வருகின்றன. எமது நிறுவனத்தை ஓரம்கட்டினால், எம்மைப் பாதுகாக்க சட்ட நடவடிக்கையில் இறங்குவோம். என்றும் சீன நிறுவன உயரதிகாரிகள் எச்சரித்துள்ளனர். (த)

# புதிய பொலிஸ் பேச்சாளராக ருவன் குணசேகர

கொழும்பு, மார்ச் 13


புதிய பொலிஸ் ஊடகப் பேச்சாளராக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரைகாலமும் பொலிஸ் ஊடகப் பேச்சளராக இருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண கொழும்பு வடக்கு பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராக மாற்றம் செய்யப்பட்டதை அடுத்தே புதிய பொலிஸ் பேச்சாளராக ருவன் குணசேகர நியமிக்கப்பட்டுள்ளார். (த-4)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்கள்

## சிற்றம்பலம் கதிர்காமநாதன்



கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும், கரணவாய் கிழக்கு, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற விவசாயப் போதனாசிரியரும், முன்னாள் அரச விவசாயப் பண்ணை முகாமையாள ருமாகிய சிற்றம்பலம் கதிர்காமநாதன் நேற்று (12.03.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம்-வள்ளியம்மை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர் களான கந்தப்பு-வேதாத்தை தம்பதி யரின் மருமகனும், சரஸ்வதியின் அன் புக் கணவரும், காலஞ்சென்றவர்க ளான திருமதி. கனகம்மா பொன்னம்பலம், முருகேசு, சின்னத்தம்பி, மற்றும் திருமதி. சரஸ்வதி மாணிக்கராஜா, திருமதி. பரமேஸ்வரி கணேச ராசா, திருமதி. இராஜேஸ்வரி திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோத ரனும், காலஞ்சென்ற எஸ். பொன்னம்பலம், திருமதி.மு.இராஜேஸ்வரி திருமதி.சி.வள்ளியம்மைப்பிள்ளை, எஸ். மாணிக்கராஜா, பி.கணேச ராசா, எஸ். திருநாவுக்கரசு, க.சிவப்பிரகாசம், திருமதி. மனோன்மணி மகாலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனனும், சுதர்சன், சுகந்தினி, சுதர்சினி, சுபாஜினி, சுதர்மினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாமினி, தேவேந்திரன், இராகவன், அருள்குமரன், மதிவதனன் ஆகியோரின் அன்பு மாமனாரும் தேனுகன், திலக்ஷன், துர்க்கா, திவ்யன், ஆதித்யா, சோபிதன், துஷாங்கன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.03.2015) வெள்ளிக் கிழமை காலை 9.30 மணிக்கு உச்சில் அம்மன் ஒழுங்கை, கரணவாய் கிழக்கு, கரவெட்டியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று உடலம் தகனக் கிரியைகளுக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத் துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

உச்சில் அம்மன் ஒழுங்கை,
கரணவாய் கிழக்கு, கரவெட்டி. 021 3007121

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லம்மா மார்க்கண்டு



பலாலியைப் பிறப்பிடமாகவும் தற்போது கண்டி வீதி தபால் கட்டை சந்தி அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா மார்க்கண்டு நேற்று 12.03.2015) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற மார்க்கண்டுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வீரபாகு மற்றும் நடராசா, சிவக் கொழுந்து (ஓய்வுநிலை C.T.B சாரதி), மாசிலாமணி, சிங்கராஜா (பத்தா யிரம்), காலஞ்சென்ற செல்வம் மற்றும் செல்வமணி ஆகியோரின் சகோதரியும், குணசேகரன் (ஓய்வு நிலை பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்), கனக புஸ்பராணி (வெள்ளையம்மா), கனகபுனிதராஜா (ராஜா), சொக்கன் மனோரஞ்சினி (பாப்பா) ஆகியோரின் அன்புத் தாயும், ராசாத்தி, ராமச்சந்திரன், சாந்தினி, புஸ்பநாதன் (ராசன்- யாழ். சென். சாள்ஸ் மகாவித்தியாலய பணியாளர்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 13.03.2015 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் பி.ப. 12.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள் ளவும்.

தகவல் : மா. குணசேகரன், மா. கனகபுனிதராசா
[மகன் மார்]

## தங்கராசா ஜெயகாந்தன் (காந்தன்)



வவுனியா சின்னப்புதுக்குளத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா ஜெயகாந்தன் (10.03.2015) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தங்கராசா காலஞ்சென்ற மனோன்மணி தம்பதியரின் புதல்வனும், பரமேஸ்வரி (ஜேர்மனி), ஜெயகௌரி (ஜேர்மனி), ஜெயபாலன் (ஜேர்மனி), காலஞ்சென்ற ஜெயராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், லோகேஸ்வரன் (ஜேர்மனி), நகுலேந்திரன் (ஜேர்மனி), கவிதா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், (ஜேர்மனியிலுள்ள பானுஜா , இந்துஷா, அபிஷா, ராகவி, சுவாகி, பைரவி, சங்கவி ஆகியோரின் மாமனும், தரணியா, ஜீவிதன், ஆர்த்தி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2015) வெள்ளிக்கிழமை பி.ப.02.00 மணியளவில் வவுனியா சின்னப்புதுக்குளம் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் வெளிக்குளம் இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : தங்கராசா (கிலி).
சின்னப்புதுக்குளம், வவுனியா. 024 222 0257

## திருமதி குமாரதேவி கனகசிங்கம்

(கலாவித்தகர் - சங்கீத ஆசிரியை)



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குமாரதேவி கனகசிங்கம் நேற்று (12.03. 2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் -சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நவரதினம்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கனகசிங்கத்தின் (ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்) அன்பு மனைவியும், முரளி (கண்ணன்), நர்மதா (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயும், வனிதாதேவி (கனடா), தயாதேவி (கனடா) ஆகி யோரின் அன்புச் சகோதரியும், மெய்யழகன், சித்திரா ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற விவேகானந்தன் மற்றும் சிவபாலன் (கனடா) ஆகியோரின் மைத்துனியும், துவாரகா, கனியன், தேனுஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பராசக்தியின் (ஆஸ்திரேலியா) பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2015) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

தகவல் : மகன் (கண்ணன்).
021 222 0652

## கந்தையா ஜெயரட்ணம்

(ஓய்வு பெற்ற இ.போ.ச. சாரதி, காரைநகர் சாலை)



மாகியம்பதியைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஜெயரத்தினம் நேற்று (12.03.2015) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான கந்தையா - லட்சுமி தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற மகிழ்மலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, இலங்கையர், மார்க்கண்டன், தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயமோகன் (ஆசிரியர்- மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை), ஜெய பாஸ் கரன் (எழுதுநர்- வவுனியா வளாகம்), காலஞ்சென்ற ஜெயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயமலர், சித்திரா (அன்னம் சுத்தி கரிப்பு, பராமரிப்பு நிறுவனம்), ஆகியோரின் அன்பு மாமனும், ஜோயல் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), காருணியா (வவுனியா / இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), ஜெயசலோமி (யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), ஷரிஷ்ராஜ் (வ/தமிழ் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.03.2015) சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் ஆராதனை நடைபெற்று பூத வுடல் மல்வம் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராமலிங்கம் வீதி, உடுவில்.

தகவல் :
குடும்பத்தினர்

## மூன்று மணி

கொழும்பில் சந்திப்புக்களை முடித்துக் கொண்டு நாளை சனிக்கிழமை இந்தியப் பிரதமர் வடக்குக்கு வருகை தரவுள்ளார்.

கொழும்பு தாஜ்சமுத்திரா விடுதியிலிருந்து நாளை காலை 8.30 மணிக்கு விசேட ஹெலியில் புறப்படும் இந்தியப் பிரதமர், அநுராதபுரத்துக்கு காலை 9.30 மணிக்கு வந்தடைவார். அங்கு மகாபோதியில் வழிபாடுகளில் அவர் ஈடு படவுள்ளார். அநுராதபுரத்திலிருந்து முற்பகல் 10.15 மணிக்கு தலைமன்னாருக்குப் புறப்படும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, காலை 10.45 மணிக்கு தலைமன்னாரைச் சென்றடைவார்.

அங்கிருந்து மதியம் 12.30 மணிக்கு புறப்படுவார். இந்திய விமானப் படைக்குச் சொந்தமான விசேட ஹெலியில் யாழ்ப்பாணத்துக்கு இந்தியப் பிரதமர் வருகை தருவார். பி.ப 1.20 மணிக்கு ஹெலி, சுப்பிரமணியம் பூங்காவின் முன்பாகவுள்ள மாநகர சபை வளாகத்தில் வந்திறங்கும்.

1.30 மணிக்கு யாழ்.பொதுநூலகத்திற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி செல்வார். யாழ்ப்பாண கலசார மையத்துக்கான நினைவுக் கல்லை, யாழ்.பொதுநூலகத்தில் வைத்து பிரதமர் நரேந்திர மோடி திரை நீக்கம் செய்வார். இதன் பின்னர், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் அமைச்சர்கள், அவைத் தலைவர் ஆகியோருடன் சந்திப்புக்களை மேற்கொள்வார்.

இதனை முடித்துக் கொண்ட பின்னர், நல்லூர் ஆலயத்துக்கு மோடி செல்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இது இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை. நல்லூருக்குச் செல்வதா அல்லது கீரிமலை நகுலேஸ்வரத்துக்குச் செல்வதா என்று தீர்மானிக்கப்படாமையாலேயே இது இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை.

மதிய உணவு, வடக்கு மாகாண ஆளுநரின் இல்லத்தில் இடம்பெறும். இதனை முடித்துக் கொண்ட பின்னர், பி.ப 3 மணியளவில், இளவாலைக்குப் புறப்படும் மோடி, 3.15 மணியளவில் இளவாலையைச் சென்றடைவார். அங்கு இந்திய வீட்டுத் திட்டத்தில் அமைக்கப்பட்ட ஒரு வீட்டினை திறந்து வைப்பதுடன், 8 வீடுகளுக்கான சான்றிதழையும் இந்தியப் பிரதமர் கையளிக்கவுள்ளார்.

இந்த நிகழ்வுகளை முடித்துக் கொண்டு, பி.ப 3.50 மணிக்கு பலாலி விமான நிலையத்துக்குச் செல்லும் மோடி அங்கிருந்து விமானம் மூலம் கொழும்புக்கு பயணமாகவுள்ளார். (ற–5)

## இருநாட்டு

தெரிவித்துள்ளது.

இரு நாட்டு மீனவர்களுக்கும் இடையில் எல்லை தாண்டி மீன் பிடித்தல் தொடர்பான பிரச்சி னைக்கு தீர்வு காணும் வகையில் மீண்டும் பேச்சு நடத்த தமிழக அரசால் கோரிக்கை விடப்பட்டி ருந்தது.

அதற்கமைவாக இலங்கை மீனவர்கள் சென்னைக்குச் சென்று பேச்சு நடத்த உடன்பாடு தெரிவித்தனர். கடந்த 11 ஆம் திகதி பேச்சு நடத்த இலங்கை மீனவர்கள் ஆயத்தமாகவிருந்த போதும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைக்கான வருகையால் அது பிற்போடப் பட்டிருந்தது.

இந்தநிலையில் எதிர்வரும் 19ஆம் திகதி பேச்சு நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதே வேளை பேச்சின்போது மீனவர்களால் முன் வைக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பாக எதிர்வரும் 17 ஆம் திகதி கொழும்பில் மீனவர் சங்கப்பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர். (ற–14)

## மோடி வருகை

இந்தியப் பிரதமரின் இலங்கை வருகைக்காக, இந்தியக் கடற்படை, ஐஎன்எஸ் விக்கிரமாதித்யா, ஐஎன்எஸ் விராட் ஆகிய விமானந் தாங்கிக் கப்பல்களையும், ஏழு போர்க்கப்பல்களையும் இந்தியப் பெருங்கடலில் நிறுத்தி உன்னிப்பான கண்காணிப்பை மேற்கொண்டுள்ளது.

அதற்கு மேலாக யாழ்ப்பாணத்திலும், மன்னாரிலும் இந்தியப் பிரதமர் செல்லவுள்ள இடங்களில் புலனாய்வுப் பிரிவினர் நேற்று மாலையிலிருந்தே நிறுத்தப்பட்டுள்ளனர்.

இந்தியப் பிரதமர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் மூன்று மணி நேரமும், எதுவித உணவுகளையும் அவர் உண்ண மாட்டார் என்றும், ஆளுநர் அலுவலகத்தில் இடம் பெறும் மதியபோசன விருந்தில் கூட, இந்திய அதிகாரி ஒருவரால் சோதனை செய்யப்பட்ட பின்னரே அவருக்கு அந்த உணவு பரிமாறப்படவுள்ளது என்றும் தெரியவருகின்றது.

அதேவேளை, 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம், பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த போது, இவ்வாறான கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் எவையும் மேற்கொள்ளப்பட் டிருக்கவில்லை

அத்துடன் யாழ்.நகருக்கு மோடி வருகை தருவதை முன்னிட்டு நகரைச் சுத்தமாக்கும் வேலைகள் நேற்று மும்முரமாக முன்னெடுக்கப்பட்டன. யாழ்.பொதுநூலகத்தின் வெளிப்புறம், சுப்பிரமணியம் பூங்காவின் வெளிப்புறமும் வெள்ளைப் பூச்சுக்கள் பூசப்பட்டன.

அதேவேளை, கச்சேரியில் இருந்து யாழ்.நகர் வரையான ஏ–9 வீதியிலும், யாழ்.நகரில் இருந்து காங்கேசன்துறை வரை காங்கேசன்துறை வீதியிலும் சனிக்கிழமை காலை 6 மணியில் இருந்து மாலை 6 மணி வரை வாகனங்கள் நிறுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டள்ளது என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.

(ற–5,4,108)

## எண்ணெய்

கருவி அமெரிக்காவில் இருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. புலம்பெயர் வாழ் தமிழர்கள் அந்தக் கருவியை அனுப்பி வைத்துள்ளனர்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் தூய நீருக்கான விசேட செயலணியின் அமர்வு நடைபெற்றது. அதில் வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் நிலத்தடி நீரில் உள்ள எண்ணெய் மாசு தொடர்பாக ஆராய்ந்துவரும் நிபுணர் குழுவின் இணைப்பாளரான பொறியியலாளர் எந்திரி சோ. சண்முகானந்தனிடம் அதனைக் கையளித்துள்ளார்.

வலிகாமம் பிரதேசத்தில் நிலத்தடி நீரில் எண்ணெய் மாசு கலந்துள்ளது தொடர்பாக வடக்கு மாகாண சபையால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு விரிவான ஆய்வுகளை மேற்கொண்டுவருகிறது. எனினும், தற்போது பயன்பாட்டில் உள்ள கருவிகளைப் பயன்படுத்தி ஆய்வுகளை மேற்கொள்வதற்கு அதிக நேரம் தேவைப்படுவதால் ஆய்வு முடிவுகளைப் பெறுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதனால் ஆய்வைத் துல்லியமாகவும் விரைவாகவும் மேற்கொள்ளக்கூடிய கருவியொன்றை பெற்றுத் தருமாறு வடமாகாண விவசாய அமைச்சர் வெளிநாடுகளில் உள்ள தமிழ் அமைப்புகள் சிலவற்றிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அதனடிப்படையில் அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தமிழ்ச் சங்கத்தினரும் ஆஸ்ரேலியாவில் உள்ள இலங்கைத் தமிழர்கள் சிலரும் இணைந்து நிதிப்பங்களிப்புச் செய்து இந்தக் கருவியை அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த நிகழ்வில் வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம், சபையின் எதிர்க் கட்சித் தலைவர் தவராசா, பா.கஜதீபன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ற–4)

## மோடி வரும்

வரவுள்ளதால் அந்தத் தினத்தில் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

போர் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை சொந்த நிலங்களில் பூர்விகமாக குடியிருந்த பிரதேத்தில் குடியமர்த்துதல், மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கு பூரணமான அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொடுத்தல், மீள்குடியேற்ற மக்களுக்காக வழங்கப்பட்ட இந்திய வீட்டுத்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டை எட்டரை இலட்சமாக வழங்குதல், ஏற்கனவே வழங்கியவர்களுக்கு மிகுதியை வழங்குதல், இந்திய– இலங்கை மீனவர்களது பிரச்சினைக்கு விரைந்து நடவடிக்கை எடுத்தல், வளங்களை அழிக்கும் தொழில் முறையைத் தடை செய்தல், இழுவைப்படகால் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குதல், சரணடைந்தவர்களை மீள ஒப்படைத்தல், காணமற்போனவர்கள் தொடர்பாக தகுந்த பதில் வழங்குதல் – போன்ற கோரிக்கைகள் அடங்கிய மகஜர் மனுவே இந்தியப் பிரதமரிடம் கையளிக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், கிராமிய உழைப்பாளர் சங்கம், பூந்தளிர் பெண்கள் அமைப்பு, மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், வலிகாமம் வடக்கு மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வுக் குழு, வலி.வடக்கு பிரஜைகள் குழு ஆகிய அமைப்புக்களுடன் இணைந்து மனித உரிமைச் செற்பாட்டாளர்கள், அரசியல் தலைவர்கள், மற்றும் பொது அமைப்புக்கள் எனப் பல தரப்பினர் இந்தப் போராட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

(ற–14)

## 13க்குப்

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை நாம் வரவேற்கிறோம். அவர் ஒரு நண்பர். வடக்கு வரும் அவரது, எம்மைப் பற்றிய கரிசனைகளை மதிக்கிறோம். அவரிடம் நாம், 1987 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இந்திய – இலங்கை உடன்பாட்டுக்கு அமைய உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை மீளாய்வு செய்ய வேண்டிய தருணம் இதுவென்று பரிந்துரைப்போம். இதற்குப் பதிலாக, வடக்கு – கிழக்கிற்கு கூடுதல் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.''–என்று அவர் நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார்.

"அதிகாரப் பகிர்வுக்காக வாதிடுபவர் என்ற வகையில், மோடி இலங்கையின் நிலைமையை ஏற்றுக் கொள்வார். குறிப்பாக, 13 ஆவது திருத்தச் சட்டத்தின் குறைபாடுகளை அவரால் புரிந்து கொள்ள முடியும் என்பதில் சந்தேகமில்லை. அவரது பயணமும், புரிதலும், எமது அரசியலமைப்பு பிரச்சினைகளுக்கு முடிவு கட்டுவதற்கு மிகவும் முக்கியமானது.

இந்தியாவின் மத்திய – மாநில அரசுகளுக்கிடையில் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும், அரசியலமைப்பினால் தான் மோடியின் சிறந்த தலைமைத்துவத்தின் மூலம், குஜராத்தை மாற்றியமைப்பது சாத்தியமானது. இது இலங்கையின் ஒற்றையாட்சி அரசியலமைப்பில் சாத்தியமற்றது.''– என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அணுகுமுறைகள் வித்தியாசமானவை. ஆனால், புதிய அரசின் சில பிரிவுகள் பொறுப்பின்றிச் செயற்படுகின்றன. இவ்வாறான நீண்டகால அரசியல் தந்திரோபாயமே இனப் பிரச்சினையை மோசமானதாக்கியது. ஆட்சி மாற்றம் இந்த நிலைமைக்கு முடிவுகட்டவில்லை.''–என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற–5)

## மோடியின்

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 86 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 43 பேர் யாழ்ப்பாணம் நீரியல் வளத் திணைக்களத்திடமும், 43 பேர் திருகோணமலை துறைமுகப் பொலிஸாரிடமும் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்தநிலையில், இன்று அவர்களது வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. விடுவிப்புக்கான உத்தரவு வழங்கப்பட்டுள்ளதால் இன்று மீனவர்கள் 86 பேரும் விடுவிக்கப்படவுள்ளனர்.

(ற–14)

## தமிழ்க்

விமான நிலையத்தை வந்தடைவார்.

அங்கிருந்து தாஜ்சமுத்திரா விடுதிக்கு நரேந்திர மோடி அழைத்துச் செல்லப்படுவார். காலை 9.30 மணிக்கு ஜனாதிபதி செயலகத்துக்குச் செல்லும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, அங்கு வரவேற்பளிக்கப்படும். அணிவகுப்பு மரியாதையும் இடம்பெறும். காலை 9.50 இலிருந்து 10 மணி வரை மூடிய அறைக்குள் ஜனாதிபதியுடனான இரகசிய சந்திப்பு இடம்பெறும்.

முற்பகல் 10 மணியிலிருந்து 11 மணி வரை, அமைச்சர்கள் மற்றும் ஜனாதிபதி இணைந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் சந்திப்பர். 11 மணியிலிருந்து 11.30 மணி வரையில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடும் நிகழ்வு இடம் பெறும். இதனைத் தொடர்ந்து மகாபோதி சமூகத்தினரை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

பி.ப 1.30 மணிக்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு மதிய போசன விருந்தளிப்பார். இதன் பின்னர் பி.ப 3 மணிக்கு நாடாளுமன்றத்துக்குச் செல்லும் நரேந்திர மோடி அங்கு உரையாற்றவுள்ளார். அத்துடன் அங்கு இடம்பெறும் தேநீர் விருந்துபசாரத்திலும் கலந்து கொள்வார்.

இதன் பின்னர் பி.ப 4.30 மணிக்கு, இலங்கையில் கொல்லப்பட்ட இந்திய அமைதிப்படையினரின் நினைவிடத்திற்கு சென்று அஞ்சலி செலுத்துவார். பி.ப 5.15 மணியளவில் வர்த்தக சமூகத்தினரை இந்தியப் பிரதமர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். இதன் பின்னர் இரவு 6 மணியிலிருந்து 9 மணி வரையில் தொடர்ச்சியான சந்திப்புக்கள் இடம்பெறவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரையும் அவர் சந்திக்கவுள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டிசில்வா ஆகியோரையும் சந்தித்த பின்னர் இறுதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை மீளவும் பிரதமர் மோடி சந்திக்கவுள்ளார். (ற–5)

## உள்ளகப்

குறிப்பிட்டுள்ளார்.

பி.பி.சியின் சிங்கள சேவைக்கு பிரிட்டனில் வைத்து வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறி யுள்ளார்.

"இறுதிக் கட்டப் போரில் நடந்த, போர்க்குற்றங்கள் குறித்து ஆராய்வதற்கு, உள்நாட்டு விசார ணை இன்னும் ஒரு மாதத்தில் ஆரம்பிக்கப்படும் என்று நான் நம்புகின்றேன். இந்த விசாரணை இலங்கையின் சட்டதிட்டங்க ளுக்கு அமைய செயல்படும் ஒன் றாக இருக்கும். இலங்கையின் அரசியல் சட்ட வரையறைக்குள் இயங்கும்.

அந்த விசாரணையில் பணியாற்றும் அதிகாரிகள் சுயேச்சையாகவும், பக்கசார்பற்ற முறையிலும் செயல்படுமாறு கோரப்படுவார்கள். விசாரணையின் முடிவில் தவறிழைத்ததாகக் கண்டறியப்படும் எவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால், இந்த விசாரணையில் வெளியார் எவரும் தலையிட அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஐ.நா. சபை வல்லுநர்கள் தெரிவித்த கருத்துக்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.''– என்று அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த ஜனாதி பதி,

"இந்தப் பிரச்சினை குறித்து ஆராய்ந்து முடிவெடுக்க ஒரு உயர் மட்டக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. அது பரிசீலித்து இவர்கள். விடுதலை செய்யப்பட வேண்டுமா அல்லது அவர்கள் மீது குற்றச்சாட்டுகள் பதியப்பட வேண்டுமா என்பது குறித்து முடிவு செய்யப்படும். நல்லிணக்கத்தை எட்டும் நோக்கிலான புதிய பாதையில் பயணிக்கத் தொடங்கலாம் என்ற நம்பிக்கை இருக்கின்றது.''–என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற–5)

## கோத்தாவைக்

என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது– இவ்வாறு கொழும்பு ரெலிகிராப் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

தேசிய நிறைவேற்று அதிகார சபையின் கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது. அந்தக் கூட்டத்திலேயே இவ்வாறு முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

காலி துறைமுகத்தில் சட்டவிரோதமாக இயங்கி வந்ததாகக் கூறப்படும் மிதக்கும் ஆயுதக் களஞ்சியசாலை விவகாரம் தொடர்பில் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. முன்னாள் பாதுகாப்புச் செயலாளரின் உத்தரவுக்கமையவே இந்தத் திட்டம் முன்னெடுக்கப் பட்டதாகவும், இதில் பெரும் மோசடிகள் இடம்பெற்றன எனவும் இதன் போது சுட்டிக்காட்டப்பட்டது.

அவன்ட் கார்ட் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரிடம் விரிவாக விசாரணை நடத்தவும், அதற்காக அவரை கைது செய்து தடுத்து வைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பியதன் பின்னர் கோத்தபாயவை கைது செய்வது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. (ற–5)

# திருமலை மீனவரின் பிரச்சினைக்கு தீர்வு

திருகோணமலை, மார்ச் 13

வெளிமாவட்ட மீனவர் திருகோணமலைக்கு வந்து மீன்பிடியில் [ஈ]டுபடுவதால் உள்ளூர் மீனவர்கள் பெரிதும்பாதிக்கப்படுவது தொடர்ச்சியாக மாவட்ட மீனவர் சங்கங்களின் அமைப்பால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்த எதிர்ப்புக்கும் பேச்சுக்கும் நிரந்தர தீர்வு ஒன்று எட்டப்பட்டுள்ளது.



இவ்விடயம் தொடர்பாக கடந்த புதன்கிழமை குச்சவெளி பிரதேச செயலகத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அகமட், பிரதிப் போக்குவரத்து அமைச்சர் எம்.எஸ் தௌபிக், மாவட்ட அரச அதிபர் ஏ.ஏ.புஸ்பக்குமார, குச்சவெளி பிரதேச செயலாளர் தயாபரன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன், அன்வர் மற்றும் மீனவர் சங்கத் தலைவர்கள், மீன்பிடி முதலாளிமார்கள் ஆகியோருடன் நடைபெற்ற கலந்துரையாடல்களின் முடிவாக பின்வரும் தீர்மானம் எட்டப்பட்டது.

தற்போது வெளிமாவட்ட மீனவர்களால் தரித்து வைக்கப்பட்டுள்ள 38 மீன்பிடிப்படகுகளுடன் திருகோணமலை பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 10 மீன்பிடிப் படகுகளும் சேர்த்து மொத்தமாக வெளிமாவட்டங்களுக்கான 48 மீன்பிடி படகுகள் இவ்வருட இறுதி வரை மட்டும் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்படும். அதன்பின்னர் எந்தவொரு வெளிமாவட்ட மீன்பிடிப் படகுகளும் இந்த மாவட்டத்தில் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்படாது என்பதை உங்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர், பிரதி போக்குவரத்து அமைச்சர், மாவட்ட அரச அதிபர், குச்சவெளி பிரதேச செயலாளர் ஆகியோர் தனித்தனியாக எழுத்து மூலமான கடிதங்களை மீனவர் சங்க பிரதிநிதிகளிடம்கையளித்து பிரச்சினையை சுமுகமாக தீர்த்து வைத்துள்ளனர்.(வ-40)

## முதலமைச்சரை மாற்ற கோரிக்கை

மத்திய மாகாண முதலமைச்சராக திலின பண்டார தென்னக்கோனை நியமிக்குமாறு கோரி மாகாண சபையின் 30 ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆளுநரிடம் சத்தியக் கடதாசியைக் கையளித்துள்ளனர்.

சத்தியக் கடதாசி வழங்கிய உறுப்பினர்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 15 உறுப்பினர்களும் அடங்குவதாக மத்திய மாகாண சபை உறுப்பினர் திலின பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

சத்தியக் கடதாசிகளைக் கையளிக்கும்போது மத்திய மாகாண எதிர்க்கட்சித் தலைவர் வசந்த அலுவிஹாரவும் பிரசன்னமாகியிருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய மாகாண சபையில் மொத்தமாக 58 உறுப்பினர்கள் உள்ளதுடன் மாகாண முதலமைச்சராக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர் சரத் ஏக்கநாயக்க பதவி வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ)

## சிக்கியது கால்நடை திருட்டுக் கோஷ்டி

அம்பாறை, மார்ச் 13

அம்பாறையில் பல பிரதேசங்களில் கால்நடைகளை நீண்ட காலமாகத் திருடி வந்த கோஷ்டி ஒன்றைச் சேர்ந்த மூவரை 16 எருமை மாடுகளுடன் கடந்த புதன்கிழமை தீகவாபி பிரதேசத்தில் கைது செய்துள்ளதாக தமண பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்தே தீகவாபி வயல் பிரதேசத்தில் புதன்கிழமை மாலை 5 மணியளவில் குறித்த மூவரையும் கைது செய்துள்ளதுடன் எருமை மாடுகளையும் மீட்டுள்ளனர்.(வ)



## அபராதமும் சிறையும்

அம்பாறை, மார்ச் 13

அக்கரைப்பற்று பட்டியடிப்பிட்டி பிரதேசத்தில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் கைதான நபருக்கு ரூபா 10 ஆயிரம் அபராதமும் ஒரு மாத கடூழிய சிறைத் தண்டனையும் விதித்து அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற நீதிவான் எச்.எம்.எம். பஸீல் கடந்த புதன்கிழமை தீர்ப்பளித்தார்.

குறித்த நபர்நேற்று பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

அவரை புதன்கிழமை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோதே நீதிவான் மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார்.

அத்துடன் திருக்கோவில் பிரதேசத்தில் மதுபானம் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான மற்றுமொரு நபருக்கு 7 ஆயிரத்தி 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. (வ)

## ஐவருக்கு அபராதம்

வலி.தென்மேற்கு, மார்ச் 13

சுகாதாரத்துக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் பொது இடத்தில் திண்மக் கழிவுகளைக் கொட்டிய ஐவர் குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து மல்லாகம் நீதிவான் அவர்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவிலுள்ள ஆனைக்கோட்டை, சண்டிலிப்பாய், மானிப்பாய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஐந்து வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக மானிப்பாய் சுற்றுச்சூழல் பொலிஸாரால் மல்லாகம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது இதன்போது குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து நீதிவான் அவர்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார். (வ-115)

## ஆன்மிக சொற்பொழிவு

தென்மராட்சி, மார்ச் 13

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று இரவு 7 மணிக்கு 'தனிமனித அமைதிக்காய் நிறுவன சொற்பொழிவாளர் பிரேம்ராவத்தின் அமைதியின் சொற்கள் என்னும் சிறப்பு சொற்பொழிவு இடம்பெறும் என்று ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (வ-9)



கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்ற பெண் முயற்சியாளர்களால் உற்பத்தி செய் யப்படும் பொருள்களுக்கான கண்காட்சியும் விற்பனையையும் நாடா வெட்டி ஆரம்பித்து வைக்கிறார் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர். (வ-21)

## முதிரைமரக் குற்றிகளுடன் இருவர் கைது

மட்டக்களப்பு, மார்ச் 13

பாரவூர்தி ஒன்றில் சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்பட்ட ஒரு தொகுதி முதிரை மரக்குற்றிகளை மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு கைப்பற்றியுள்ளனர்.

சாரதியும் உதவியாளரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கரடியனாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கித்துள் பிரதேச வனப் பகுதியில் வெட்டப்பட்டு, மர ஆலை ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டவேளை வீதியில் விசேட கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் இந்த மரக் குற்றிகளைக் கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மரக்குற்றிகளின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு வனவள பாதுகாப்புத் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர். (வ)

## ஆதிவாசிகள் இனத்தில் படித்தோருக்கு வேலை

### வழங்குமாறு உத்தரவிட்டார் ஹக்கீம்

மட்டக்களப்பு, மார்ச் 13

ஆதிவாசி இனத்தில் கல்வி பயின்ற இளைஞர், யுவதிகளுக்கு நீர் வழங்கல் அதிகார சபையில் தொழில் வாய்ப்புக்களை வழங்குமாறு சபையின் தலைவர் கே.ஏ.அன்ஸாருக்கு நீர் வழங்கல் வடிகாலமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் ரவூப் ஹக்கீம் உத்தரவிட்டுள்ளார்.

அமைச்சர் ஹக்கீமை அவரது அமைச்சில்புதன்கிழமைசந்தித்த ஆதிவாசிகளின் மறைந்த தலைவரின் மகனான ஹெணானிகல, தமது இனத்தைச் சேர்ந்த படித்த இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்தார்.

அதனை அடுத்தே அந்த இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்குமாறு நீர் வழங்கல் அதிகார சபையின் தலைவருக்கு அமைச்சர் உத்தரவிட்டார்.

ஆதிவாசிகளில் படித்தவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.(வ)

## கிளிநொச்சியில் நடைபெற்ற மாபெரும் மகளிர் தின நிகழ்வு

கிளிநொச்சி மாவட்டச் செயலகமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் ஒன்றிணைந்து நடத்திய மாபெரும் மகளிர் தின நிகழ்வு நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகி மாலை வரை நடைபெற்றது.

நிகழ்வில் பெண்களுக்கான ஓவியப் போட்டி, விநோத விளையாட்டு நிகழ்வுகள், அத்துடன் பெண் முயற்சியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கான கண்காட்சியும் விற்பனையும் ஆகியவற்றை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து பெண்கள் சார்ந்த பல விநோத விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன. இப்போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு விசேட பரிசில்களும் வழங்கப்பட்டன. தலைமைத்துவ குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி வழங்கப்பட்டது. (வ-21)

# உதவித் திட்டப் பதிவுகளை மேற்கொள்ள மறுக்கும் சங்கங்கள் மீது நடவடிக்கை

## வடக்கு மாகாண அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13

முன்னாள் போராளிகள், மாவீரர்குடும்பங்கள்மற்றும்தமிழ்அரசியல் கைதிகளின் குடும்பங்களுக்கான உதவித் திட்டப் பதிவுகளை அரசியல் ரீதியான காரணங்களாலோ அல்லது வேறு காரணங்களாலோ கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மேற்கொள்ளத் தவறினால் அந்தச் சங்கங்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

– இவ்வாறு வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண போக்குவரத்து, மீன்பிடி, கிராம, வீதி அபிவிருத்தி அமைச்சால், முன்னாள் போராளிகள், மாவீரர் குடும்பங்கள் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்களுக்கான உதவித் திட்டங்கள் வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதற்காக வடக்கிலுள்ள ஒவ்வொரு கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களால் பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அரசியல் ரீதியிலான தெரிவுக்குள்ளான கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் என்பன, இந்தப் பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்வதை உதாசீனப்படுத்துகின்றன. அதனால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

அத்துடன் சில பிரதேசங்களில், தமக்கு விவரங்கள் தெரியாது என்பதனால் உறுதிப்படுத்த முடியாது என்று விண்ணப்பம் செய்யச் செல்லும் மக்களை திருப்பி அனுப்புகின்ற செயற்பாடும் தொடர்கின்றது.

இது தொடர்பில் வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரனிடம் கேட்ட போது;

"அரசியல் காரணங்களுக்காக திருப்பி அனுப்பும் கிராம அபிவிருத்தி, மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் மீது உடனடியாகவே கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும். [ஹோல்] ரங்கள் தெரியவில்லை என்றால், உறுதிப்படுத்தக் கூடியவற்றை மாத்திரம் உறுதிப்படுத்தி கையெழுத்திட்டு அனுப்ப முடியும்.

கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் கிராம சேவையாளர்களினால் இவ்வாறு அலைக்கழிக்கப்பட்டால் அவர்கள் பிரதேச செயலகத்திலுள்ள கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரை தொடர்பு கொண்டு அவர் ஊடாகப் பதிவுகளை மேற்கொண்டு அனுப்ப முடியும்" என்று அமைச்சர் பா.டெனீஸ்வரன் குறிப்பிட்டார். (ற–5,426)

---

## கஞ்சா வைத்திருந்த நபருக்கு 180 மணிநேர சமூகப்பணி

தென்ராட்சி, மார்ச் 13

கஞ்சா வைத்திருந்த மட்டுவில் தெற்கைச் சேர்ந்த ஒருவரை 180 மணித்தியால சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்குக் கிடைத்த தகவலை அடுத்து பொலிஸார் மட்டுவில் தெற்கில் உள்ள வீடொன்றைக் கடந்த செவ்வாய்க்கிழமை சுற்றிவளைத்தனர்.

அங்கு தேடுதல் நடத்தியபோது மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சாவைக் கைப்பற்றியதோடு, குறித்த நபரையும் கைது செய்திருந்தனர்.

கைதானவரை நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத்திய போது வழக்கை விசாரித்த நீதிவான் 25 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்ததோடு, குறித்தநபரை 180 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்த நீதிமன்ற சமுதாயங்கள் சீர்திருத்தப் பிரிவில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ற–9)

---

## பிறப்பு, திருமண பதிவுகள் 2014 வரை கணினி மயம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

2014 ஆம் ஆண்டு வரையிலான பிறப்பு – இறப்பு – திருமணப் பதிவுகள் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. 2008 ஆம் ஆண்டு வரையிலான பதிவுகளே முன்னர் தரவேற்றப்பட்டிருந்த நிலையில், தற்போது 2014 ஆம் ஆண்டு வரையில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதனால் பொதுமக்கள் இனிமேல் இலகுவாகத் தரவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று வடக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகம் செல்வி ஆனந்தி ஜெயரட்ணம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மாத்திரம், பிறப்பு – இறப்பு – திருமணப் பதிவுகள் கணினிமயப்படுத்தப்பட்டுள்ளன. 'யு.என்.எச்.சி.ஆரின்' நிதியுதவியுடன் இந்தச்செயற்றிட்டம்மேற்கொள்ளப்பட்டது. 2011 ஆம் ஆண்டு முதல் இது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தவசதியால் பொதுமக்கள் பதிவாளர் திணைக்களத்துக்கு வந்து தமது பிறப்பு – இறப்பு – திருமணப் பதிவு பிரதிகளைப் பெறவேண்டிய தேவையில்லை. எந்தவொரு பிரதேச செயலகத்துக்கும் சென்று இதனை தற்போது பெற்றுக்கொள்ள முடியும். இதுவரை காலமும் 2008 ஆம் ஆண்டுக்கு முன்னர் வரையிலான பதிவுகளையே பெறக் கூடியதாக இருந்தது. அதன் பின்னரான, பதிவுகள் கணினிமயப்படுத்தப்படாமல் இருந்தது.

யு.என்.எச்.சி.ஆரால் 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த நிதியில், 2008 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையிலான பதிவுகளும் கணினி மயப்படுத்தப்பட்டுள்ளன. அதையடுத்து பொதுமக்கள் 2014 ஆம் ஆண்டு வரையிலான பதிவுகளை இலகுவாகப் பெற முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–5)

---

## வாக்காளர் இடாப்பில் பிழைகளை திருத்தலாம்

தென்மராட்சி, மார்ச் 13

வாக்காளர் இடாப்பில் பிழையாகப் பதியப்பட்டுள்ள பெயர்களையும் தேசிய அடையாள அட்டை இலக்கங்களையும்தேசிய அடையாளஅட்டைகளில்காணப்படும் தகவல்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டு திருத்தம் செய்வது தொடர்பான அறிவித்தல் தேர்தல்கள் ஆணையாளரால் மக்கள் பார்வைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

ஒருசில வாக்காளர்களின் பெயர்களும்,தேசிய அடையாளஅட்டை இலக்கங்களும் வாக்காளர் இடாப்பில் சரியாகப் பதியப்பட்டிருக்கவில்லையென அறிக்கையிடப்பட்டுள்ளது. அத்தகைய வாக்காளர்களிடமிருந்து அது தொடர்பான தகவல்களைச் சேகரித்து தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. பெயர் அல்லது தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது பெயரும் தேசிய அடையாள அட்டை இலக்கமும் அல்லது வேறு தகவல்கள் பிழை யாக வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருப்பின் அது தொடர்பான அனைத்து தகவல்களையும்(மாவட்டம்) வாக்கெடுப்பு பிரிவு(பழைய தேர்தல் தொகுதி)வாக்கெடுப்புமாவட்ட இலக்கம்,கிராம அலுவலர் பிரிவு, வீட்டு இலக்கத்துடன் வதிவிட முகவரி, முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகிய தகவல்களை தே.அ.அ. பிரதியுடன் வசிக்கின்ற மாவட்டத்தின் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவிப் பதிவு அலுவலருக்கு அல்லது தேர்தல் ஆணையாளர் தேர்தல்கள் செயலகம், சரண மாவத்தை, இராஜகிரிய என்னும் முகவரிக்கு எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு சமர்ப்பிக்க வேண்டும் – என்று தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளார்.(ற–9)

---

## சட்டவிரோத மணல்: சாரதிக்கு ரூ.5 ஆயிரம் அபராதம்

வலி.தென்மேற்கு, மார்ச் 13

அனுமதியின்றிச் சட்டவிரோதமான முறையில் டிராக்டரில் மணல் ஏற்றிச் சென்ற சாரதிக்கு 5 ஆயிரம் ரூபா அப்ராதம் விதித்த மல்லாகம் நீதிமன்[ஹோல்] மணலையும் பறிமுதல் செய்[ஹோல்] மாறு உத்தரவிட்டது.

காக்கைதீவுப் பகுதியில் இருந்து அனுமதியின்றி டிராக்டரில் மணல் ஏற்றிச் சென்றவரை, ரோந்தில் ஈடுபட்டிருந்த பொலிஸார் கைது செய்தனர்.

இவருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் மானிப்பாய் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதையடுத்து நீதிமன்று அவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது. (ற–115)

---

## அச்சுவேலி பகுதியில் போதைப் பாவனை

### சமூக ஆர்வலர்கள் கவலை

அச்சுவேலி, மார்ச் 13

அச்சுவேலிப் பகுதியில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளது என்று கவலை வெளியிட்டுள்ள சமூக ஆர்வலர்களும், பெற்றோரும் போதைப் பொருள் பாவனை மாணவர் மட்டத்திலும் காணப்படுகின்றது என்றும் தெரிவித்துள்ளனர்.

போதையூட்டிய பாக்கு மற்றும் புகைபொருள்போன்ற பொருள்களின் பாவனை அதிகரித்துள்ளது என்று கூறும் அவர்கள், பாடசாலை மாணவர்கள் பாடசாலை நேரத்திலேயே பாக்கு வகைகளை உபயோகிப்பதை அவதானிக்க முடிகின்றது என்றும் தெரிவிக்கின்றனர்.

மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் இவ்வாறான போதைப்பொருள் பாவனை சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கவலை வெளியிட்டுள்ள அவர்கள், இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற–11)

---

## போர் முடிவுற்றதன் பின்னர் கிராமப்புறங்கள் வளர்ச்சி

### வடக்கு மாகாண சபை உறுப்பினர் சித்தார்த்தன் தெரிவிப்பு

வலி.தென்மேற்கு, மார்ச் 13

நீண்ட கொடிய போருக்குத் தீர்வு எட்டப்பட்டதை அடுத்து தற்போது கிராமப் புறங்களில் ஓரளவு வளர்ச்சியைக் காணக் கூடியதாக இருக்கின்றது. கிராமப் புறங்களில் பின்தங்கிய நிலையில் காணப்படும் பாடசாலைகள் வளர்ச்சி அடைய வேண்டுமானால் அதிகாரிகள் மட்டுமல்ல சமூகக் குழுக்களும் அக்கறை கொண்டவர்களாக இருக்க வேண்டும்– இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலையின் வருடாந்த விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"கிராமப்புற பாடசாலைகள் மாணவர்களின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய வகையில் வளர்ச்சியடையுமானால் மாணவர்கள் நகர்ப்புறங்களிலுள்ள பாடசாலைகளை நோக்கி நகர்வதைத் தடுக்க முடியும். இந்தப் பாடசாலைகளின் தேவைகள் குறித்து பாடசாலைச் சமூகத்தினர் பல கோரிக்கைகளை என்னிடத்தில் முன்வைத்துள்ளனர். இந்த விடயம் தொடர்பில் மத்திய மற்றும் மாகாண சபைகளின் ஊடாக உதவிகளைப் பெற்றுத் தருவதற்கு தயாராக உள்ளேன். குறிப்பாக உங்கள் வகுப்பறைகளை புதிதாக மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்."– என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

புலம்பெயர் மக்களின் நிதி உதவியுடன் சுமார் 45 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நீர்த்தாங்கியின் நினைவுக் கல்லையும் அவர் திரைநீக்கம் செய்தார். (ற–115)

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகங்கள் மூடப்பட்டன

## யாழ்.நீதிமன்ற உத்தரவுக்கமைய

யாழ்ப்பாணம், மார்ச் 13

பொதுச்சுகாதார பரிசோதகர்களின் அதிரடி நடவடிக்கையால் யாழ். நகரின் ஐந்து சந்திப் பகுதி மற்றும் பழைய தபாற்கந்தோர் வீதிப்பகுதியில் சுகாதாரக் குறைவான முறையில் நடைபெற்று வந்த மூன்று உணவகங்கள் நேற்றுமுன்தினம் இழுத்து மூடப்பட்டன. வேறு இரண்டு உணவகங்களுக்கு குறைபாடுகளைச் சீர்செய்வதற்கு காலக்கெடு விதிக்கப்பட்டது.

குறித்த பகுதியில் இயங்கி வந்த உணவகங்களுக்கு சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அவற்றில் சில உணவகங்கள் அடிப்படை சுகாதார வசதிகளின்றி மோசமான நிலைமையில் இயங்கி வந்ததை அவதானித்துள்ளனர். குறித்த உணவகங்களுக்கு ஏற்கனவே பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் குறித்த குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்த போதும், தொடர்ந்தும் அந்த நிறுவனங்கள் அதே குறைபாடுகளுடன் இயங்கி வந்துள்ளன.

அதையடுத்து அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொண்ட சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்றுமுன்தினம் குறித்த உணவகங்களின் உரிமையாளர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். அவர்களுக்கு தலா ரூபா பத்தாயிரம் அபராதம் விதித்த நீதிவான் பெ.சிவகுமார் மூன்று உணவகங்களை மூடுமாறு உத்தரவிட்டார். இரண்டு உணவகங்களின் உரிமையாளர்கள் சுகாதாரக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளமையால் இருவார காலப்பகுதியில் குறித்த தேவைப்பாடுகள் அனைத்தையும் பூர்த்தி செய்யுமாறு காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட சுகாதார பரிசோதகர்களின் அதிரடி நடவடிக்கைகள் காரணமாக சுகாதாரக் குறைபாடுகளுடன் இயங்கி வந்த பல உணவகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டதுடன் பல உணவகங்கள் மூடப்பட்டுள்ளன. (ற-103)

# கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்துக்கு நீர்த்தாங்கி

## ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது



கொழும்பு, மார்ச் 13

யாழ்ப்பாணத்தில் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் முன்னெடுக்கப்படும் கடல்நீரை நன்னீராக மாற்றும் செயற்றிட்டத்துக்கான நீர்த்தாங்கிகள் அமைக்கும் பணிகள் கடந்த ஜனவரி மாதம் முதல் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வடிகாலமைப்புச் சபையின் சமூக அணி திரட்டல் விசேட தூதுவர் ரி.பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

"ஆசிய அபிவிருத்தி வங்கி, பிரான்ஸ் நாட்டின் அபிவிருத்தி முகவர் நிறுவனம் மற்றும் இலங்கை அரசு ஆகியவற்றின் 9 ஆயிரத்து 100 மில்லியன் ரூபா நிதியுதவியில், கடல்நீரை நன்னீராக்கும் திட்டம், மருதங்கேணி – தாளையடி பிரதேசத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது."– என்று அவர் தெரிவித்தார்.

"கடல்நீரை நன்னீராக்கி அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்காக யாழ். மாவட்டத்தில் 15 நீர்த்தாங்கிகள் அமைக்கப்படவுள்ளன. அல்லைப்பிட்டி, நாவற்குழி, பழைய பூங்கா, வட்டுக்கோட்டை, நாவாந்துறை, வேலணை ஆகிய 6 பிரதேசங்களில் நீர்த்தாங்கிகள் அமைக்கும் பணிகள் கடந்த ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக 353 மில்லியன் ரூபாய் நிதி செலவு செய்யப்படுகின்றது.

அனைத்து நீர்த்தாங்கிகளையும் அமைக்கும் பணிகள் ஒருவருடத்தில் நிறைவடையும். தொடர்ந்து இரண்டாம் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்படும்"– என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# இனந்தெரியாதோர் தாக்கி கற்குளி வர்த்தகர் காயம்

தென்மராட்சி, மார்ச் 13

இறுதிக்கிரியை ஒன்றுக்குச் சென்றுவிட்டு, வீடு திரும்பிய வர்த்தகர் ஒருவரை மோட்டார் சைக்கிள்களில் வந்த 15க்கும் மேற்பட்டோர் இடைவழியே மறித்துத் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சாவகச்சேரி டச்சு வீதி புளியடிச் சந்தியில் நடந்துள்ளது.

சாவகச்சேரி, கற்குளியைச் சேர்ந்த குறித்த வர்த்தகர் மந்துவிலில் நடந்த இறுதிச் சடங்கு ஒன்றுக்குச் சென்று விட்டுத் திரும்பும் போதே தாக்குதல் நடந்துள்ளது. 7 மோட்டார் சைக்கிள்களில், இலக்கத் தகடுகளை குழைகள் கட்டி மறைந்தவாறு வந்த 15க்கும் மேற்பட்டோர் பொதுமக்கள் பார்த்துக் கொண்டிருக்கத் தக்கதாக வீதியில் வைத்து வர்த்தகரைத் தாக்கி விட்டுத் தப்பினர் என்று தெரிவிக்கப்பட்டது. தாக்குதலுக்கு இலக்கானவரும் தனது சைக்கிளை அந்த இடத்திலேயே விட்டு விட்டுச் சென்றுவிட்டார் என்றும் கூறப்பட்டது.

இந்தச் சம்பவத்தைக் கண்ட பொதுமக்கள் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர். ஆயினும் பொலிஸார் வந்தபோது தாக்குதலுக்கு உள்ளானவரும், தாக்கியவர்களும் அந்த இடத்தில் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் காலை வரையில் தாக்குதலுக்கு உள்ளானவரின் சைக்கிள் அந்த இடத்திலேயே காணப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளைமேற்கொண்ட பொலிஸார் தாக்குதலுக்கு உள்ளானவர் சாவகச்சேரி கற்குளியைச் சேர்ந்தவர் என்று இனங்கண்டனர். அதையடுத்து அவரது வீட்டுக்குச் சென்று விசாரணை மேற்கொண்டனர். அவர் அரச மருத்துவனை செல்லாது தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்றிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளனர். எனினும் இதுவரை முறைப்பாடு செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# மாமன் விருந்தால் போதை காரை நொறுக்கிய மருமகன்

தென்ராட்சி, மார்ச் 13

வெளிநாட்டில் இருந்து வந்த மாமன் விருந்து வைத்தார். அதில் கலந்து கொண்ட மருமகன் போதை தலைக்கேறி மாமனின் காரையே அடித்து நொறுக்கினார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவுகச்சாயில் நடந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

அதையடுத்து பொலிஸார் குறித்த இளைஞரைக் கைது செய்து, சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் ஒப்படைத்தனர்.

அதேவேளை, வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்த பெண் உட்பட நால்வர் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி ஆதார மருத்துமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ற-9)

# தென்மராட்சியில் 'லீக்ஸ்' அமோகமான விளைச்சல்

தென்மராட்சி, மார்ச் 13

தென்மராட்சிப் பிரதேசத்தில் விவசாயி ஒருவரால் பரீட்சார்த்தமாகப் பயிரிடப்பட்ட 'லீக்ஸ்' பெரு விளைச்சலைத் தந்துள்ளது. மீசாலை வடக்கு, வேம்பிராயைச் சேர்ந்த விவசாயி ஒருவரே இந்த பரீட்சார்த்த முயற்சியை மேற்கொண்டிருந்தார்.

ஏனைய பிரதேசங்களில் இருந்து கொண்டுவரப்படும் 'லீக்ஸ்' பயிரை விடவும் மென்மையாகவும், சுவையாகவும் காணப்படுகின்றது என்று கூறும் பிரதேச மக்கள் அதனை விரும்பி கொள்வனவு செய்கின்றனர்.

கடந்த ஆண்டு தென்மராட்சி பிரதேசத்தில் பரீட்சார்த்தமாக பயிரிடப்பட்ட உண்மை வெங்காயம் பெரு விளைச்சலை கண்டிருந்தது. அதையடுத்து இந்த ஆண்டு பெருமளவு விவசாயிகள் உண்மை வெங்காயம் பயிரிட்டுள்ளனர். (ற-9)

# பிரேமதாஸ வீட்டுத் திட்ட வீடுகளுக்குக் கடனுதவி

யாழ்ப்பாணம், மார்ச் 13

பிரேமதாஸ வீட்டுத் திட்ட வீடுகளைப் புனரமைப்புக்கு கடனுதவி வழங்கப்படவுள்ளது என்று தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பிரதேச முகாமையாளர் எம்.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

"பிரேமதாஸ வீட்டுத் திட்ட வீடுகளைப் புனரமைக்கும் நோக்குடன் பயனாளிகளுக்கு கடனுதவி வழங்கப்படவுள்ளது. 6 சதவீத வட்டியுடன் ரூபா 50 ஆயிரம் வழங்கப்படவுள்ளது. அதைப் பெற்றுக்கொள்ள விரும்பும் பயனாளிகள் புதன் கிழமைகளில் தங்கள் பிரதேசத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தரை அணுகி விளக்கங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்."– என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-10)

# எழுதுமட்டுவாழ் தெற்கில் வீதி விளக்கு பொருத்த ஏற்பாடு

தென்மராட்சி, மார்ச் 13

சாவகச்சேரி பிரதேச சபையால் தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மின்சார வசதி அண்மையில் வழங்கப்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்கு, கரம்பகம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் பங்களிப்புடன் வீதி விளக்குள் பொருத்தப்படவுள்ளன.

வீதி விளக்குகள் பொருத்தவுள்ள குடியிருப்பாளர்கள் தமது விண்ணப்பத்தை கொடிகாமத்தில் உள்ள சாவகச்சேரி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு அறிக்கப்பட்டுள்ளது. கிடைக்கும் விண்ணப்பங்களின் முன்னுரிமை அடிப்படையில் வீதி விளக்கு பொருத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்காக முதற்கட்டமாக மூன்று லட்சம் ரூபா சபை நிதியில் இருந்து ஒதுக்கப்பட்டுள்ளது. பிரதேச சபை உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளையின் வேண்டுகோளை அடுத்தே இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (ற-9)

# மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

தென்மராட்சி, மார்ச் 13

உசன் ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகத்தின் 55 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வறிய குடும்பங்களைச் சேர்ந்த 55 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்து கொண்டு உபகரணங்களை மாணவர்களுக்கு வழங்கினார்.

கழக அங்கத்தவர்களால் மாதாந்தம் ஒதுக்கப்பட்ட சந்தாப் பணத்தில் கல்வி அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் இந்தக் கற்றல் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் ஊர் மக்களது நிதிப் பங்களிப்புடன் கழக விளையாட்டு மைதான விஸ்தரிப்புக்கு காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# பிரிவுபசார விழா

யாழ்ப்பாணம், மார்ச் 13

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராகக்கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள ஆ.ராஜேந்திரனுக்கு பிரிவுபசார விழா நடத்தப்படவுள்ளது.

இந்த விழா எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரியில் கிழக்குப் பல்கலைக் கழக மொழித்துறைப் பேராசிரியர் கலாநிதி செ.யோகராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (ற)

# சென்றல்-சென்.ஜோன்ஸ் ஒரு நாள் ஆட்டம் நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 13

சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்.மத்திய கல்லூரிக்கும் இடையிலான 13 ஆவது தடவையாக இடம் பெறும் 50 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.


இதுவரை இடம் பெற்ற 12போட்டிகளில் சென்.ஜோன்ஸ் கல்லூரிஅணி 6 தடவைகளும், யாழ். மத்திய கல்லூரி அணி 5 தடவைகளும் வெற்றி பெற்றுள்ளன.

இம்முறை இடம்பெற்ற 109ஆவது வடக்கின் மாபெரும் போர் துடுப்பாட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றது. அதேபோல் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 50பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டப் போட்டியிலும் வெற்றி பெறுமா அல்லது யாழ். மத்திய கல்லூரி வெற்றியைத் தனதாக்குமா என்பது நாளை தெரியும். (த-23)


யாழ்.மத்திய கல்லூரி


சென்.ஜோன்ஸ் கல்லூரி

# சாவகச்சேரி ஸ்ரீமுருகனின் கரப்பந்தாட்ட இறுதியாட்டம்



தென்மராட்சி, மார்ச் 13

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகக் கட்டடத் திறப்பு விழாவும் கழகத்தினால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளின் இறுதிப் போட்டிகளும் நாளை சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு இடம் பெறும்.

விளையாட்டுக் கழகத் தலைவர் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ், சாவகச்சேரி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பி.கே.கே. கபில பிரேமதாஸ, கோயிற்குடியிருப்பு பிரிவு கிராம அலுவலர் ப.நிரஞ்சன், கோயிற்குடியிருப்பு முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபைத் தலைவர் கு.நாகராஜா ஆகியோரும் கலந்து கொள்வர்.

கரப்பந்தாட்ட இறுதிப் போட்டிகளில் தென்மராட்சி பிரதேச கழகங்களுக்கிடையிலான இறுதிப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் வி.க. அணியும் கைதடி வளர்மதி வி.க. அணியும், யாழ். மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட போட்டிகளின் இறுதிப் போட்டியில் புத்தூர் கலைமதி வி.க. அணியும் உடுப்பிட்டி நவஜீவன் வி.க.அணியும் மோதவுள்ளன. (த-9)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 13

வவனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்திய சாந்தன்,யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு மின்னொளியில் இடம்பெறும் லீக் ஆட்டத்தில் அல் இக்பால் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சண்சையின் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச் 13

நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் யாழ்ப்பாணம் வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம் பெறும் 3ஆம் சுற்று ஆட்டத்தில் கொற்றாவத்தை கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மகாத்மா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை .30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உட்றக்கல்வி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**வீடு / அறை வாடகைக்கு**

பல்கலைக்கழக / உத்தியோகம் பார்க்கும் ஆண்களுக்கு வீடு / அறை வாடகைக்கு உண்டு.
தொடர்புக்கு: 0774206553, 0777466589
(C/19887)(10)

**பணியாளர் தேவை**

★. வடமராட்சி, கிளிநொச்சி, யாழ் நகரில் விற்பனையாளர்கள் தேவை (40 வயதுக்கு மேற்பட்ட ஆண்...
★ A/L படித்த பெண் பணியாளர் தேவை.
★ பாடசாலைக்கு பிள்ளைகளை ஏற்றி இறக்க கூடிய பெண் தேவை.
(நல்லூர், யாழ்ப்பாணம்)
தொடர்புக்கு: 07721 74 751
(57770)(10)

**கட்டார் மற்றும் சவுதி ராஜ்யத்தில் சாரதி மற்றும் ஏனைய துறைகளில் உடனடி வேலைவாய்ப்பு**

| | |
|---|---|
| Qatar Al Jaber | |
| Heavy Vehicle Driver | 1300+200+OT |
| Light Vehicle Driver | 1100+200+OT |
| Saudi | |
| Baladiya Driver | 1200 |
| Baladiya Cleaner | 900 |
| Camco | |
| Driver (School) | 1200 |
| Qatar Egunox | |
| Office Boy | 900+300+OT |
| Helpers | 1000+OT |

தங்குமிடம் மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம். கைவசம் விசா உள்ளதால் இரண்டே வாரத்தில் பயணம்.
உடன் தொடர்புகொள்ள:
Lanka Voice - 0777929475
Capital Recruitment International (Pvt) Ltd.
No:-130 3/1, 3rd Floor, Grandpass Road, Colombo-14
LL No:- 2248
(C/19889)(10)

**போட்டிப்பரீட்சை விசேட கருத்தரங்குகள்**

★ வடமாகாண ஆசிரியர் தேர்வுக்கு
சனி 9.00 - 3.00 மணிவரை
★ முகாமைத்துவ உதவியாளர் வருமான வரிப்பரிசோதகர்
சனி, ஞாயிறு
10.00 - 2.00 மணிவரை
சகல பரீட்சைகளுக்குமான தவசேகரின் வழிகாட்டி நூல்களை வகுப்பிலும் பிரபல புத்தக நிலையங்களிலும் பெறலாம் 0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்சல் வங்கியருகில்)

**அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தடைப்பரீட்சை வழிகாட்டி கருத்தரங்கு**

துரித மீட்டல் மற்றும் வழிகாட்டல் வகுப்புக்கள் (சனி, ஞாயிறு)
ஆரம்பம் :14.03.2015 (சனி) 9.00AM-4.00PM
15.03.2015(ஞாயிறு) 9.00AM-4.00PM
இடம் :யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மண்டபம்
அனுபவமும் திறமையும் வாய்ந்த விரிவுரையாளர்கள்
அலுவலக முறைமை - N. கமலநாதன்
(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்)
கணக்கீட்டு முறைமை - T.சிவசேந்தில்நாதன்
(வலயக்கணக்காளர், இலங்கை கணக்காளர் சேவைதரம்-I)
கணினி - M.மகிம்சன்
(விரிவுரையாளர், மதிப்பீட்டாளர் TVEC)
குறிப்பு: கடந்த 4 வருட வினாத்தாள்கள் மற்றும் மாதிரி வினாத்தாள்களுடனான வழிகாட்டல்.
இடநெருக்கடியைத் தவிர்ப்பதற்கு பதிவுகளை முற்கூட்டியே மேற்கொள்ளவும்.
தொடர்புக்கு: 077 366 4328
(C/19886)(10)

**விசேட போட்டி பரீட்சை கருத்தரங்குகள்**

* வடமாகாண/மத்திய அரசின் முகாமைத்துவ உதவியாளர்
* வருமானவரி பரிசோதகர்
விரிவுரையாளர்
P. உமாசங்கர்
P. கமல்தாசன்
★ கடந்தகால எதிர்பார்க்கை வினாவிடைகள் முழுமையாக ஆராயப்படும்.
★ மத்திய அரசின் முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை ஏப்பிரல் 11 இல் நடைபெறும்
கருத்தரங்குகள் பிரதி சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை நடைபெறும்.
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P. 0774696695

STUDY MEDICINE IN BELARUS
BECOME A WORLD CLASS DOCTOR
ஐரோப்பாவில் மருத்துவப் பட்டப்படிப்பு



DOCTOR IN MEDICINE (MD)
Belarusian State MEDICAL university Minsk
- 6 Years Duration
- English Medium Education
- Very Affordable Course Fee
- Free Two Way Air Ticket
- Arrangements for Parents to Go With Students

Recognition: SLMC - Sri Lanka | GMC - UK | AMC - Australia | ECFMG - USA | WHO
Sadikin 077 769 2318
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
Corporate Office
32, Dharmarama Road, Colombo 06
Jaffna Campus
16, Point Pedro, Jaffna
T +94 (0) 11 250 1145
T +94 (0) 11 255 9255
E faizeen@bcas.lk
W www.bcas.lk
Colombo • Mt.Lavinia • Kandy • Kurunegala • Batticaloa • Ampara • Jaffna • Qatar

புதிய பிரிவுகள் ஆரம்பம் 28-03-2015



அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

வங்கியியல் கற்கைநெறிகள்
Banking courses
IABF & DABF
(Tamil & English Medium)
Qualification: GCE O/L 6 passes with 3 credits

கணக்காய்வாளர் கற்கைநெறிகள்
Chartered courses
Executive Level & Business level
(Tamil & English Medium)
Qualification: GCE A/L 3 passes

தொழிற்துறைக் கணக்காளர் கற்கைநெறிகள்
aat courses
AA1, AA2, AA3
(Tamil & English Medium)
Qualification: GCE O/L 6 passes

Further Details:
JAFFNA COLLEGE
Undergraduate Dept
464, Hospital Road, Jaffna.
Tp. 0212223382
0212229149


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.